Support Indian Industry

இந்திய கைத் தொழிலை

ஆதரியுங்கள்

V. S. & SONS,
SWEETS SUPERIOR
IN QUALITY

ST IN THE
ET

வி. எஸ். & சன்ஸ்
பப்பெர்மெண்ட்
களையே வாங்கி
உபயோகியுங்கள்.
மிகவும்
நேர்த்தியானது.
விலை குறைவு.
ஒரு முறை
பரீக்ஷித்தால்
உ மை விளங்கும்.

கர்ப்பாசய சம்பந்தமான சகலவிதமான நோய்களுக்கும்
நிச்சயமாக சிகிச்சை செய்யும் டானிக் எது?

கெர்பினுல்

(ரிஜிஸ்டர்ட்)

டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்டு, சிறந்ததாக
கருதப்பட்டு இருக்கிறது.

ஒருமுறை பரிசோதித்தால் திருப்தி அடைவீர்கள்.

எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும்
கிடைக்கும்.

விஜயா பார்மஸி,
கொச்சின்.

எந்தவிதமான
பல் வியாதியாலும் சரி
(கும்பகோ... ...ன் டாக்டர்

2320

செருகளத்தூர் திருநெல்வேலி

சாமா & பாப்பா

ACL-TWAL
03325

நடித்த

தமிழ்

வேதமெனப்படும்

"திருக்குறளை"

இயற்றிய

மகானின்

திவ்ய சரித்திரம்.

இப்பொழுது கீழ்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

ஆரணி—லக்ஷ்மி டாக்கீஸ்	....	2-வது வாரம்
தர்மபுரி—கணேஷ் டாக்கீஸ்	....	2-வது ,,
அரக்கோணம்—கணேஷ் டாக்கீஸ்	....	2-வது ,,
திருச்செங்கோடு—ஜெயா டாக்கீஸ்	....	9—8—41 முதல்
பேரளம்—சிவகுமார் டாக்கீஸ்	....	9—8—41 ,,
பட்டுக்கோட்டை—நீலா டாக்கீஸ்	....	11—8—41 ,,
சி...னமனூர்—ஸர்தார் டாக்கீஸ்	....	15—8—41 ,,
...ஸிசி டாக்கீஸ்	....	17—8—41 ,,
...ை டாக்கீஸ்	....	...41 ,,
...லை டாக்கீஸ்	....	... ,,

...டல்களை "ஓடியன்...

நியூ பஹரிஸ் ஹால்,

பெரிய தெரு, :: கும்பகோணம்.

எல்லோருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமான ஜவுளிக்கடை

நாகரீகமானதும், உத்தரவாதமுள்ளதுமான

எல்லாவித ஜவுளி தினுசுகளும் ஏருளமாய்

ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிறது.

விலை நயம்.

ஒரு முறை விஜயம் செய்தால் உண்மை விளங்கும்.

Proprietors:

C. பழனியப்ப முதலியார் & Bros.

எல்லா மருந்துகளும் எந்நேரமும் கிடைக்கும்.

விலை நயம்.

சுத்தமான முறையில் மருந்துகள் கலந்து கொடுக்கப்படும்.

நாணயமும் நம்பிக்கையும் ஒருங்கே பொருந்திய இடம்

மருந்... ...பகோணத்தில் சிற...

...ஸ்டோர்.

...ம் செய்து ப...

பொருள் அடக்கம்

விருஷ மலர் — ஆவணி இதழ்

மற்றுமோர் பத்திரிகையா ?	—	...	1
விஷய விளக்கம்	—	...	2
பிரிட்டனுக்கு ஓர் வேண்டுகோள்	—	...	5
குருதேவர் மறைவு	—	...	11
உணவும் ஓர் ஆயுதமே	—	...	12
லட்சிய வாழ்க்கை	—	R. விநாயகம் M.A., B.L.	17
சுட்ட குழாய்	—	மாரார்	21
அரசியல் அகராதி	—	M. ராமஸ்வாமி B.A., B.L.	24
கிராம சமுதாயம் – ஓர் பகற் கனவு	—	தென்னன்	26
ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸய்யங்காரும் ஸ்திரீகள் முன்னேற்றமும்	—	குகப்ரியை	28
சங்கீதத் துணுக்குகள்	—	V. முத்துஸாமி B.A.	30
கன்னூஞ்சல்	—	K. சுந்தரம்மாள்	31
நாட்டியக்கலை	—	எம். ஆர்.	38
நாட்டியப் படங்கள்	—	பானுமதி – ஸுலோசனா	39-41
சினிமாப் பட முன்னேற்றம்	—	A. R. ராஜகோபால செட்டியார்	42
விக்ஞானக் குறிப்புகள்	—	கண்ணன்	43
ஸ்திரீ நாகரிகப் பிரசாரம்	—	தர்மா ராமசுப்பன்	44
யுத்தமும் ரஸாயன மூலப்பொருள்களும்	—	பி. எஸ். ஸ்ரீகண்டன்	46
ஸங்கீத ஞானமு	—	T. V. கிருஷ்ணஸ்வாமி B.A.	47
சிறை (பள்ளி)க்கூடம்	—	R. கிருஷ்ணமூர்த்தி B.A., B.L.	49
மனமிரங்குங்கள்	—	எம். ஆர்.	52
பெஸிபிக் கொந்தளிப்பு	—	ராஜம்	53
கேட்டீர்களா, கதையை	—	...	56
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்	—	ராமய்யா	57
அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதை	—	...	59

குறிப்பு:— காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் க[illegible]
அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை [illegible]
அவைகளுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி

தென் இந்தியாவின்

உயர்ந்த

மாதப் பத்திரிகை

சந்தா விகிதம்.

	உள்நாடு	பர்மா	மலேயா
வருடச் சந்தா	ரூ. 3 0 0	4 0 0	5 0 0
6 மாதம்	ரூ. 2 0 0	2 4 0	2 12 0

தனிப்பிரதி

உள்நாடு ரூ. 0 4 0   சிலோன் 25 சதம்

தபால் மூலம் தனிப் பிரதி வேண்டுவோர் தபால் சிலவும் சேர்த்து அனுப்பவேண்டும்.

ஏஜன்ஸி நிபந்தனை, விளம்பர விகிதம் முதலிய விஷயங்களுக்கு கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

காவேரி ஆபீஸ்,
பெஸண்டு ரோடு,
கும்பகோணம்.

S. Rangaswami,
Managing Proprietor.

ANJARA PETTI   JUG FILTER   LAMP   TEMPLE BELL   BOILER

மேலானதும், அற்புத னதும், விலாசசமானதுமான பித்தளை, தாம்பரம், வெங்கல சாமான்கள் சில்லரையாகவும், மொத் மாகவும் தேவையானால் தென்னிந்தியாவில் மிக பிரசித்திபெற்றதும் நம்பிக்கையானதுமான டியில் கண்டவரிடம் நேரிலும் ஆர்டர் மூலமும் பெறலாம்.

. JAMBAKALAKSHMI AMMAL SONS,
BRASS MERCHANTS,
North : : **KUMBAKONAM.**

Proprietors { N. K. R. Narayanasamy Naidu.
N. K. R. Thiruvarangam Naidu.

விருஷ
மலர் 1

ஆவணி
இதழ் 1

"சென்றிடுவீர் எட்டு திக்கும்
கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்."
— பாரதியார்.

மற்றுமோர் பத்திரிகையா?

★

காகிதப்பஞ்சம். பொருளாதார நெருக்கடி. இருக்கும் பத்திரிகைகளெல்லாம் உருக்குலைந்து மெலியும் காலம். இப்பொழுதா மற்றுமோர் பத்திரிகை ஆரம்பிப்பது?

ஆம். நெருக்கடியில்தான் புதிய தோற்றங்கள் காணப்படும்; விஞ்ஞான ஆராய்ச்சிகள் அதி துரிதமாக செய்யப்படும்; மக்களின் மனோபாவத்திலும் வாழ்விலும் புரட்சி ஏற்படும். எங்கு பார்த்தாலும் இப்பொழுது யுத்த வெறி முழக்கம். மக்கள் நிம்மதியின்றி கிலிபிடித்தலைகிறார்கள். உலகப்போக்கை அறிய ஜனங்களனைவரும் மிக்க அவா கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளைக் காணாதவர்களெல்லாம் அவைகளை வாங்கிப் படிக்கிறார்கள். மக்களிடையே ஒரு எழுச்சி காணப்படுகிறது. அவர்கள் அறிவை வளர்க்க இதுதான் அரிய சந்தர்ப்பம். இச்சமயத்தில் ஒரு பத்திரிகை வேரூன்றவிட்டால் எப்பொழுதுதான் ஊன்றப்போகிறது?

அதுவும், தமிழ் மக்களிடையே **காவேரி** முன்வருவதற்கு ஏன் தயங்கவேண்டும்?

'காவேரி' என்ற சப்தம் தமிழ் மக்களுக்கு இசைந்தது. அப்பெயர் கொண்ட நதி அறிவு வளர்ச்சி, கலையுயர்வு, செழுமை இவைகளுக்கெல்லாம் பெயர்போனது. அவை அதன் பிறவிக் குணங்கள் என்றே சொல்லலாம். அப்பெயரை யணிந்திருக்கும் எங்கள் பத்திரிகையும் அக்குணங்கள் வாய்ந்ததாகவிருக்குமென மக்கள் எதிர்பார்க்கலாம். நாங்கள் அதையுணர்ந்து பெயருக்குத் தகுதியாக செயலுமிருக்கப் பாடுபடுகிறோம். மக்களின் ஆதரவுமிருக்குமாயின் காவேரி நதியின் செயலையொட்டி எதையும் பொன்னாக்கலாம்.

Acc. 9318

தமிழ் மக்கள் உலகப்போக்கையும், அதன் நூதன ஆராய்ச்சிகளையும், உட்கருத்துக்களையும் நன்குணரப் போதிய வசதியில்லையெனலாம். இச்சமயத்தில் அக்குறையை நீக்கவே **காவேரி** முன்வந்துள்ளது. தன்னாலியன்றமட்டும் விஷயங்களை விளக்கிக்காட்டி மக்களின் அறிவை வளர்த்து அவர்கள் முன்னேற்றத்தைத் தேடும்.

பாஷை வளர்ச்சியைக் கவனிப்பதுடன் விஷய விளக்கத்தையும் பிரதானமாகக்கொண்டு **காவேரி** நடத்தப்படும். வாழ்விற்கு அடிப்படையான பொருளாதாரம், அரசியல், சமூக அமைப்பு இவைகளின் சிக்கலான பிரச்னைகளை எளிய நடையில் எடுத்துரைக்க பிரபல அறிவாளிகள் இசைந்துள்ளார்கள்.

நமது கொள்கை ஒன்றே. அது தமிழ் மக்களின் நிலையை எவ்வகையிலுமுயர்த்துவதுதான். அதற்குச் சாதனமான எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து **காவேரி** மக்களுக்குச் சமர்ப்பிக்கும்.

எங்கள் அரசியல் கொள்கை என்னவென்று கேட்கவேண்டாம். அடிமை நாட்டினருக்கு ஒரே லக்ஷியம்தான்—பூரண ஸ்வராஜ்யம்.

பாகுபாடின்றி நமது இந்திய மக்களெல்லோரும் ஒன்றுபட்டு புகழுடன் வாழவேண்டுமென்பதே **காவேரி**யின் கருத்து.

இத்துறைகளில் ஈடுபட்டுழைக்க எங்களுக்கு ஊக்கமளித்துதவுமாறு தமிழ் மக்களை வேண்டுகிறோம்.

—0—

விஷய விளக்கம்

கூட்டுப் பிரகடனம்

இந்த யுத்தத்தின் லக்ஷியம் என்ன? அதன் இறுதியில் ஜனநாயக தேசங்கள் வெற்றி பெறுமேயாகில் உலகை எவ்வாறு திருத்தியமைக்கப் பாடுபடும்? தற்போது இழந்த நாடுகளின் சுதந்திரம் திரும்புமா? நீண்ட காலமாக அடிமை வாழ்வில் ஆழ்த்தப்பட்டு வதங்கும் நாடுகளுக்கு விமோசனம் உண்டா? இத்தகைய பிரச்னைகள் யுத்த ஆரம்ப முதலே விவாதிக்கப்பட்டு வந்தன.

‘புதிய அமைப்பு’ ஒன்றை உலகிற்கு அளிப்பதாக ஜர்மனி வாக்களித்தது. தான் ஜயித்த நாடுகளையெல்லாம் அவ்வமைப்பில் ஆழ்த்தியது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தங்கள் நோக்கம் என்ன என்பதை செவ்வனே அறிவிக்கவில்லை. இந்திய தேசிய காங்கிரஸ் யுத்த லக்ஷியத்தை அறிவிக்குமாறு வேண்டிற்று. அமெரிக்க மஹா ஜனங்களும் அதை அறிந்துகொள்ளாமல் தாம் எந்த உதவியும் அளிக்க முடியாதென்றார்கள். நேரடியான பதிலளிக்காமலேயே இனிமையான வார்த்தைகளினால் தங்கள் எண்ணத்தை பிரிட்டன் மறைத்து வந்தது.

இன்று நெருக்கடி முற்றிவிட்டது. ரஷ்யா யுத்தத்தில் சிக்கிக்கொண்டது. தூரக்கிழக்கிலும் பயங்கரமான நிலைமை. அமெரிக்காவின் பூர்ண உதவி வேண்டும். சர்ச்சில் துரை பிரஸிடெண்டு ரூஸ்வெல்டை ரகசியமாகக் கடலில் சந்தித்தார். இரு தேசத்தின் யுத்த சமாதான லக்ஷ்யங்களைப்பற்றி எட்டு அம்சங்கள் கொண்ட ஒரு கூட்டுப் பிரகடனத்தை வெளியிட்டிருக்கின்றனர். இவ்வறிக்கை, அதை வெளியிட்டோர்களின் வாக்கு சாதுர்யத்தைக் காட்டுகிறதே யொழிய மனப்பான்மையில்

மாறுதலையோ கிரியாம்சத்தில் புது முறையையோ விளக்குவதாக இல்லை.

பிரிட்டனுக்கோ அமெரிக்காவுக்கோ புதிதாக நாடு பிடிக்க விருப்பமில்லையாம். இதைப் பற்றி யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் ஏற்கனவே அடிமைப்படுத்தி ஒடுக்கப்பட்டிருக்கும் நாடுகளின் கதி என்ன? மக்களுடைய சம்மதமின்றி எவ்வித பிரதேச மாறுதல்களும் செய்யக்கூடாதாம். இது காரியத்தில் நடைபெறுவது சந்தேகம். அந்தந்த தேச மக்கள் தங்கள் தேசத்தின் அமைப்பை அவரவர்களே யோசித்து அமைத்துக் கொள்ள பூர்ண உரிமையுண்டாம். பலவந்தத்தினால் சுயாட்சியை இழந்த மக்களுக்கு அவ்வுரிமை மீட்கப்படுமாம். இந்த ஷரத்து கவனிக்கத்தக்கது. இந்தியர்கள் இவ்வுரிமைகளைத்தான் பிரிட்டனிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். இவை அளிக்கப்படுமா? அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்படவில்லை. ஆனால் பிரிட்டிஷ் டிபுடி பிரதம மந்திரி ஆட்லி இவ்வுரிமைகள் ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களிலுள்ளவர்களுக்கும் அளிக்கப்படும் என்று உறுதி கூறுகிறார். அது கொஞ்சம் இந்திய மக்களுக்கு ஆறுதல் அளித்தாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கமும் அதுதானா என்ற சந்தேகம் தீரவில்லை.

பொது மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக சர்வ தேசங்களின் ஒத்துழைப்பினால் வறுமையையும் பயத்தையும் ஒழித்து, தேவைகளுக்கான மூலப்பொருள்களில் எல்லா நாடுகளுக்கும் சமவசதிகள் அளிக்கப்படுமாம். ஆனால் இவ்வசதிகள் இப்பொழுதுள்ள பொறுப்புகளுக்குக் குந்தகமில்லாத முறையில் தான் அளிக்கப்படுமாம். இதனால் மூலப்பொருள்கள் உற்பத்தி செய்யும் நாடுகள் எந்நாளும் முன்னேற முடியாத ஸ்திதியில் ஆழ்த்தப்படும். ஆகவே இவ்வறிக்கையின் நோக்கம் ஒரு புதிய உலகத்தை சிருஷ்டிப்பதாக இல்லை. இருக்கும் ஏகாதிபத்தியத்தை அழியாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய உபாயங்களையே தேடிக்கொள்வதாக இருக்கிறது. ஏற்கெனவே சுதந்திரமாயிருந்து சமீபத்தில் பலாத்காரத்தினால் இழந்த சிறிய நாடுகளுக்கு சுதந்திரத்தை மீட்பதில் மட்டில் கவலை காட்டப்படுகிறது. இது யுத்த லக்ஷ்யமேயன்றி சமாதான லக்ஷ்யமல்ல. சென்ற யுத்தத்தின் முடிவில் நடந்ததே மறுபடியும் நடக்கப் போகிறது போலும்! அதிக்கிரமம் செய்யும் நாடுகளை ஆயுத பரிஹாரணம் செய்யப்போகிறார்களாம். அதைச் செவ்வனே செய்து முடிக்க அமெரிக்காவும் உதவி யளிக்குமாம். அவ்வளவு தான்.

இந்திய தேசிய காங்கிரஸ் பிரிட்டனைக் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் வரவில்லை இந்த யுத்தத்தில் இந்தியாவுக்கு என்ன சம்பந்தம்? யுத்தத்துக்கு பின் ஏற்படப்போகும் சமாதானத்திலும், சமாதானத்தை நிறுவுவதிலும் இந்தியாவின் பங்கு எத்தகையது? இவ் விஷயத்தை இக்கூட்டுப் பிரகடனம் சற்றும் தெளிவு படுத்தவில்லை. இக்கூட்டு பிரகடனம் காட்டுவது என்னவென்றால் யுத்தத்தில் வெற்றி பெறும் நாடுகள் அவர்கள் ஏற்கனவே பெற்றிருக்கும் சலுகைகளையும் உரிமைகளையும் விட்டுக்கொடுக்கப் போகிறதில்லை என்பதே. இதுவா சுதந்திர சாஸனம்? தார்மீக நீதியையும் ஆத்ம தத்துவத்தையும் உலக அரசியல் அரங்கத்தில் அடிப்படையாக அமைக்க இதுவா ஏற்ற முறை? இல்லை. இப்பிரகடனத்தினால் இவைகள் வெளியாகவில்லை. வெளியாவது என்னவென்றால், அமெரிக்காவும் இந்த யுத்தத்தில் இறங்கிவிடலாமென்பதுதான். யுத்தத்தில் வெற்றிபெற வேண்டுமென்ற சங்கல்பம் வெளியாகலாம். பிரிட்டன் இன்னும் கடல் பலத்தில் இணையற்றதாகவே இருக்கிறது என்பது வெளியாகலாம். சுதந்திரத்துக்காகப் போர் என்பது மட்டில் வெளியாகவில்லை.

அமெரி விலகட்டும்

ஆகஸ்டு முதல்தேதி பார்லிமெண்டில் இந்தியா விவாதம் நடந்தது. வழக்கமாக பாடும் பல்லவிகளுடன் புதிதாக ஒன்றும் சேர்த்துக் கொண்டார் இந்தியா மந்திரியான ஸ்ரீ அமெரி. இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்தைப் பெறுமலிருப்பதற்கு காரணம் பிரிட்டிஷ் எதிர்ப்பல்ல, இந்தியாவின் ஒற்றுமைக் குறைவே என்று கூறிவந்தார் இதுகாறும். எத்தகைய ஒற்றுமையை எதிர்பார்க்கிறார் என்பதை இப்பொழுது விளக்கிவிட்டார். இந்தியாவிலுள்ள பிரதான கட்சியினர்மட்டில் ஒன்றுபட்டால் போதாதாம்; இந்தியாவிலுள்ள தேசிய இயக்கங்கள், ஸமூகச் சங்கங்கள், மதச் சபைகள், பூகோள உருப்புகள்,

நிர்வாகப் பிரிவுகள், பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள், மாகாண ஆட்சியை நடத்திவரும் மாகாணங்கள் சுதேச சமஸ்தானங்கள், மற்றைய "மைனரிட்டிகள்" யாவும் ஒன்று சேரவேண்டுமாம் சுயராஜ்யம் பெறப் பூர்வாங்கமாக. மற்றைய மைனரிடிகள் யாவை என்பதை சமயோஜிதம்போல் விளக்கிக்கொண்டு போவார்போலும்.

இவைகள் இவ்வளவும் ஒன்றுசேர்வதற்குத் தடையாக நிற்பது யார்? இத்தகைய பேச்சுகள்தான். ஒத்துவரக்கூடிய வகுப்புகளை தட்டிவிட்டு முரட்டுத்தனம் செய்யத் தூண்டுவது இம்மாதிரியான கூற்றுகளே யாகும். "வருங்கால" இந்திய அரசியல் அமைப்பைத் தீர்மானம் செய்துவிடவில்லை என்று கூறி ஜனாப் ஜின்னாவைத் தேற்றுகிறார். "ஹாலண்டு, பெல்ஜியம் இவைகளைப்போன்ற ஒரு உருவான தேசம்தான் இந்தியா என்று சொல்வதற்கில்லையே" என்று விசனிப்பது முஸ்லீம் லீக்கை திருப்தி செய்வதாக ஆகலாம். ஆனால் 150 வருஷங்களாக பிரிட்டிஷ் அரசாட்சியின் அஸ்திவாரமாக ஆதரிக்கப்பட்டுவந்த இந்திய ஒற்றுமையை புறக்கணிப்பது அரசியல் அறிவாகுமா?

அரசியலபிவிருத்தியைக் குறித்து வைஸ்ராய் நிர்வாகசபை அங்கத்தினர்களை பெருக்கவில்லை; மனப்பான்மை மாறுதலைக் காட்டவே செய்யப்பட்டது என்று கூறுகிறார். மனப்பான்மை மாற இதுவா வழி? லீக் அங்கத்தினர்களை தேசியப் பாதுகாப்பு கவுன்சில்களில் சேர்த்துக்கொள்வதாலும், காங்கிரஸிலிருந்து விலகியவர்களை உண்மை காங்கிரஸ் தொண்டர்கள் என்று பாராட்டுவதாலுமா மனப்பான்மை மாறுதல் தெரியவருகிறது? இது ராஜ தந்திரமாக ஸ்ரீ அமெரி கருதலாம். அவர் அரசியல் ஞானசூனியர் என்கிற உணர்ச்சிதான் இந்திய மக்களிடம் பரவுகிறது.

யுத்தத்தில் இந்தியா மனப்பூர்வமாக உதவி செய்யவேண்டுமென்பதற்காகவே இவ்வளவு ஏற்பாடுகளும். ஆயினும் பொது மக்களிடையே இச்சீர்திருத்தத்தால் ஒருவித பரபரப்பும் ஏற்படவில்லை. நிர்வாகசபை விஸ்தரிப்பினால் திருப்தியடைந்ததாக ஒருவரும் காணப்படவில்லை. காங்கிரஸ் கோரிய தேசிய சர்க்காரை மத்திய சபையில் நிறுவவில்லை. ஸ்ரீ சப்ரு மன்றாடிக்கேட்ட பொறுப்பாட்சியை அளிக்கவில்லை. அளிக்கப்பட்டிருப்பது என்னவென்றால், வைஸ்ராயின் நிர்வாக சபையில் அதிகப்படி நான்கு இந்தியர்கள் இதுகாறும் கையெழுத்துச் செய்துவந்த கடிதங்கள்களில் இனி 8 இந்தியர்கள் கையெழுத்து செய்வார்கள். இதுதானா ஜனநாயகம்? இதற்காகவா இந்திய மக்கள் ஐரோப்பிய யுத்தத்தில் பங்கு எடுத்துக்கொள்ள போட்டிபோடப் போகிறார்கள்? பொது மக்களின் உற்சாகத்தை தூண்ட வேண்டுமாயின் வரவு செலவு பொறுப்பையும் இந்திய தற்காப்புப் பொறுப்பையும் இந்திய அங்கத்தினர்களிடம் ஒப்புவித்தே ஆகவேண்டும். யுத்தம் முடிந்த ஒரு கால அவதிக்குள் இந்தியா சுயராஜ்யத்தை அடையும் என்ற வாக்குறுதி இன்றே கொடுத்தாகவேண்டும். சுதந்திரத்தின் ஆயுதக்கிடங்கு இந்தியாதான் என்ற டைம்ஸ் கூற்று உண்மையானால் இந்தியாவில் தொழில் அபிவிருத்திசெய்ய தயங்குவதேன்? இந்தியாவில் விமான சாலைகளுக்கும் கப்பல் கட்டுவதற்கும் வசதிகளை அளிக்க வேண்டும். ஜனங்களிடம் புதுமுறை அனுஷ்டிக்கப்படுகிறதற்கு அறிகுறியாக சிறை சென்ற தேச பக்தர்களை விடுதலை செய்ய வேண்டும். அவை யாதும் செய்யாமல் முட்டுக்கட்டைகளையும் இடைஞ்சல்களையுமே பெரிதும் செய்துகொண்டு நிற்கும் இந்த அமெரியை மந்திரியாக வைத்துக்கொண்டா ஸ்ரீ சர்ச்சில் கிழக்கு முனை யுத்தத்தை வெல்லத் துணிந்துள்ளார்?

இந்தியா-பர்மா குடியேற்ற ஒப்பந்தம்

"வளர்த்த கடா மாரில் பாய்கிறது." என்று ஒரு வசனம். அது உண்மையாகிவிடும் போல் இருக்கிறது பர்மா விஷயத்தில். பாக்ஸ்டர் ரிபோர்ட்டிலிருந்தே இந்திய மக்களால் பர்மா பெற்றிருக்கும் அனுகூலங்கள் நன்கு விளங்கும். அப்படியிருந்தும் பழைய விஷயங்களை முற்றிலும் மறந்து தன் நலத்தை மட்டில் தேடத் தலைப்பட்டது பர்மா. அது தவறு என்று நாம்சொல்லவில்லை. ஆயினும் இந்திய சொத்துரிமைகளுக்கு விரோதமின்றியும் சீர் செய்துகொள்ளக் கூடிய நிலைமைதான் இன்னும் இருந்து வருகிறது என்று குறிப்பிட விரும்புகிறோம். பர்மா அரசியல் சட்டம் பிரேரிக்கப்படு முன்பே இவ்விஷயங்கள் வட்ட மேஜை மகா நாட்டில் விவாதிக்கப்பட்டன.

9-ம் பக்கம் பார்க்க.

பிரிட்டனுக்கு ஓர் வேண்டுகோள்

சென்ற பல வருஷங்களாக இந்தியாவின் பெரிய நண்பராக இருந்துவரும் எட்வர்டு தாம்ஸன் *பின்வருமாறு* நியூ ஸ்டேட்ஸ்மன் அண்ட் நேஷன் *பத்திரிகைக்கு எழுதுகிறார்*

—— (o) ——

“விஷயத்தை மறைமுகமாகக் கூறாமல், பச்சையாக வெட்டவெளிச்சமாக நான் கூறுவதாகத் தோன்றினால் அதற்குக் காரணம் நிகழ்ச்சிகள் புயற் காற்று போல விரைந்து செல்கின்றன என்பதே. இந்த வேளையில் மனங்கலங்கி நமது பெரும் நோக்கத்தை நாமே மறந்துவிடக்கூடாது. நம் கவர்ன்மெண்டால் பக்கிஸ்தான் திட்டம் முடிவாக நிராகரிக்கப்பட்டு விட்டது. அது வரையில் நல்லதுதான். இந்தியாவுக்கு ‘டொமினியன்’ (குடியேற்ற நாடு) அந்தஸ்து அளிப்பதற்கு ஒரு தேதி குறிப்பிடவேண்டிய பிரச்னையும், பாதுகாப்பு அதிகாரத்தையும், வரவு செலவு அதிகாரத்தையும் உண்மையான பிரதிநிதித்துவம் பெற்ற தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய பிரச்னையும் தீராமல் நீடித்து வருகின்றன. இந்தப் பிரச்னைகளைச் சரிவரத் தீர்த்து விடுவோமானால், பின், காங்கிரஸ் நமக்கு முழு மனதுடன் உதவிபுரிய இசையுமா? சொல்ல முடியாது. அவர்களுடைய நீடித்த கோபம் தணியாமலிருப்பதற்குப் பல சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. ஆயினும் ஆங்கிலேயர்களை நம்புவது தர்மமும் நியாயமும் ஆகுமென்றும், காங்கிரஸ் நம் மகா ஜனங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் இவ்விரண்டு விஷயங்களைப் பல முகாந்திரங்களுடன் தெளிவாக எடுத்துக் காட்டி, நாம் நம் தேசத்துக்காகப் பரிந்து பேசினால் இப்போதுகூட காங்கிரஸ் நமக்குச் சாதகமாக மாறி நம்முடன் ஒத்துழைக்குமென்று நான் நம்புகிறேன்.

முற்கூறிய இருவித முயற்சியும் இல்லாமல், தான் இந்திய ஜனங்களின் பிரதிநிதி என்று எவனும் காங்கிரஸ், முஸ்லீம் லீக், மிதவாதக் கட்சி, இவைகளில் எதன் அங்கத்தினராயினும் சரி,—முன்வந்து வைசிராயின் நிர்வாக சபையில் பிரதிநிதித்துவ முறையில் உத்தியோகத்தை ஏற்கத் துணியமாட்டான். உத்தியோகம் ஏற்க முன்வருபவர்கள் அவர்களுக்கேயன்றி மற்ற எவருக்கும் பிரதிநிதிகளாக மாட்டார்கள். இது எனக்கு மிகவும் தெளிவாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் ஜனங்களும் இதை உணர்ந்து கொள்ளவேண்டும். இந்தியாவைப் பொறுத்த வரையில் இந்த யுத்தம் எப்படி ஆரம்பித்ததோ அப்படியே முடியும். அதாவது நமக்கும் இந்தியர்களுக்குமுள்ள மனஸ்தாபம் முன்னிலும் ஆழ்ந்த பிளவாகுமேயன்றி வேறு பயன் அளிக்காது.

‘டொமினியன்’கள் என்ற சங்கப் பலகையில் இந்தியாவுக்கு இடமில்லை. சங்கம் கூடுமிடத்தில் தரையில் ஒரு மூலையில் வேலைக்காரன் மாதிரி கைகட்டி வாய்புதைத்து இருக்கும் உரிமைதான் பெற்றிருக்கிறது. அயர்லாந்தை சங்கப் பலகை ஸ்தானத்திற்கு நாம் விரும்பி அழைத்தோம்—மறுத்தது. ஆனால் அந்தப் பதவியை மிகவும் விரும்பிக் கேட்கும் இந்தியாவுக்கு நாம் மறுக்கிறோம். நம்முடைய வெற்றி, நம்மை மட்டுமன்று, மானிட சமூகம் முழுவதையும் காப்பாற்றும் என்கிற நாம், புவியின் எல்லாப் பாகங்களிலுமுள்ள வீரம் பொலிந்த ஆடவர் பெண்டிர் எல்லோருடைய உண்மையான நட்பையும் நாடவேண்டுமன்றோ? அப்படிச் செய்யாவிட்டால் நாம் நம் பெயருக்கும் புகழுக்கும் காரிய லக்ஷியத்திற்கும் தீராத பழியை இழைத்தவர்களாவோம்.

நாற்பது வருஷங்களுக்கு முன்னர் நம் எதிரியாக நம்மிடம் யுத்தம் புரிந்த ஜெனரல் ஸ்மட்ஸ் இப்போது நமக்கு சில தேறுதல் வார்த்தைகளை சென்ற வாரம் சொல்லியிருக்கிறார். இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் ஜவாஹர்லால் நேருவும் என்னிடத்தில் அதே கருத்தைத்தான் கீழ்க்கண்டவாறு வெளியிட்டார். “சில காங்கிரஸ்காரர்கள் உங்களிடம் கூறலாம் ஆங்கிலேயர் வெற்றி பெறவேண்டுமென்று நாங்கள்

உற்சாகம் கொள்ள முடியாது என்று. 'நான் கூறுவதென்னவெனின் அவர்கள் சொல்வது தவறு; எனக்கு நன்றாகத் தெரியும். இந்தியா சகாயம் செய்வதைப் பற்றி என்னால் வாக்களிக்க முடியும்.'' இவ்வாறு பேசிய வீரர் இப்போது சிறைப்பட்டிருக்கிறார். அவர் கடிதங்கள் எழுத முடியாது. தம் சொந்தக் குடும்பத்தினரை மட்டும் பார்க்க வாரத்திற்கு ஒரு முறை அனுமதி கிடைக்கின்றது. இங்கிலாந்தில் பதினேழாம் நூற்றாண்டில் ஸர் வால்டர் ராலேயை முதலாவது ஜேம்ஸ் அரசர் சிறை செய்த போது அவருடைய புதல்வர் ''என் தந்தையைத் தவிர வேறு ஒருவரும் இப்படிப்பட்ட பறவையை கூண்டில் அடைக்க விரும்பமாட்டார்கள்'' என்றார். அது இங்கு பொருந்தும். ''யுத்தமே அதர்மம், எக்காலத்திலும் சரி, எதற்காயினும் சரி,'' என்ற அஹிம்ஸா வாதம் பேசியதாக ''பெரிய'' குற்றம் சாட்டி நான்கு வருஷங்கள் நேருவை சிறையில் அடைத்தனர். அவருக்குத் தண்டனை விதித்ததின் உண்மைக் காரணம் வேறு; அது இங்கிலாந்தில் ஒரு வேளை தெரியாமலிருக்கலாம். ஆனால் மற்றிடங்களில் தெரிந்த செய்தியே. அவர் தமது வழக்கின் விசாரணையின் போது கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலம் இந்நாட்டார் வாசித்துத் தெரிந்து கொள்ளாதவாறு தடை செய்யப்பட்டிருக்கிறது. இந்தியர்களனைவரும் அந்த அறிக்கையைப் படித்தனர். நமது சந்ததிகளும் அதைப் படிப்பார்கள். ஐயா, பத்திராதிபரே! நீர் அதை வெளியிடக் கூடாதா? நம் ஜனங்கள் பெயரால் நடத்தும் இந்திய அரசாங்கத்தின் காரியங்களை நாங்கள் உணரவேண்டாமா?

நான் வாதப் பிரதிவாதங்களை விரும்பவில்லை. என் மனதில் பட்ட ஒன்றை ஒளிவு மறைவின்றிக் கூறியிருக்கிறேன். அது உண்மையா இல்லையா என்பதை விரைவில் ஆராய்ந்தறிவது சுலபம். இது உண்மையானால் ''காங்கிரஸும் முஸ்லீம் லீகும் சமரசம் செய்து கொள்ளட்டும்; அவர்களுடைய வேற்றுமைகளே அரசியல் சீர் திருத்தத்தை நிறுத்தி வைத்திருக்கிறது'' என்ற பழங் கதையை ஒப்பிப்பதை இந்தியா ஆபீஸ் நிறுத்த வேண்டாமா? இந்தியாவில் பெருமிதமான ஜனங்கள், நம் கக்ஷியைச் சேர்ந்தவர்கள். நம்மை அவர்கள் ஆதரிக்குமாறு நாம் நடந்து கொண்டிருக்கிறோமா?''

நியூ ஸ்டேட்ஸ்மனின் குறிப்பு.

நெருக்கடி முற்றிவிட்டதெனக் காண்கிறது. பிரிட்டன் இழைத்த பலதவறுதல்களுள் மிகவும் மோசமான, பரிதாபகரமான தவறுதல், யுத்த ஆரம்பத்தில் காங்கிரஸ் அளித்த வாக்குத்தத்தத்தை 'தூ' என்று உதறித் தள்ளியதுதான். சென்ற யுத்தத்தில் அயர்லாந்தைக் கசக்கியதின் பலனாக பிரிட்டனுக்குச் சனியன் பிடித்தது; அதற்காவது, அயர்லாந்தின் தீவிரக் கட்சியார் பிரிட்டனுக்காகப் போர் புரிய விரும்பவில்லையென்ற சாக்குப் போக்குச் சொல்லலாம். அதைவிட மிகவும் பிரமாதமான அபாயகரமான இந்திய நெருக்கடியில் அந்தச் சாக்குப் போக்குக்கு இடமில்லை. ஏனெனில், காங்கிரஸ் முதலிலிருந்து ஜெர்மனியின் பாஸிஸ்ட்டு முறையைக் கண்டித்து வருகிறது. இக்காலத்தில் ஆயுதங்களில்லாமல் சுதந்திர அரசு இல்லை என்ற தத்துவத்தையும் உணருகின்றது. பிரிட்டிஷார் பக்கம் சேருவதற்கும் இணங்கியது. ஒரு வேளை, இந்தியாவை ஆளுகிற பிரிட்டிஷார் தேச மக்களின் அபிப்பிராயம் மதிப்புக்கு ஏற்றதல்ல என்று எண்ணுகின்றனர் போலும். ''அற்ப சொற்ப பட்டாளங்களையும் அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு நாம் காரியத்தைச் சாமர்த்தியமாகச் சமாளித்திருக்கிறோமா இல்லையா? யுத்தம் செய்வது என்ன என்று அறியாத ஜனங்கள் நிறைந்த இந்தியா நம்முடன் விரோதித்துக் கொண்டு விட்டால் என்ன பெரும் மோசமா?'' என்று எண்ணி பிரிட்டிஷார் இந்தியாவைத் துச்சமாகத் தள்ளுவது இயல்பே. துரைத்தனத்தை நடத்துவதற்குத் தேவையான உத்தியோகஸ்தர்களை விலை கொடுத்து வாங்குவதில் சிரமமில்லை. தரித்திரம் மிகுந்த தேசத்தில் தளவாடங்கள் செய்யும் ஆலைகளுக்குத் தேவையான தொழிலாளிகளைத் தேடிப்பிடிப்பதும் கஷ்டமில்லை. எஜமானர்களாகிய நாம் சாமான்களை வாங்கத் தயாராயிருக்கும்போது, இந்திய முதலாளிகள் தம் மூல தனத்தைப் போட்டு இராக்ஷச இயந்திர ஆலைகளை அமைத்து பெருமிதமாக நமக்குப் பொருள்களை உற்பத்தி செய்துகொடுக்கக் காத்திருக்கிறார்கள். குறுகிய திருஷ்டியே இவ்வித மனோராஜ்யங்களுக்குக் காரணம். முஸ்லிம்களின் சிநேகத்தை மட்டும் எப்போதும் நாடும் ராஜ

தந்திரம் நம்மைப் படுகுழியில் தள்ளியிருக்கிறது. 'சமீபக் கிழக்கு' பிராந்தியத்தில் அது வெளியாகவில்லையா? ஹிட்லருடைய பிரசாரமானது அத்தேச ஜனங்களை அவர் மூலம் இன்னும் மகத்தான சலுகைகளைப் பெறலாம் என்று நம்பச்செய்கிறது. இச்சமயத்தில் ஜெர்மன் பிரசாரம் இந்தியாவிலும் 'சமீபக் கிழக்கு' நாடுகளிலும் வெகு சுறுசுறுப்பாக நடந்து வருகிறது. ஜெர்மன் பிரசாரம் பிரிட்டிஷார் ஆட்சியில் தேச மக்களடைந்த சில உண்மையான நன்மைகளை முற்றிலும் மறைத்து, நூற்றைம்பது வருஷத்திய பிரிட்டிஷ் ஆட்சியின் அலங்கோலத்தை மட்டும் கூறுகிறது. "தேசம் தரித்திரத்தில் மூழ்கியிருக்கிறது; நூற்றுக்கு 92 பேர் வீதம் எழுத்து வாசனை கூட இல்லாதவர்கள்; அத்தேசம் பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தின் மூலதனத்திற்கு வட்டியும் லாபமும் அளிக்கும் பூமியே தவிர வேறில்லை; பிரிட்டன் இந்தியாவிலிருந்து இன்னும் வருஷா வருஷம் 500 லக்ஷம் பவுன் வட்டியாகப் பெறுகின்றது. பிரிட்டிஷ் மக்கள் இந்தியாவில் பல ஆண்டுகள் அதிகாரம் செலுத்தி பணம் சேர்த்துக் கொழுத்தபின், இந்திய ராஜாங்கத்திலிருந்தே ஆயுளுள்ள அளவும் விடுதிச் சம்பளத்தைப் பெறும் உரிமையைக் கொண்டு வீடு திரும்புகின்றனர். இந்தியா இவர்கள் எல்லோரும் சுக வாழ்வு வாழ இடமளிக்கும் அடிமை நாடாகவே மதிக்கப்படுகின்றது." இவ்வாறு கூறும் ஜெர்மன் பிரசாரம், இதற்கு எதிரிடையாகவுள்ள செய்திகளை, 1909ம் ஆண்டு முதல் பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் சுய ஆட்சியைக் கொடுக்க முயன்றதையும் மற்றவிஷயங்களையும் கூறுமா? அவர்களுக்குத் தேவையில்லை. இந்தியத் தலைவர்கள் சிறையில் இருந்துவரும் இத்தருணத்தில், தங்கள் சம்மதமின்றி தங்களுக்கு அக்கரையில்லாத யுத்தமொன்றில் நாம் இழுக்கப்பட்டிருக்கிறோம் என்று மனம் நொந்திருக்கும் இத்தருணத்தில், ஜெர்மன் ரேடியோவில் கூறுமல் விடப்படும் விஷயங்கள் தான் முக்கியம் என்று எவ்வாறு உணருவார்கள்?

இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதற்காகப் பேச்சு வார்த்தைகள் நடக்கும் போதெல்லாம் நமக்கு ஒரு உபதேசம் கிடைக்கிறது. இப்பிரச்னை தீர்க்க முடியாத சிக்கல், இந்தியாவிலிருக்கும் இராஜப் பிரதிநிதியே பார்த்து முடிக்கவேண்டிய விஷயம் அது. ஆனல் இன்று பிரச்னை மிகவும் நேர்மையாகிவிட்டது. சுருக்கமாக, அது மரணவஸ்தையிலிருக்கும் சாம்ராஜ்யத்திற்கும், சுயேச்சைப்படி, தம் தேசத்தைத் தாமே எப்படியாவது தட்டுத்தடுமாறியோ அல்லது வேறு விதத்திலோ அரசு புரியும் உரிமை வேண்டுமென்ற தேசிய உணர்ச்சிக்குமுள்ள போராட்டம். இதைவிடக் கொடுமையான ஏகாதிபத்திய முறையின் வாய்க்குத் தாங்கள் இரையாகக் கூடும் என்பதைக் கூட இந்தியர்கள் இப்பொழுது உணரமுடியாமல் போய்விடுகிறது. நிமிஷங்கள் வெகு விரைவில் போய்விடும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இந்தியாவுக்கு டொமினியன் ஸ்தானத்தை அளிக்க ஒரு கால வரையறை செய்து, அரசின் பொறி நிலைகளாகிய வரவு சிலவு அதிகாரம், பாதுகாப்பு அதிகாரம் இரண்டையும் பிரதிநிதித்துவம் வாய்ந்த இந்தியர்களிடம் இந்த க்ஷணமே ஒப்புவித்தால், இந்தியா ஒப்புக்கொள்ளுமா? இந்தியப் பிரச்னைகளைப்பற்றி ஆழ்ந்த அறிவுடன்எழுதும் ஸ்ரீ தாம்ஸன் கூறும் யோசனை ஆதரிக்கத் தக்கது. அதிகமான கால தாமதம் ஏற்பட்டு விட்ட போதிலும், மிகவும் குறைவான மிஸ்டர் தாம்ஸனுல் குறிப்பிடும் மாறுதல்களை பிரிட்டிஷார் அங்கீகரித்தால் பிரதிநிதித்துவமுடைய சில இந்தியர்கள் வைசிராயின் நிர்வாக சபையில் ஸ்தானம் வகிக்க ஒப்புக்கொள்ளலாம். இத்தகைய சமரசத்திற்குக் காலம் இன்னும் தவறிவிடவில்லை எனலாம்.

ஆனல் கிரமத்திற்கு அதிகமாகவே கால தாமதம் ஏற்பட்டு விட்டது. சற்றுமுன் ஆவலுடன் ஒப்புக்கொள்ளக் கூடியதை 'நம்மை அவமானம் செய்தார்களே' என்ற உணர்ச்சி மிகுதியாயிருக்கும் இச்சமயத்தில் இந்தியர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். காலம் மீறிப் போய்விட்டது. அமெரி துரை, இந்த வழியில் பிரயோஜனமில்லை என்று நினைத்து வேறு விதமான பிரேரணைகளைக் கொண்டு வருகிருர். அவையும் தம் வரம்பினுள் புத்திசாலித்தனமானவை. வகுப்பு வாரி வாக்குரிமையை நீக்கி தொழில்வாரி வாக்குரிமையை நிறுவ எண்ணுகிருர். அது இந்தியர்களுக்கு இப்போது பிரமாதமாகத் தோன்றும் வகுப்பு பேதங்களை நீக்கி அவரைப் பொருளாதாரப் பிரச்னைகளைச் சிந்திக்கச் செய்யும் என்பது உண்மையே. சமஷ்டி ஏற்பாடு காங்கிரஸுக்கு அபரிமிதமான அதிகாரத்தை அளிக்கிறது.

சிறுபான்மையோரை அழுத்துகிறது, என்ற காரணத்திற்காக முஸ்லிம்கள் சமஷ்டியை ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்றால், அப்படியே சமஷ்டி திட்டத்தை மாற்றி விடுகிறது என்கிறார் மிஸ்டர் அமெரி. 'மத்திய அரசுக்கு குறைந்த அதிகாரங்களையும், மாகாணங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்களையும் அளிப்போமே; அப்போது சிறுபான்மையினருக்கு மாகாண ஆட்சியில் செல்வாக்கு அதிகரிக்கலாம். முஸ்லிம் லீகும் காங்கிரஸும்கூட இதை விரும்பலாம்' என்கிறார்.

ஆனால் யுத்த காலத்தில் பிரிட்டிஷார் இந்தியாவை மூச்சற்ற யுத்த தளவாட அரங்கமாக உபயோகிப்பதற்கு இவ்விதம் பேசப்படுகிறது என்றால், அவற்றினால் ஒரு பிரயோஜனமுமில்லை. ஜனநாயக அரசை நிலைக்கச்செய்யவே என்று கூறப்படும் இந்த யுத்தத்தில் 'எங்களுக்கு உதவி செய்யவேண்டும்' என்று சம அந்தஸ்துடைய தேசத்தினிடம் பணிவுடன் கேட்பதற்குப் பதிலாக, பிரிட்டிஷார், மிஸ்டர் தாம்ஸன் கூறுகிறபடி, இந்தியாவைக் கீழே ஒரு மூலையில் உட்கார்த்தி வைத்து வாய் பொத்தியிருக்கச் செய்து, தேச மன்னர்களிடமிருந்து வேண்டிய பணத்தையும், வறுமைப் பிணியில் வருந்தும் மக்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான யுத்த வீரர்களையும், ஆலைகளை நடத்தும் முதலாளிகளிடமிருந்து வேண்டிய தளவாடங்களையும் பெற்று காலத்தைக் கடத்தி விடலாமென்று எண்ணுகிறார்கள். பிரிட்டன் உதவிக்குத் தவித்துத் திண்டாடும் இன்றைய நிலையில் அதற்கு இந்தியருடைய உதவிக்குப் பதிலாக ஒத்துழையாமையே கிடைக்கிறதென்றால் அதற்குக் காரணம் என்னவாயிருக்க வேண்டும்? முதலாளித்துவத்தினால் சீர்கெட்ட ஜனநாயக முறைக்கும் பச்சையான சர்வாதிகார முறைக்கும் வித்தியாசமில்லை என்றல்லவா ஏற்படுகிறது. தற்கால யுத்தம் முற்கூறிய இரண்டு முரணான தத்துவங்களுக்கு இருக்கும் போராட்டம் என்று கூறினால் உலகப் பொது மக்கள் நம்பமாட்டார்களே. அவர்கள் நமக்கிதில் என்ன சம்பந்தம் என்று நினைப்பதில் என்ன தடை? பிரிட்டிஷ் கொடியின் கீழ் பல காலமாக வாழ்ந்துவந்த மனிதர்கள்கூட, தம்மை ஆள்பவருடைய பேச்சு வெறும் வாய்ப் பேச்சுத்தான் என்று ஏன் நினைக்க மாட்டார்கள்?

இவனும் தோல்வியடைந்தான்!

செப்டம்பர் மாதத்தில் 1932 ஜெர்மானிய விமானங்கள் பிரிட்டனில் விழுந்தன. இவன் ஒன்றின் மாலுமி. அருகிலிருப்பது அவன் உயிருடன் கீழிறங்கிய பாரஷூட். அவன் பிடிக்கும்சிகரட்டு ஒரு பிரிட்டிஷ் வீரன் அளித்தது.

4-ம் பக்கம் தொடர்ச்சி.

பர்மாவிலுள்ள பிரிட்டிஷ் சொத்துரிமைகளுக்கு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பாதுகாப்புகளைப் போல் இந்திய சொத்துரிமைகளுக்கும் ஏற்படுத்திக் கொள்ளாததற்கான காரணங்களில் ஒன்று பரஸ்பர நம்பிக்கையும் புராதனத் தொடர்பும், நேசப் பான்மையும் பெருக வேண்டுமென்ற எண்ணமே. இந்தியர்களின் வியாபாரத்தைச் சிதைக்க பர்மா சட்டம் செய்யாது என்றே பேசி முடிவாயிற்று. சாதாரணத் தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து பர்மாவுக்குச் சென்று, வேலையில்லாமல் திண்டாடும் பர்மியருடன் போட்டியிட வேண்டுமென்று நாம் விரும்பவில்லை. அவ்விஷயமாக பர்மா தக்க நிபந்தனைகளை இந்திய சர்க்காருடன் கேட்டு முடிவு செய்து கொள்வதில் ஆக்ஷேபமில்லை. ஆயினும் பர்மாவுக்குச் சென்ற தூது கோஷ்டியினர் இவ்வளவு அவசரமாக ஒப்பந்தத்தை முடிவு செய்துகொண்டு வரவேண்டிய அவசியம் தான் நாம் அறியவில்லை. அவர்கள் சென்றது பர்மியர்களுடன் பேசி விஷயங்களை ஆலோசனை செய்து வருவதற்காகவே. தென்னிந்தியாவை தீரக்கலந்து கொள்ளாமலேயே இவ்வளவு துரிதமாக வேலையை முடித்துவந்தது நமக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. இவ்விஷயமாக இந்திய சர்க்காருக்கு யோசனை கூறப்பல இனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஓர் இந்திய குடியேற்ற போர்டு புது டில்லியில் இதுவரையில் நிறுவப்படாதிருப்பது வருந்தத்தக்கது. எப்படியாயினும் இவ்வொப்பந்தம் அமுலுக்கு வருவதை தற்போது நிறுத்தி வைக்கவேண்டும். ஒப்பந்தத்தின் விவரங்கள் தென்னிந்தியர்களிடையே நன்றாகப் பிரசாரம் செய்யப்பட்டு பெரும்பான்மையோரின் சம்மதத்தைப் பெறும் வரையில் மன்னர் கவுன்சில் இவற்றை ஊர்ஜிதம் செய்யக்கூடாது.

இவ்வொப்பந்தத்தின் சில ஷரத்துக்கள் இந்திய தேசியத்துக்கு மானக்கேட்டைத் தருவதாக இருக்கின்றன. பர்மியப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டாலோ, ஓர் பர்மியப் பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்தாலோ இந்தியருக்கு அளிக்கப்பட்ட பர்மிட் ரத்து செய்யப்படும் என்று ஓர் ஷரத்து இருக்கிறது. அதை உடனே எடுத்தாக வேண்டும்.

பர்மாவிலே தலைமுறை தத்துவமாக அநேக செட்டி நாட்டுக் கடைகள் இருந்து வருகின்றன. அவைகளை மேல்பார்வையிட எப்பொழுதாவதுதான் முதலாளிகள் பர்மாவுக்குப் போகிறார்கள். அங்கு கடையை நடத்தும் ஏஜண்டுகளுக்கு மட்டில் விசேஷ உரிமை பெற்ற குடியேற்றக்காரர் அந்தஸ்து கொடுத்தால் போதாது. மொத்தம் ஐந்து வருஷம் பர்மாவில் வாசம் செய்துள்ள இந்தியருக்கும் இவ்விசேஷ உரிமையை அளிக்கவேண்டும். எக்காரணம் பற்றியும் பர்மாவில் வியாபாரம் செய்யச் செல்வோருக்கு எவ்விதத் தடையும் விதிக்கக் கூடாது. இவ்வாறு திருத்தி அமைப்பதால் பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் பரஸ்பர அன்பு வளரக் காரணமாகும். முன்பே, இந்திய பர்மா வியாபார ஒப்பந்தம் புனராலோசனைக்கு வந்து அங்கீகாரமாகும் பொழுதே இக்குடியேற்ற விஷயத்தை இந்தியா வற்புறுத்தியிருக்குமாயின் பர்மிய சர்க்கார் ஆட்சேபித்திருக்கத் துணிந்திருக்காது. அல்லது பொது மக்கள் சார்பாக பொறுப்புடன் பேசக்கூடிய மந்திரி சபைகள் மாகாணங்களில் நிர்வாகம் நடத்தியிருக்குமாயின் இவ்வநீதிகளை இழைக்க அன்னிய நாடுகளுக்கு ஆற்றல் வளர்ந்திருக்காது. ஓர் நாட்டின் அரசியல் அந்தஸ்தைச் சார்ந்ததே அது அயல் நாட்டில் பெறும் வியாபாரச் சலுகைகள் என்பதை எவ்வாறு மறுப்பது?

மெட்ராஸ் மெயிலின் அனுதாபம்

"பெருமிதமான வாக்குகளால் காங்கிரஸை ஆதரித்த மாகாணங்கள் இன்று ஜனநாயக ஆட்சியின்றி அவதிப்படுகின்றனவே! காங்கிரஸ்காரர்களுக்கு சட்ட சபைகளிலிருந்து விலக மனமில்லை. நிர்வாகத்தை நடத்தவும் திறமையில்லை. இக் காங்கிரஸ்காரர்களை நம்பியதால் வாக்குரிமை நம் மக்களுக்கு வீணாயிற்று" என்று வருந்துகிறது மெட்ராஸ் மெயில்.

இந்தியாவில் ஜனநாயக ஆட்சியை ஆதரிக்கும் ஓர் பத்திரிகை இப்படி வருந்துவதானால் அதில் ஓர் அர்த்தம் உண்டு. இந்தியாவே ஜனநாயக ஆட்சிக்கு தகுதியில்லையென்றும் மெஜாரிட்டி ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட பிரிட்டிஷ் ஜனநாயக தத்துவம் இந்தியாவில் வேர் ஊன்றாது என்றும் கருதும் ஆங்கிலப் பத்திரிகை இக்கவலைக்குள்ளானேன்? இந்தியாவைக் கூறு போடும் யோசனை கூறுவோருக்கு பக்க பலமாக அமையவே போலும்.

பார்லிமெண்டில் சமீபத்தில் ஓர் சட்டம் செய்யப்பட்டது. அதன் மூலம் இந்திய மாகாண கவர்னர்களுக்கு இப்பொழுது இருக்கும் சட்ட சபைகளின் ஆயுளை நீடிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த சமயத்தில் தேர்தல் எதற்கு என்றுதான் ஒத்திவைத்துவிடத் தீர்மானித்து விட்டார்களாம். இப்படித் தீர்மானிக்கும் முன் இந்திய மக்களின் அபிப்பிராயத்தைக் கலந்து கொண்டார்களா? ஜனநாயகத்துக்காக வாதாடும் 'மெயில்' இவ்விஷயத்தில் ஏன் மௌனம் சாதிக்கிறது? இந்திய மக்கள் இப்பொழுது பொதுத் தேர்தல் நடப்பது அசௌகரியம் என்று கருதவில்லை. ஆஸ்டிரேலியாவும் கருதியதாகத் தெரியவில்லை. கனடாவும் கருதியதாகத் தெரியவில்லை. பொதுத் தேர்தல்கள் அந்நாடுகளில் நடந்து முடிவடைந்திருக்கின்றன. யுத்தத்தை முன்னிட்டு பொதுஜன அபிப்பிராயத்தை அறிய வேண்டியது அவச்யமெனவே அவர்கள் எண்ணினார்கள். தேர்தல் நடந்து முடிந்ததனால் யுத்த தயாரிப்புக்கு அதிக ஊக்கம் அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அப்படியிருக்கையில் இந்தியாவுக்கு மட்டில் வேறு முறைகள் விதிக்கப்படுகின்றன. வகுப்புச் சச்சரவுகள் முற்ற ஹேதுவாகும் என்று பொதுத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அது உண்மையாயின், கட்சித் தலைவர்களை எளிதில் கேட்டுத் தெரிவித்து விடலாமே. அப்படிச் செய்யவேண்டுமென்று தோன்றாதது ஏன்? ஜனநாயகத்தில் நம்பிக்கையுடையவர்கள் தாம் செய்யவேண்டியதை இந்தியா விஷயத்தில் செய்யாமல் போனது ஏன்?

விஷயம் இவ்வாறாக இருக்க, சென்னை சட்டசபையைக் கொன்றது ஸ்ரீமான் ஸி.ராஜகோபாலாசாரியார்தான் என்று சிறிது காலம் முன்பு தைரியமாக முடிவு செய்தது 'மெயில்' பத்திரிகை. காங்கிரஸ் மந்திரிகள் நிர்வாஹத்திலிருந்து விலகினதால் என்ன? பொதுத் தேர்தல் நடத்த சட்டப்படி தடை ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. இஷ்டப்பட்டால் சர்க்கார் நடத்தியிருக்கலாம். உண்மையாகவே, ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு முக்கிய விஷயங்களை முடிவு செய்யவேண்டும் என்ற கவலை சர்க்காருக்கு இருந்திருக்குமேயாகில் சர்க்காரின் முடிவுகளை ஜனங்களிடம் கூறி அவர்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்வதற்காக சட்டசபையைக்கூட்டி, **1935**-வது வருஷம் இச்சட்டம் பிறப்பதற்கு முன் நடத்திவந்தது போல, நடத்தியிருக்கலாம். அப்படி யாதொன்றும் செய்யவில்லை. பொறுப்பற்ற யோசனையாளர்களைக்கொண்டு சர்க்கார் நடத்தப்படுகிறது. யோசனையாளர்கள் என்று பெயரை வகிப்பவர்கள் கவர்னரின் முடிவுகளுக்கு தாங்கள் கூறிய யோசனைதான் காரணம் என்று சொல்லிக்கொள்ளக்கூட கூச்சப்படுகிறார்கள். இந்நிலைமையில்தான் மெட்றாஸ் மெயில் ஜனநாயகத்துவத்தை காங்கிரஸ் ஆதரிக்கவில்லை என்று குறைகூறுகின்றது.

உண்மையென்னவென்றால், பொதுத் தேர்தல் இப்பொழுது நடத்தப்படுமாயின் காங்கிரஸ் மஹா ஸபையே முன்னிலும் அதிகமாக எல்லா ஸ்தானங்களையும் பிடித்துக் கொண்டுவிடும் என்கிற பயம்தான். பிறகு ஜனங்களிடையே காங்கிரஸுக்கு செல்வாக்கு குறைந்துவிட்டதென்று சொல்லிக்கொண்டே போகமுடியாது. தேர்தலில் வென்று வரும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் இந்தியாவின் தற்காப்புக்கும் தேசத் தொழில் அபிவிருத்திக்கும் முதல் ஸ்தானம் அளிக்கவேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கலாம். ரூபாய்களும் ஆட்களும் அனுப்புவதே இந்தியாவின் யுத்த முயற்சி என்று இருக்கமாட்டார்கள். நிலவரமான ஓர் பொருளாதார திட்டமும் இந்தியாவின் வருங்கால முன்னேற்றத்துக்குத் தக்கதான தொழில் அபிவிருத்திகளையும் முதலில் கவனிக்கத் துடங்குவார்கள். அதனால் பிரிட்டனோடு பிற்காலத்தில் இந்தியா வியாபார விஷயத்தில் போட்டிபோட ஆரம்பித்துவிடும் என்று பயந்தே இவ்வாறு பொதுத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுகின்றன என்ற சந்தேகம் ஒவ்வொரு இந்தியன் மனதிலும் எழுகிறது. இந்தியர்களை மனப்பூர்வமாக பிரிட்டிஷார் நம்பாதவரையில் தற்போதைய நிலைமையில் யாதொரு மாறுபாடும் ஏற்பட முடியாது. சீக்கிரம் விடுதலை அடையப் போகும் ஸ்ரீமான் ஸி ராஜகோபாலாச்சாரியாரை காந்திஜியிடம் சிபார்சு செய்து ஸத்யாக்ரகத்தை நிறுத்திவிடும்படி "மெயில்" செய்துகொள்ளும் வேண்டுகோள் சற்றும் பொருத்தமற்றதேயாகும்.

"குருதேவர் மறைவு"

"இலக்கியத்திற்காக நோபல் பரிசளிக்கும் முறையைப் பலர் குறை கூறுகிறார்கள். உண்மையில் ஒவ்வொரு வருஷமும் திருப்திகரமான முறையில் கவிகளுக்குப் பரிசளிப்பது சிரமமானது. ஏனெனில், விக்ஞானிகளைவிட கவிகள் தோன்றுவதரிது. அதிலுமரிது சிறந்த கவிகள் தோன்றுவது. இலக்கியப்பரிசு 20 வருஷத்திற்கோ அல்லது ஒரு நூற்றாண்டுக்கோ கொடுக்கப்படுமாயின், அதற்குக் கவி ரவீந்திரநாத் டாகூர்தான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது திண்ணம்"—

இவ்வுரைதான் கவி ரவீந்திரருக்கு ஸர் C V. ராமன் சூட்டிய புகழ்மாலை. பாரெங்கும் வீசிய இத்தகைய கவிசிரேஷ்டரின் ஒளி சென்ற ஆகஸ்டு மாதம் ஏழாம் தேதி இவ்வுலகினின்றும் மறைந்தது.

மதம், வேதாந்தம், இலக்கியம், சங்கீதம், ஓவியம், நாட்டியம் இக்கலைகளில் திறமை வாய்ந்த ஒரு வங்காளத்துக் குடும்பத்தில் 'மஹரிஷி'க்குப் பிறந்த ரவீந்திரநாத் டாகூரின் வாழ்க்கையில் இக்கலைகள் ஒவ்வொன்றும் நன்கு மலர்ந்திருந்தது.



இலக்கியத்தில் இவர் கையாளாத அம்சம் ஒன்றுமில்லை. கற்பனையும். கவிதையும், இனிமையும் இசையும், போதனையும் சிந்தனையும், உயர் லக்ஷ்யமும், தத்வமுமடங்கிய இவரது இலக்கியத்திற்கு உலக இலக்கியங்களில் ஒரு தனி ஸ்தானமுண்டு.

உணர்ச்சியை எழுப்பும் உயர் பொருள் கீதங்களையும், செவிக்கினிய சொற்பொழிவுகளையும் உலகம் முழுவதிலும் தமது இன்னிசைக் குரலில் நிகழ்த்தி தாயின் மேன்மையை முழக்கினவர் இந்த பாரதத் தவக்கவி. ஜர்மனி, ஷிகோஸ்லோவேகியா இவ்விடங்களில் வங்காள பாஷையில் இவர் பாடிய கீதங்களை மீண்டும் மீண்டும் பாடச்சொல்லி மகிழ்வார்களாம் பாஷை தெரியாத அத்தேசத்தார்கள்கூட.

டாகூர் பெரிய வேதாந்திதான் ஆனால் சமயாசாரியரல்ல. உலகத்திற்கு மதத்தின் கொள்கைகள், வேதங்களின் பொருள் இவைகளை விளக்கும் ஒரு தத்வக்ஞானி.

நடிப்பு கலையின் பேரபிமானியாகவுமிருந்தார். எழுதுவதல்லாமல் தமது நாடகங்களை நடித்தும் காட்டி இக்கலைக்குப் பெரிதும் பணி செய்து வந்தார்.

டாகூரின் தேசபக்தி ஒரு மாசற்ற, தெய்வீக உலகாபிமானம் என்றே கூறவேண்டும். உலக நிலைக்கே ஒரு புதிய உருவளித்து சீர்தூக்கும் கைங்கர்யத்தையே இந்தியாவுக்கு ஆண்டவன் விதித்திருக்கிறார் என்ற வலிய கோட்பாடுள்ளவர். அவருடைய அரசியல் தேசமக்களின் குணவளர்ச்சிக்கான மார்க்கங்களிலேயே செல்லுமேயல்லாது வெளிப்படையான தேசிய வேலைத்திட்டங்களில்

60-ம் பக்கம் பார்க்க.

உணவும் ஓர் ஆயுதமே.

[கார்ல் பிராண்ட் என்னும் ஜர்மானிய தத்வ ஞானியால் **'Foreign Affairs'** என்னும் அமெரிக்க ஸஞ்சிகையில் எழுதப்பட்ட வியாஸத்தின் ஸாரம்]

ஏகாதிபத்திய நாடுகளில் உணவு யுத்த ஸாதனமாக ஆகிவிட்டது. அந்நாடுகளிலிருந்து உணவைப்பற்றிய புள்ளி விவரங்கள் கூட அந்நிய நாடுகளுக்கு கிடைப்பதில்லை. ஓர் ஆண்டில் எவ்வளவு விளைந்தது, எவ்வளவு செலவழிந்தது, ஏற்றுமதி எவ்வளவு, இறக்குமதி எவ்வளவு என்ற சாதாரண விவரங்கள் கூட இப்பொழுது ராணுவ இரகசியமாக காப்பாற்றப்படுகின்றன. ஓர் புதிய விமானம் கட்டும் விவரத்தை எவ்வளவு மறைவாக வைத்துக்கொள்ள விரும்புவார்களோ அவ்வளவு ஜாக்கிரதையுடன் இவ் விவரங்களையும் மறைக்கப் பார்க்கிறார்கள்.

ஜெர்மனி தேசமானது, இந்த யுத்தத்தில் இறங்கும் முன்பே, ஓர் தீவிரமான திட்டத்தைத் தயாரித்துக்கொண்டது. அத்திட்டத்தில் முதல் ஸ்தானம் உணவுக்கே அளிக்கப்பட்டது. விவசாயிகளை ஒத்துழைக்கச் செய்ய வேண்டுமா, முரண்டி நிற்கும் தொழிற்சாலைகளை முதுகொடிக்கவேண்டுமா, துர்புத்தி கொண்ட சாப்பாட்டுராமன்களை சீர்திருத்த வேண்டுமா, ஜாதிகளை இணைக்கவேண்டுமா, உள்நாட்டு திட்டங்களை ஊர்ஜிதப்படுத்த வேண்டுமா? எல்லாவற்றிற்கும் உணவே கைகண்ட ஆயுதம். படிந்து நடந்தால் உணவு அளிக்கப்படும், மீறினால் கிடைத்து வந்ததும் பிடுங்கிக்கொள்ளப்படும். ஜனங்களை அடக்கி ஆள கைகண்ட முறை இதுவே ஆயிற்று. அரசாங்கத்தின் கை ஒவ்வொரு நபரின் தொண்டையிலும் இறுகிக்கொண்டு நின்றது.

மூன்றாவது ரீஷ் முக்கியமாகச் செய்து முடித்தது இது தான். அமைதியுடன் வாழ்ந்த ஆறு ஆண்டுகளிலும், போரில் இறங்கிய 18-மாதங்களிலும் உணவு விஷயமாக எண்ணற்ற சட்டங்களும் கணக்கற்ற உத்திரவுகளும் பிரசுரிக்கப்பட்டன. "டோடலிடேரியன்" கொள்கையே இத்தன்மைகொண்டது. சக்திவாய்ந்தவர்களே தங்கி நிற்கவேண்டும், யுத்த வீரர்களே உயிர் வாழவேண்டும். ராணுவ தளவாடமாகவும் அரசியல் தந்திரமாகவும் மாறிவிடுகிறது சர்வஜன சாதாரணமான உணவு அந்நாடுகளில். நாட்ஸி ஜர்மனி இப்படி உணவைக் கட்டுப்படுத்திக்கொண்டதால் கண்டதென்ன? உணவுப் பொருள்கள் விலை ஏறிவிடுமோ என்ற கவலையில்லை. ஜனங்கள் கூக்குரல் இடுவார்களோ என்ற பயமில்லை. ஏதோ சில பதார்த்தங்கள் கிடைக்காவிட்டாலும் பொதுவாக இன்றைய வரையில் ஜர்மானியர்கள் நன்றாகவே உண்டு வருகிறார்கள். யுத்தம் முடியும் வரையில் அப்படியே பஞ்சமறியாது வாழவும் வாழலாம். வென்ற நாடுகள் தங்கள் கைவசம் இருக்கும் வரையில் ஜெர்மனிக்கு உணவைப்பற்றிய கவலை ஏன்?

உற்பத்தி யுத்தம் என்று ஒன்று நாட்ஸி ஜர்மனியில் ஆரம்பமாயிற்று. 1934-ல் உணவு ஏற்றுமதி இறக்குமதிகளைத் திட்டம் செய்து கொண்டார்கள். உணவுப் பொருள்களின் உள்நாட்டு விலையை ஏற்றினார்கள். தரகர்கள் லாபம் குறைந்தது. ஜனங்கள் கொள்ளும் விலையும் சற்று அதிகமாயிற்று. உணவு திட்டத்தை ஒட்டியே வியாபாரம் விவசாயம் உற்பத்தி இவைகளின் விலை வாசிகள் விதிக்கப்பட்டன. அதன் மூலம் ஜர்மனியிலுள்ள ஒவ்வொரு ஜீவனும் குடியானவனோ, முதலாளியோ, பால் வியாபாரியோ, பலசரக்குக்காரனோ, உணவியலின் உழைப்பாளியாகிவிட்டான். மீறி நடந்தவருக்கு மரண தண்டனை. யுத்தம் வந்தால் சமாளித்துக்கொள்ளவேண்டுமேயென்ற நோக்கத்துடனே பூர்வாங்கமாக இந்த தயாரிப்பு ஏற்பட்டது. எல்லாத் துறைகளிலும் பாதிக்கக்கூடிய யுத்தமாதலால் கஷ்டங்களும் குறைவுகளும் ஏற்படத்தான் செய்யும் என்று அறிந்தே அதற்கும் ஜனங்களின்

மனோபாவத்தை பக்குவப்படுத்தி வைத்தனர். உணவு நிபுணர்களையும், பொருளாதார சாஸ்திரிகளையும், மனோதத்வ ஆராய்ச்சியாளரையும் ஒன்றுசேர்த்துவிட்டு ஜனங்களுக்குப் போதிய ஆகாரம் அளிக்கவும், மிச்சத்தை வேறு வழிகளில் உபயோகித்துக்கொள்ளவும், மீறி ரஹஸ்யமாக உணவைப் பெற இயலாத வகையில் ஏற்படுத்தினர். உணவு சீட்டுகள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டது. குதிரைக்கு இவ்வளவுதான் தீனி போடலாம் என்று கூட சீட்டு வந்துவிட்டது. அதே மாதிரியாகவே இதரப் பொருள்களிலும் ஒரு நபர் இவ்வளவுதான் பெறலாம் என்று குறிக்கப்பட்டுவிட்டது. இதிலிருந்து ஜர்மனியில் உணவு பஞ்சம் ஏற்பட்டது என்று அர்த்தமல்ல. உணவு கட்டுப்பாடு செய்யப்பட்டது. அகப்பட்ட வரையில் உணவு என்கிற கொள்கை போய், அரசியல் அங்கம் உணவு, கட்டிடத்தின் கருங்கல் உணவு என்ற ராஜீயக் கொள்கையை ஜனங்கள் கைக்கொண்டனர்.

ஒவ்வொருவருக்கும் உணவு போதிய அளவில் அளிக்கப்படுகிறது எனினும் யாவருக்கும் ஒரே விதமாக உணவு அளிக்கப்படுவதில்லை. அரசாங்கத்துக்கு முக்கியமென்று தோன்றும் வர்க்கத்தினருக்கு சலுகை அதிகம் தான். யுத்த வீரர்களுக்கு கிடைக்குமளவு வேலைக்கு லாயக்கில்லாதவர்களுக்கும் யூதர்களுக்கும் கிடைக்காது. ஓர் நபரின் திறமையை அரசாங்கம் பாராட்டுகிறது என்பதற்கு அறிகுறி இவ்வுணவுச் சலுகையே. மாமூல் வேலையைச் செய்துகொண்டிருப்பவன் திறன் படும் வேலையைச் செய்ய முற்பட்டால் அவனுக்கு உணவு விகிதம் அதிகமாகும். ஏற்றக் குறைவு அடிக்கடி ஏற்படும். ஒரு சமயம் சர்க்காருக்கு அதிகமாக சேமித்துவைத்துக்கொள்ள வேண்டுமென்று தோன்றினால் உடனே உணவு விகிதம் குறைக்கப்படும். நெருக்கடியான நிலைமை வந்துவிட்டதென்று காட்டுவதானாலும் தற்காலிகமாக விகிதத்தைக் குறைத்து ஜனங்களைத் தட்டி எழுப்பும். கைவசம் அதிகம் இருக்கும் பொழுதுகூட உணவுக்கு குறைவு ஏற்பட்டதுபோல் காட்டிக்கொள்வதும் உண்டு. களைத்து சலித்துப் போயிருக்கிறார்கள் ஜனங்கள் என்று தோன்றினால் அவர்களுக்கு உற்சாகமூட்டுவதற்காக அதிகமாக உணவுப்பொருள்களும் உல்லாஸப் பொருள்களும் சப்ளை செய்யப்படும். ஜனங்கள் அசிரத்தை காட்டத் தொடங்கினாலும் புது ஊக்கம் உண்டாக்க இவ்வுணவுச் சலுகையையே கையாளுவார்கள். பொதுவாக அதிகமாகச் சாப்பிட்டு வாழும் ஜனங்களைப் பரிகசித்தும் வெறுக்கவும் கற்றுக்கொடுப்பார்கள். உணவுத் திட்டத்தை மீறிக் கள்ளத்தனமாக அதிகம் பெருகிறவர்களைச் சிரச்சேதமும் செய்வார்கள்.

நடு நிலைமை வகிக்கும் தேசங்களிலும் நாட்ஸிகள் இவ்வுணவுத் தந்திரத்தைக்கொண்டே எதிர் கக்ஷியை தன் வசப்படுத்துகின்றனர். ஒரு வருஷத்திய தானியங்கள், சக்கரை, பால், முட்டை, காய்கறி, யாவையும் தங்கள் ஆதீனத்திற்குள் வைத்துக்கொண்டு விடுவார்கள். விவசாயத்தையே மூலாதாரமாகக் கொண்ட நாடுகளில் இவர்கள் உபாயம் கைகண்ட ஔஷதம். கிராக்கி குறைந்தால் விலை படுக்கும். விலை படுத்தால் விவசாயி வரி செலுத்தவும் முடியாது தவிப்பான். ஒரே அடியாக வாங்குகிற நாட்டை நம்பி வாழவேண்டியதாகிவிடும். ஆகவே தான்யங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் யாவும் நாட்ஸிகளிடம் சிக்கிக்கொள்ளக்கூடியவைகளே. பொருளாதாரத்துறையில் நாட்ஸிகளிடம் அடிமைப்பட்ட அயல் நாடு, பிறகு எளிதில் ராணுவத் துறையிலும் அரசியல் துறையிலுமே அடிமையாகிவிடுகிறது. 8 கோடி ஜர்மன் மக்களுக்குத் தேவையான வெளி தேசங்களில் இருந்து வாங்கவேண்டிய உணவுப்பொருள்கள் அவ்வளவையும் ஒரு கையாகவே வாங்குவது நாட்ஸி வழக்கம். ஒரே அதிகாரிதான் அவ்வளவையும் வாங்குவதால் கேட்ட விலையைக் கொடுக்க தான் தயார் என்று சொல்லுகிறார். அந்நாட்டு மக்கள் யாவரும் அறியுமாறு விளம்பரம் செய்கிறார். அந்தந்த நாடுகளிலுள்ள விவசாயிகள் அந்தந்த சர்க்காரை துன்புறுத்தி இஜ்ஜெர்மனியுடனே வியாபாரத்துக்கு ஒத்துக்கொள்ளத் தூண்டுகிறார்கள். பணம் பட்டுவாடா தக்க முறையில் தாமதமின்றி செய்யப்படுகிறது. பணத்தைப் பெற்றுக்கொண்ட தேசம் ஜர்மனிக்கு கடன்பட்டு விடுகிறது. ஜர்மனியின் நாணய விகித சூட்சிகளால் இந்த நாடுகளுக்கு ஜர்மனி சொல்வதையெல்லாம் கேட்கவேண்டியதாகி விடுகிறது. இவ்வாறு சமாதானமுறையிலேயே தேசத்தை ஜயித்துவிடுகிறார்கள் ஜர்மன் உணவு நிபுணர்கள். ஒரே கையாக வாங்காததால் வேறு

நாடுகள் ஜர்மனியுடன் போட்டிப்போட முடிவதில்லை. இவ்வளவு விலையும் கொடுக்க முடிவதில்லை, வசதிகளும் அளிக்கமுடிவதில்லை. இத்தகைய முறையை அனுஷ்டித்தே 1933-லிருந்து 1939-க்குள்ளாக பல்கேரியா, கிரீஸ், ஜூகோஸ்லேவியா, ருமானியா, ஹங்கேரி, துருக்கி, முதலிய தேசங்களுக்கு ஜர்மனியோடு வியாபாரம் அதிகரித்தது. ஜர்மனி அதிகமாக வாங்கிற்று; அதிகமாக தன்னிடம் வியாபாரம் செய்யவேண்டும் என்றும் வற்புறுத்திற்று.

இந்த யுத்தம் ஆரம்பித்த பிறகு இத்தகைய நிர்ப்பந்தங்கள் அதிகரித்தன. அத்துடன் நடுநிலைமை நாடுகளில் ஜர்மன் நாணய விகிதங்களும் சம்பந்தமில்லாமல் ஏறுமாறு செய்யப்பட்டன. ஜர்மன் நாணயத்துக்கும் இதர தேச நாணயத்துக்கும் விகிதம் எதேச்சையாக விதிக்கப்பட்டது. அந்ய நாட்டு சரக்குகளை ஜர்மன் நாணயத்திலேயேதான் வாங்கிக்கொள்வேன் என்று சொல்லிவிட்டது. ஆகையால் பேசினதற்கு அதிகமாக ஏற்றுமதி செய்தாகவேண்டியதாயிற்று. அந்நாடுகளுக்கு நடுநிலைமை வகித்த பல்கேரியா, ஹங்கேரி முதலிய நாடுகளும் அபரிமிதமாக உணவுப் பொருள்கள் இருந்தபோதிலும் ஜர்மனிக்கு விற்று ஆகவேண்டியிருக்கிறதென்று தாங்கள் உண்பதைக் குறைத்துக்கொண்டன. ஆகவே யுத்தத்தில் இறங்காமலேயே உணவுப் பஞ்சத்தை அனுபவித்தன.

இதே முறையை எளிதில் லாடின் அமெரிக்க தேசங்களிலும் கெனடா, ஆஸ்ட்ரேலியா, ந்யூஸிலண்ட் முதலிய தேசங்களுக்கும் ஹிட்லர் உபயோகிக்கலாம். ஹிட்லர் பிரிட்டிஷ் தீவைப் பிடித்துக்கொண்டு இம்முறையை விஸ்தரிப்பாரேயானல் அமெரிக்காவை ஓர் நொடியில் அல்லலுக்குட்படுத்திவிடலாம். யுத்த முயற்சி யாதுமின்றியே இதைச் செய்துமுடிக்கலாம்.

இத் தந்திரம் முழு மும்மரமாக வேலை செய்வது ஜர்மனி ஜயித்த நாடுகளில்தான். போலண்ட் மத்ய பாகம் மனித வாசத்துக்கு யோக்யமற்றதாகச் செய்யப்பட்டுவிட்டது. வேலைக்கு உபயோகமற்றவர்களையே ஜர்மனி இங்கு அனுப்புகிறது. குறைந்த உணவுத் திட்டத்தையே அளிக்கிறது இப்பிரதேசத்துக்கு. விவசாய தேசமான போலண்டுக்கு இந்த கதி! தொழிலாதார செகோஸ்லேவோகியாவுக்கு ஜர்மனியிலுள்ளது போலவே எல்லா வசதிகளும்! இந்த கோஷ்டியில் டென்மார்க் தான் மிகவும் அதிர்ஷ்டசாலி. முடிந்த வரையில் ஜர்மனிக்கு வெண்ணையும், முட்டையும் ஆடு மாடுகளும் விற்றுக்கொண்டிருக்கிறது. விலை குறைந்தால் உற்பத்தி குறையுமோ என்று பயந்து ஜர்மனி அதிக விலை கொடுத்து வருகிறது. ஆகவே அதிகமாக உணவுப் பொருள்கள் உற்பத்தியாகி ஜர்மனிக்கு அதிகமாகப் போய்ச்சேர்ந்து கொண்டிருக்கிறது. விலை அதிகமானதால் டென்மார்க்கின் கடனும் குறைந்துவிட்டது. பிரிட்டனுக்கு விற்பது குறைந்தபோதிலும் டென்மார்க்கும் ஹாலண்டும் ஜர்மனியுடன் அதிக வியாபாரம் வைத்துக்கொண்டிருப்பதால் சமாளித்துக்கொண்டிருக்கின்றன. இரவும் பகலுமாக ஹாலண்டிலிருந்து ஜர்மனிக்கு உணவுப் பொருள்கள் போய்க்கொண்டேயிருக்கின்றன. ஆகாயத்தை முட்டும் இவ்வளவு விலை இது வரையில் அவர்கள் கண்டதேது?

பெல்ஜியம், ஹாலண்ட், பிரான்ஸு முதலிய இடங்களில் தொழிலாளிகள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். ஜர்மனியில் வேலை விருத்தியாகிக்கொண்டே வருகிறது. தொழிலாளிகள் அவ்வளவுக்கும் கிடைப்பது அரிதாகி வருகிறது. ஆகையால் இதர நாடுகளில் இருந்து வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளை ஜர்மனி இழுத்துக்கொள்ள இவ்வுணவையே இரைப்பொருளாக அளிக்கிறது. அவர்கள் ஒத்துக்கொள்ளாவிடில் உள்ள உணவு விகிதமும் அவர்களுக்குக் கிடையாது. ஒத்துக் கொண்டால் ஏராளமாக ஜர்மனித் தொழிற்சாலைகளில் கிடைக்கிறது. ஜர்மனிக்கு வேலைத் திறனுடைய அந்நிய நாட்டினர் இவ்வாறு வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றனர்.

ஜர்மனி ஆக்ரமிக்காத பிரான்ஸு தேசத்தில் உணவுப் பொருள்களான தானியங்களும் கொழுப்புகளும் கிடைப்பதில்லை. வடக்கேயிருந்துதான் வரவேண்டும். அப்பிரதேசம் ஜர்மன் வசத்தில் இருப்பதால் பெடேயினும் ஹிட்லரும் ஆடும் சதுரங்கத்தில் இவ்வுணவு ஒரு முக்கிய "காய்" ஆகிவிட்டது. அது தீர்ந்தால்தான் ஜர்மனி இவ் "வீஷி" பிரான்ஸுக்கு உணவு அளிக்கும்.

ஜர்மனி ஆக்ரமித்திருக்கும் எல்லாப் பிர தேசங்களிலுமே ஜர்மன் பட்டாளங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந் நாடுகளே அவைகளுக்கு உணவு அளித்தாகவேண்டும். ஜர்மன் துருப்புகள் தாங்கள் சாப்பிடுவது மட்டில் அல்லாமல் ஜர்மனியில் தாங்கள் வீட்டுக்கும் வாங்கி அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் உணவுக் குறைவு அதிகமாகிறது. ஆகவே ஐரோபாவில் அநேக நாடுகளில் உணவு கிடைப்பதாயிருந்தும் அந்நாட்டு மக்களுக்கு பட்டினிதான் கிடைக்கிறது. யுத்தம் செய்யாத சாதாரண ஜனங்களுக்கு உணவு கிடைப்பது அவ்வளவு சுலபமாக இல்லை. ஹிட்லர் ஆக்ரமித்த நாடுகளிலும் பஞ்சம் வராமலிருக்க தகுந்த ஏற்பாடுகள்தான் செய்திருக்கிறார். ஆனாலும் அவைகளை சரியாகக் கவனித்து நடத்த வசதிகள் இல்லை. அவர் தன் நாட்டில் ஆறு வருஷங்களாகத் தயாரித்து பழக்கியதால் அங்கு மிகவும் திருப்திகரமாக நடந்து வருகிறது. இதர இடங்களில் போக்குவரத்துச் சாதனக் குறைகளாலும் மொத்தம் இருப்பு எவ்வளவு என்பதைக் குறித்து சரியான தகவல்கள் காலத்தில் கிடைக்காததாலும் இருக்கிற உணவைக்கூட சரிவர பகிர்ந்து கொடுக்க இயலவில்லை. காலக் கிரமத்தில் ஜர்மன் ஆதிக்கியத்திலேயே இருந்தால் சரிப்பட்டுவிடுமென்று வாதிக்கலாமாயினும் உணவைக் கொடுப்பதும் கொடுக்காமல் தடுப்பதும் ராஜீய நோக்கங்களைச் சேர்ந்ததாகப் போய் விட்டபடியால் ஜர்மன் ராஜீய சௌகர்யத்துக்குத் தக்கவாறுதான் நடக்கும்.

அதுமட்டுமல்ல. புதிய முறைகளை ஜர்மனி இத்தேசங்களில் புகுத்தி அதிகம் விளையச் செய்துவருகிறது. மத்ய ஐரோப்பாவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் வடபாகங்களும் நடுப்பாகங்களும் பல மடங்கு அதிகமான விளைவை இவ்வாண்டு தரப்போகின்றன. ஆக்ரமிக்கப்பட்ட நாடுகளில் அச்சைனியங்களைக் கொண்டே விவசாய முன்னேற்றம் விளைவிக்கப்படுகிறது. சிப்பாய்களாக இருந்தவர்கள் இப்பொழுது உழவர்களாக மாறுகிறார்கள். அதிக விளைவு இப்பொழுதே ஆரம்பித்துவிட்டது. இன்னும் அதிகமாகும். அந்தந்த நாடுகள் பிற நாட்டிலிருந்து இறக்குமதியை எதிர்பார்க்காமல் தங்களுக்கு வேண்டிய உணவைத் தேடிக்கொண்டுவிடும். ஆடு மாடு கோழிகள் ஒருபாகம் அழிந்துவிட்ட போதிலும் மறுபடியும் வளர அதிக நாள் பிடிக்காது.

ஆகவே 1941 வருஷம் பஞ்சம் ஏற்படாவிட்டால் பிற்பாடு ஏற்படாது என்றே துணிந்து கூறலாம். எப்பொழுதும் கொழுப்பு பதார்த்தங்களான முட்டை பால் வெண்ணை முதலியவைகள் குறைவுதான்.

ஜர்மனியிடம் சேமிக்கப்பட்டிருப்பது 6 கோடி டன் தானியம். இதை யுத்தத்துக்காகவென்றே தொடாமல் ஜாக்கிரதையாக மிச்சப்படுத்தி வைத்திருக்கின்றனர். ஒரு அவசியமான சமயம் என்றால் இதிலிருந்து எடுத்துக்கொடுத்து மிகவும் வருந்தும் நாட்டை காப்பாற்ற ஜர்மனியால் முடியும். பட்டினி கிடந்து சாகவேண்டிய நிலை ஜர்மனி வசமுள்ள ஒரு நாட்டுக்கும் நேராது. அந்தந்த நாடுகளில் இருக்கும் ஏராளமான ஆடு மாடுகளும் அவைகளுக்கான தீனிகளும் செலவாகிவிடும் முன்பே வேறு ஏற்பாடுகள் செய்து கொண்டுவிடலாம். மேலும் இப்பொழுது விற்கும் உயர்ந்த விலையே உற்பத்தியை பெருக்க ஹேதுவாகிறது. உள்நாட்டிலேயே செலவாவதும் குறைந்து செட்டாகவே செலவு ஆகி வருகிறது.

நாட்ஸிகள் இவ்வுணவு சம்பந்தமாக மிகவும் தைரியத்துடன்தான் இருக்கிறார்கள். எதிர்பாராத இடஞ்சல் ஒன்றும் நேரிடாது என்கிறார்கள். கிடைக்கக்கூடிய மொத்த உணவு தொகையை குறைவாக அந்ய நாடுகள் மதித்து பயத்தை உண்டுபண்ணுகின்றன என்கிறார்கள். ஐரோப்பாவுக்கு வேண்டிய அவ்வளவு உணவும் அவர்களே அளிக்கமுடியுமென்றும் அத்திறமையும் அவ்வறிவும் படைத்ததாலேதான் அவர்கள் தங்கள் "புதிய திட்டத்தை" உலகத்தில் அமுலுக்கு கொண்டுவர யுத்தம் மூலமாக பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளுகிறார்கள்.

மற்றொரு விஷயம் கவனிக்கத்தக்கது. சென்ற உலக யுத்தமானது உணவுப் பஞ்சத்தால் மட்டில் முடிவடைந்ததன்று. 1918-ம் வருஷம் அக்டோபர் மாதம் ஜர்மனி சமாதானத்துக்கு வரவேண்டியதாக ஆனதற்குக் காரணம் "அமீன்ஸ்"ல் ஜெர்மனியர் தோற்ற

தனால்தான் என்றும் நவம்பர் மாதம்கூட முன்னணித் துருப்புகளுக்கு உணவுக் குறைவு தெரியவில்லையென்றும், இத்தடவை ஜர்மனி வெகு ஜாக்கிரதையாகவும் முன் யோஜனையுடனும் திட்டம் செய்துகொண்டிருக்கிறது என்றும் கெய்ஸர் பட்ட அவஸ்தையை படுவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டுவிட்டது என்றும் பெருமை பேசிக்கொள்ளுகின்றனர்.

ஐரோப்பாவின் பெரும்பான்மையான பாகத்தை ஜர்மனி தன் உணவுத் திட்டத்தால் நசுக்கித் தன் காலடியில் வைத்துக்கொண்டிருக்கிறது. தன்னால் இயன்றவரையில் அந்நாடுகளுக்கு பஞ்சம் வராது பார்த்துக்கொள்ளும். அப்படி இயலாவிட்டால் முதல் முதலாக இந்நாடுகளிலுள்ள 150 லக்ஷம் மீதே பஞ்சத்தை ஏவிவிடுவார்கள். இதுதான் ஜர்மனி வென்று ஆக்ரமித்துவரும் நாடுகளால் அதற்கு ஏற்படும் பயன்.

நாட்ஸி மெஷின் நிர்தாக்ஷிண்யமானது; உணவுப் பஞ்ச பயத்தால் உடைந்துவிடாது. மேலோங்கிய திறமையாலும் ராஜ தந்திரத்தாலும் ராணுவ பலத்தினாலுமே தகர்த்து எறியத் தக்கதாகும்.

பிரிட்டன் அரசர் பெருமான் ஆறாம் ஜார்ஜ் தொழில் சங்கத்தின் தலைவர் G. கிப்ஸனிடமிருந்து ஒரு தங்கப் பதக்கம் பெறுகிறார். தீனி அளிக்கும் கப்பல்களில் ஒன்றும் அச்சங்கத்திலிருந்து அரசருக்கு இனாமாகக் கோடுக்கப்பட்டது.

லட்சிய வாழ்க்கை

R. விநாயகம், M.A., B.L.,

சில தினங்களுக்கு முன் பம்பாய் அரசியல் பிரமுகர் **ஸ்ரீ கன்ஹயலால் முன்ஷி** காங்கிரசிலிருந்து விலகியது அஹிம்சை பிரச்னையைப் பற்றிய விவாதத்தை மறுபடியும் பொது ஜனங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. ஸ்ரீ முன்ஷி காங்கிரசில் பிரசித்திபெற்ற தலைவர்களில் ஒருவர்; பம்பாய் காங்கிரஸ் மந்திரி சபையில் முக்கிய ஸ்தானம் வகித்தவர். குஜராத்தியிலும் ஆங்கிலத்திலும் சிறந்த நூல்கள் எழுதியுள்ள அறிவாளி. இரண்டு வருஷங்களுக்கு முன் 'நான் மகாத்மாவையே பின்பற்றுகிறேன்' என்ற பெயருடன் அவர் எழுதியிருந்த புத்தகம், சுதந்திரப் போராட்டத்தின் விமரிசனத்திலும் தத்துவ விசாரணையிலும் தெளிவாயும் உணர்ச்சியுடனும் அமைந்திருந்தது.

இவ்விதம் விசேஷ பிரசித்திபடைந்த அரசியல் பிரமுகரும் அறிவாளியுமானவர், கொள்கையில் வித்தியாசம் ஏற்பட்டதை முன்னிட்டு (அதாவது காங்கிரசின் திட்டங்கள் யாவும் அஹிம்சையையே அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதை தான் ஒப்புக்கொள்ள முடியாதது பொருட்டு) காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டதை எவரும் அலட்சியம் செய்ய இயலாது. காந்திஜி குறிப்பிட்டிருப்பதுபோல் இந்த அடிப்படைத் தத்துவத்தை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளாதவர்கள் பலர் காங்கிரசில் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்களுக்கு வழிகாட்டியாகவும் ஸ்ரீ முன்ஷியின் செயல் பாராட்டத்தக்கது. அரசியல் கட்சிகளில் அபிப்பிராய பேதங்கள் இருப்பதில் குற்றமில்லையென்றாலும், அஸ்திவாரமாக அமையும் தத்துவத்தையே நிராகரிப்பவர்கள் இருந்தால் அவர்களால் கட்சிக்கு பலஹீனமே ஒழிய வேறில்லை. அன்னவர்களுடைய சேவையும் முடிவில் வேரறுந்த மரமாகத்தான் ஆகிவிடும்.

ஆனால் இந்த அஹிம்சை பிரச்னை காங்கிரசிற்கு புதிதல்ல. காந்திஜி காங்கிரசில் புகுந்த நாளிலிருந்து, ஏன், அவர் நம் நாட்டில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டதிலிருந்தே இந்த விஷயம் வாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. 1908ம் வருஷத்தில் அவரது **'இந்திய சுயராஜ்யம்'** என்ற புத்தகத்தில், நம் நாட்டின் அரசாங்கம் வருங்காலத்தில் எப்படி அமையவேண்டும், அரசாங்கத்திற்கும் சமூகத்திற்கும் எவ்வித தொடர்பு இருக்கவேண்டும், இதை அமைப்பதற்கு இந்தியர்கள் எந்த முறையை அனுஷ்டிக்கவேண்டும், என்ற முக்கியமான விஷயங்களைப்பற்றி அவர் தன் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அதுமுதல், சௌரிசாராவில் நடந்த கோர சம்பவங்களை முன்னிட்டு அவர் பார்டோலி வரி கொடா இயக்கத்தை நிறுத்தியது, சென்ற வருஷம் காங்கிரஸ் காரியக் கமிட்டி பூனாவில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஒட்டி அவர் காங்கிரஸ் வேலைகளிலிருந்து விலகிக்கொள்ள முன் வந்தது, இதுபோன்ற பல சந்தர்ப்பங்களில் இந்தப் பிரச்னை மும்முரமாகவே நாட்டில் விவாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. சமீப காலத்தில் ஸ்ரீ எம். என். ராயும் காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸய்யங்காரும் இந்த ப்ரச்னையை வைத்தே காந்திஜியைத் தாக்கிக்கொண்டு வந்தார்கள். அஹிம்சை என்பது மனிதனால் எக்காலத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய விஷயமா? அரசியல் முறையிலோ, போராட்டங்களிலோ, பொது வாழ்விலோ, அதற்கு இடமுண்டா?

அஹிம்சையை இப்பொழுது தாக்கிப் பேசுபவர்களில், அக்கொள்கையை மனிதன் தனிவாழ்க்கையில்கூட அனுஷ்டிக்கவேண்டியதில்லை, அது எவ்வித சந்தர்ப்பத்திலும் எவருக்கும் இலட்சியமாகக் கூடியதல்ல, என்று வாதாடுபவர்கள் குறைவுதான். சொந்த வாழ்க்கையில் அஹிம்சையை அனுஷ்டிப்பதனால் ஏற்படும் மேன்மையையும் ஆனந்தத்தையும் சரித்திர பூர்வமாகப் பலர் அறிந்திருக்கின்றனர். மேல் நாட்டிலும் சரி, கீழ் நாட்டிலும் சரி, உலகப் பெரியாராக தோன்றியவர்களில், தாங்கள் வகுத்தமுறைகளுக்கும் திட்டங்களுக்கும் அழியாவரம் அளித்துப்போனவர்களெல்லாம் அஹிம்சையைக் கடைப்பிடித்தவர்களே. புத்தர், கிறிஸ்து, முகமது போன்ற மதஸ்தாபகர்களைவிட அலக்சாந்தர், சீஸர், நெப்போலியன் போன்ற சாம்ராஜ்ய

வீரர்கள் பிரசித்தியிலும் சேவையிலும் உயர்ந்தவர்கள் என்று வாதிப்பவர்கள் சிலரே.

சரித்திரம் ஒரு புறமிருக்க, சொந்த அனுபவத்திலிருந்தும் ஆராய்ச்சியிலிருந்தும் இதே முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது ஆத்திரத்தைவிட பொறுமைதான் சிறந்ததென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஒருதரம் சிறியவனுக்கு மறுதரம் சீறுவது இன்னும் எளிதாகிறது. அவனுடைய நரம்புகளும், தசைகளும், அறிவும், உணர்ச்சியும் அவனை அதேவழியில் இழுக்கின்றன. பொறுமையைக் காட்டுபவனும் இவ்விதமே பொறுமையை வளர்க்கிறான். பொதுவாக குணங்களின் வளர்ச்சிக்கு அப்பியாசமே முக்கியம். எப்பொழுதும் அனுஷ்டிக்க வேண்டுமென்று லட்சியமாகக் கொண்டாலொழிய நற்குணங்கள் ஓங்குவதில்லை. இதுமாத்திரமல்ல; தனி மனிதனின் குணவளர்ச்சிக்கு எப்படி ஒரு செயல் மற்றொரு செயலுக்கு உதவியாகவும், ஹேதுவாகவும் அமைகின்றதோ, அப்படியே தான் சமூக வாழ்க்கையிலும். வாதி சீறினால் பிரதிவாதியும் சீறுகிறான். ஒருவன் ஆத்திரமும் பொறுமையும் காட்டினால், தான் அவைகளை வளர்ப்பதோடல்லாமல் எதிரியிடம் மறைந்து கிடக்கும் அதே வித்துகளுக்குத் தண்ணீர் விடுகிறான். வைராக்கியத்தோடும் விநயத்தோடும் நல்வாழ்க்கை நடத்துபவனுடைய ஊரில் உள்ள மற்றவர்களும் ஒளவில் நல் வாழ்க்கையைப் பின்பற்றுகிறார்கள். 'கொடுங்கோல் செலுத்தும் மன்னன் நாட்டைவிட கடும்புலி வாழும் காடுநன்றே' என்று சொன்னது, அவ்வரசனால் வரும் தீங்கைமட்டும் எண்ணிச்சொன்னதல்ல, பொதுவாக அந்நாட்டில் நிலவும் அதர்மத்தை எண்ணித்தான் சொல்லியிருக்கவேண்டும். அமைதி நிறுவக்கூடிய செயல் ஒன்று நிகழ்ந்தால், அவ்வகைச் செயல்கள் பலவற்றிற்கு அது வித்தாக உதவும் என்பதை தெளிவாகக் கண்டுதான் குறளாசிரியர்

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்

என்று அழுத்தமாகக் கூறினார். இவை போன்ற கருத்துக்கள் ஒவ்வொரு நாட்டின் இலக்கியத்திலும் காணலாம். சிறப்பாக நம் நாட்டு இதிஹாசங்களும் புராணங்களும் இதைத்தான் ஆயிரம் கட்டங்களில் அறிவுறுத்துகின்றன.

நற்காரியம் செய்ய எந்த மார்க்கத்தையும் அனுஷ்டிக்கலாம். கொண்ட நோக்கத்திற்கும் அதை அடைவதற்குக் கையாளும் முறைக்கும் சம்பந்தமில்லை என்ற கொள்கையில் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு வாழ்க்கை கேவலமாவது தான் மிச்சம். விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்காது; மனிதன் நோக்கத்திற்கும் அதை அடைவதற்குக் கொள்ளும் முறைக்கும் இதே தொடர்பு உண்டு.

தீமை அணுகும் போது சாந்தத்தைக் கடைப்பிடித்தலும், தீங்கு செய்பவருக்கு நன்மை செய்வதும் தனி வாழ்க்கையில் எப்படிப் பலனளிக்கிறதென்பதைப் பார்த்தோம். பொதுவாழ்விலும் அரசியலிலும் இக்கொள்கை செல்லுமா? என்பது அடுத்த கேள்வி. தனி வாழ்க்கையில் சிறப்பளிப்பது பொதுவாழ்க்கையில் பயன்படாதென்பது ஒரு புதுக் கொள்கை. மேல் நாட்டு அரசியல் வாழ்க்கை முறைக்கு அஸ்திவாரமே யிது தான் என்பது நுட்பமாய் ஆராய்ந்தவர்கள் எவருக்கும் தெரியும். சொந்த வாழ்க்கையில் கேவலம், கோழைத்தனம், அக்ரமம், மோசடி என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுவதெல்லாம் மேல் நாட்டு அரசியலில் 'ராஜதந்திரம்' என்ற பாடோபத்துடன் பவனிவருகிறது. மேல் நாடு தான் நமக்கு எதற்கும் வழிகாட்டி என்ற சித்தாந்தம் கொண்ட இந்திய பிரமுகர்கள் பலர் இத்தத்துவத்தையே நமக்கு பிரகடனம் செய்கிறார்கள்.

"சத்தியமாவது அஹிம்சையாவது சார், இதெல்லாம் பாலிடிக்ஸ் (அரசியல்) லே நடக்காது சார்," என்று வெகு அலட்சியமாகப் பேசும் காரியவாதிகளை நான் பார்த்திருக்கிறேன். இதை வெளியே சொல்லாமல் மனதிலெண்ணியிருப்பவர்கள் இன்னும் எத்தனையோ பேர். ஆனால், இந்தியாவில் 1941-ம் வருஷத்தின்பின், அதாவது காந்திஜி தலைமை வகித்து இருபத்தைந்து வருஷங்களாக பலவித அற்புதச் சேவைகள் செய்த பிறகும் இவ்விதம் பேசுவது பெரும் பான்மையோருடைய சஞ்சல புத்தியையும் ஆராய்ச்சியின்மையையும் தான் காட்டுகிறது. அஹிம்சை வெற்றியளிக்காதென்றால், அஹிம்சையை பரிபூர்ணமாக நிராகரித்திருக்கும் பெரிய இடங்களில் எப்பொழுதும் வெற்றி ஏற்பட்டதா? கிடைத்த வெற்றிதான் நீடித்து நின்றதா?

ஒரு நூற்றூண்டுக்குள்ளாகவே சரித்திர சம்பவங்கள் நாடகக் காட்சி போல் வெகு துரிதமாக மாறி வந்திருக்கின்றன என்றும், ராஜ்யங்கள் பல தடவை நிறுவப்பட்டு, நிலைபெயர்ந்து, மறுபடியும் அடியோடு மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன என்றும், பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்கள் கூட அறிவார்கள். 'அஹிம்சையெல்லாம் வெறும் வேதாந்தம். ஆயுதத்துவம்தான் சரி' என்பவர்கள் மேலே விவரித்த சென்ற நூற்றூண்டின் அரசியல்போக்கில் ஒன்றும் குற்றமில்லையென்று கொள்பவர்கள். ஆனால் சமீப கால சரித்திரமும் சம்பவங்களும் மனிதன் அறிவுக்கும் ஆத்மாவுக்கும் ஆனந்தம் அளிக்கக்கூடியனவாயிருக்கின்றனவா ?

பொது வாழ்க்கையிலும் அரசியல் போராட்டத்திலும் அஹிம்சைக் கொள்கை இதுவரையில் தோல்வியைத்தான் கொடுத்திருக்கிறதா? அஹிம்சையைக் கொண்டே தென் ஆப்பிரிக்காவில் துன்புற்ற இந்தியர்களை காந்திஜி காப்பாற்றினர். இந்தியாவில் காயிராவிலும், சம்பரானிலும், பர்டோலியிலும் பூரண வெற்றி கிடைக்கவில்லையா? சுதந்திரப் போராட்டத்தில், சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் நாம் வெகு தூரம் முன்னேறியிருப்பதற்குப் பல காரணங்களிருக்கலாம். மிதவாதிகளின் சட்டபூர்வமான வாதங்களும், பயங்கர வாதிகளின் வெடி குண்டுகளும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் காட்டிய மாறுதலுக்கு ஓரளவு உதவியிருக்கலாம். ஆனால் தேச முழுவதும் சுதந்திர உணர்ச்சியைக் கிளப்பி, இந்தியன் ஒவ்வொருவனுக்கும் தன் நம்பிக்கையை ஊட்டி சுதந்திரம் அடையத்தான் வேண்டும் என்ற ஆவலையும் உண்டாக்கியது அஹிம்சை முறையே. இந்த மன எழுச்சியும் ஆவலும் உண்டாகிய பிறகு சுதந்திரம் கிடைத்தே தீரும். இவ்வித உன்னத நிலைக்கு நாட்டைக் கொண்டு வருவதற்கு காங்கிரஸ் அனுபவித்த கஷ்டமும் அளித்த பலியும் எவ்வளவு குறைவு என்பது அயர்லாந்தைப்போன்று சுதந்திரத்திற்குப் பாடுபட்ட இதர தேசங்களின் வரலாறுகளைப் படித்தால்தான் தெரியும். நீதியையும் அமைதியையும் ஏற்படுத்துவதே ஒவ்வொரு நாட்டு சமூகத்தின் நோக்கமாகும். அஹிம்சையைக் கடைப்பிடிக்கும் அளவில்தான் நிரந்தரமான நியாயமும் அமைதியும் நிலவும்.

அஹிம்சையைக் கொள்வதா, விடுவதா என்ற சிந்தனையெல்லாம் அதைவிட அடிப்படையான மற்றொரு பிரச்னையைப் பொறுத்தேயிருக்கிறது. பொதுவாக மனிதன் லட்சியங்களைப் பிரதானமாக வைத்து வாழ்க்கை முறையை எடுத்துக்கொள்வதா, அல்லது காரிய வாதம் என்ற லௌகீகக் கொள்கையையே நம்பியிருப்பதா, என்பதைத்தான் முடிவு கட்டவேண்டும். லட்சியப் பிரசாரம் இயற்கைக்கு விரோதமானது என்றெல்லாம் நான் கேட்டிருக்கிறேன். சிருஷ்டியின் சரித்திரத்தில், நன்மையும் தீமையும், அன்பும் அகங்காரமும், சாந்தமும் காமமும் கலந்து காட்சியளிக்கும் மனிதனை கடைசி அத்தியாயமாக ஆகிவிட முடியாது. விலங்கிலிருந்து வளர்ந்த மனிதன் தேவனாக மாறலாம். அதுதான் இயற்கையின் நியதி. இந்த நியதியை ஒட்டி வாழ்வதுதான் மனித தர்மம். அவ்வித வாழ்க்கை அளிக்கும் ஆனந்தம்தான் மேன்மையானது, நீடித்திருப்பது. மகான்களெல்லோரும் இவ்வுண்மையைத்தான் கண்டார்கள். நம்முடைய சிறிய அனுபவத்திலும் கூட நாம் இதை ஓரளவு கண்டிருக்கிறோம். 'தானடைவது ஆனந்தமல்ல, பிறருக் களிப்பதில் தான் ஆனந்தம்' என்ற உபநிஷத்து வாக்கியம் இயற்கையின் பூர்ணப்பொலிவைக் காட்டும் உண்மையே ஒழிய, அதற்கு விரோதமானதல்ல. கண்டதே காட்சி, கொண்டதே கோலம், என்பது உண்மையில் விலங்கு வேதாந்தம். அறிவு படைத்த காரணத்தினால் முன் யோசனையையும் கற்பனா சக்தியையும் வளர்த்துள்ள மனிதன் இந்த வேதாந்தத்தினால் திருப்தி அடைந்திருக்க முடியாது.

எந்த லட்சியத்தையும் பூர்ணமாய் அனுஷ்டிக்க முடியவில்லை என்பது வாஸ்தவம். காந்திஜியும் இதை ஒப்புக்கொள்ளுகிறார். 'மனிதன் சரீரத்திலுள்ள வரை, சத்தியத்தின் பூரண தெரிசனம் காணமுடியாது, அஹிம்சையை பூரணமாய் அனுஷ்டிக்க முடியாது' என்கிறார். அதனாலென்ன? லௌகீகத்தில் பூரண வெற்றி அளிக்கக்கூடாத திட்டங்களையெல்லாம் கைவிட்டு விடுகிறோமா? லட்சிய வாழ்க்கையில் வெற்றி தோல்வி என்பது இல்லை. லட்சியத்தில் எந்த அளவில் மனப்பூர்வமாய் ஈடுபடுகிறோமோ, அந்த அளவில் வெற்றி உண்டு.

பிரசித்திபெற்ற மேல்நாட்டு அறிஞர் மிஸ்டர் எச். ஜீ. வெல்ஸ் என்பவர் சென்ற வருஷம்

மனிதனுக்கு அத்தியாவசியமான உரிமைகள் என்ன என்பதுபற்றி ஒரு விவாதம் ஆரம்பித்து பல பெரியாரின் அபிப்பிராயங்களைக் கலந்துகொண்டு, மனிதன் உரிமைகளடங்கிய ஒரு சாஸனக் கட்டுரை வெளியிட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதற்கு காந்திஜி எழுதியிருந்த பதில் லட்சிய வாழ்க்கையின் சிறப்பையும், இந்திய நாகரிகத்தின் உண்மைத் தத்துவத்தையும் ஒருங்கே விளக்கிக் காட்டுகிறது:—

“நீங்கள் தயாரித்த நகல் சாஸனத்தை நான் கவனித்துப் படித்தேன். நன்றாகத்தானிருக்கிறது. நான் இதைவிட சிறந்த நகல்கூட தயாரிக்கக் கூடும். ஆனால் அதற்கு அவசியமென்ன? அதில் கண்ட உரிமைகளை மனிதனாய்ப் பிறந்தவனுக்கெல்லாம் யார் வழங்கப்போகிறார்கள்? கடந்த ஐம்பது வருஷமாக நான் நடத்திய பொது வாழ்க்கையிலிருந்து கண்ட உண்மை இதுதான்: எவன் தன்னுடைய கடமையைச் செய்துகொண்டே போகிறானோ, அவனை உரிமைகள் தானாகவே வந்து அடைகின்றன. என்னளவிலேயே இவ்வுண்மையை நான் கண்டிருக்கிறேன். வயதுவந்த நாளிலிருந்து என்னுடைய கடமையை நான் செய்துவந்ததன் பயனாக, என்னைவிட அதிக உரிமை பெற்றவர்களில்லை என்ற நிலையை நான் அடைந்திருக்கிறேன்.”

உங்கள் வியாபாரம் பெருக

‘காவேரி’யில்

விளம்பரம் செய்யுங்கள்.

THE SWADESHI STORES Ltd.

தி ஸ்வதேசி ஸ்டோர்ஸ் லிமிடெட்,

எம். ஸீ. எஸ். பில்டிங்,
பெரிய கடைத்தெருவு,
கும்பகோணம்.

ஸ்வதேசி துணிகளுக்காக
ஏற்படுத்தப்பட்டு
நடத்தப்பட்டுவருகிறது.

உடை திரம்! நவீன பாஷன்!!
விலை நயம்!!!

ஸ்வதேசியே ஸ்வராஜ்யம்

ஸ்வதேசியே வாங்குங்கள்.

சுட்ட குழாய்

"மாரார்"

ஆனித்திருமஞ்சனத்தன்று சிதம்பரத்தில் நடராஜ தரிசனஞ் செய்துவிட்டு, ரயில்வண்டியில் ஏறித் தஞ்சாவூருக்குத் திரும்பிவந்துகொண்டிருந்தேன். குற்றாலத்தில் ஒருவர் நானிருந்த வண்டியில் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டார். உட்கார்ந்தாரோ இல்லையோ, பேசத்தொடங்கி சரமாரியாகச் சொற்பொழிவு நிகழ்த்தினார். வயது அவருக்கு சுமார் முப்பத்தைந்து இருக்கலாம். தினசரி பத்திரிகைகளை விடாமல் வாசித்து விஷயங்களை நன்கு அறிந்துகொண்டவர் என்று காண்பித்தார்.

வழியில் ஆறுகளைப்பார்த்தவுடன் மேட்டூர் அணையைப் பற்றியும், அதனால் தஞ்சாவூர் ஜில்லா விவசாயிகளுக்கு நேர்ந்துள்ள ஸாதக பாதகங்களைப் பற்றியும், விரித்துச் சொன்னார். என்னிடமிருந்து பதில் ஒன்றும் அவர் அபேட்சிக்கவில்லை. மேன்மேலும் புதிய புதிய விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டு வந்தார். தன்னபிப்பிராயங்களில் யாதொரு தவறுதலும் இராது; எல்லோரும் அவைகளை ஒப்புக்கொள்ளும்படி இருக்கும்; அப்படி ஒப்பாதவர்கள் மடையர்கள் என்ற நிச்சயம் அவர் மனதில் உறுதியாக விருந்ததால் உரத்த குரலில் உபன்னியாசம் செய்துவந்தார்.



ஆடுதுறை ஸ்டேஷன் வந்ததும் அந்த ஊரில் விவசாய இலாக்காக்காரர்கள் நடத்திவரும் பயிர் பரீட்சைகளைப்பற்றியும் அவைகளால் பொது ஜனங்களுக்கு நலமெந்தமட்டுமென்றும் சர்க்காருக்கு அதனால் மொத்தச் செலவு துகை எவ்வளவுஎன்றும், அதற்குத் தகுந்த பிரயோஜனம் உண்டா என்றும் பிரசங்கித்தார்.

திருவடமருதூர் ஸ்டேஷன் மேடையில் மூன்றுநான்கு வயது சென்றவர்கள் சேர்ந்து நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தார். "இந்தச் சுட்ட குழாய்கள் இங்கே என்ன செய்கின்றன", என்று சொல்லிச் சிரித்தார்.

அவர்களை இன்னாரென் றறிந்தவரென்று நினைத்தேன். "என்ன ஐயா! சுட்ட குழாய் என்றீர்களே? எனக்கு விளங்கவில்லை; அதற்கு அர்த்தம் என்ன?" என்று கேட்டேன்.

'சுட்ட குழாயென்றால் தெரியாதா? சர்க்கார் வேலை முப்பது, முப்பத்திரண்டு வருஷம் பார்த்துவிட்டு பென்ஷன் வாங்கிக்கொண்டு சுகவாசிகளாக இப்போது காலம் போக்குகிறவர்கள். இவர்களில் பலர் வாசத்துக்குச் சௌக்கியமென்றும் செலவு கம்மி யென்றும் நினைத்து திருவிடமருதூரில் குடியேறியிருக்கிறார்கள். தினந்தோறும் இவர்களில் சிலரைக் கோவிலில் பார்க்கலாம்" என்றார்.

"அதென்ன ஐயா! பென்ஷன்தார்களை மாத்திரம் சுட்ட குழாய் என்றீர்களே? வேறு சுட்டகுழாய்கள் நம் நாட்டில் இல்லையோ?" என்றேன். நானும் பென்ஷன் வாங்கினவனென

தால் சுட்டகுழாய் என்ற பட்டம் என் மனதில் சுரீரென்று தைத்தது. ஆனால் அவரிடம் அதைக்காண்பித்துக் கொள்ளாமல் மீண்டும் சொன்னேன்.

"ராஜீய விஷயங்களில் சட்ட சபைகளுக்கு அங்கத்தினராகிப் பிறகுத் தங்கள் கக்ஷி பலமாகி அதிகாரத்துக்கு வந்ததும் மந்திரி பதவிக்கோ வேறு அமுலுக்கோ தங்கள் கக்ஷியின் சலுகையினால் வந்து, பிறகு கக்ஷிக்கு பலங் குறைந்ததும் தங்கள் உத்தியோகங்களை இழந்து திரிபவர்களைச் சுட்டக் குழாய்களெனப்படாதோ? புத்தியிலோ யுக்தியிலோ ராஜீய காரியங்களை நிர்வகிப்பதிலோ சிறிதேனும் சொந்த வல்லமை இல்லாமல், கேவலம் கட்சி ஒன்றின் சலுகையால் அதிகாரம் செலுத்திப் பிறகு அதை விட்டு நீங்கினவர்களுக்குத்தான் நீங்கள் சூட்டுகிற பட்டம் நன்றாகப் பொருந்தும்.

'இன்னும் சட்டசபை, தேவஸ்தானக்கமிட்டி முதலிய எலெக்ஷனுக்கு மூன்னால் தேர்ந்தெடுக்கும் உரிமையுள்ளவர்கள் மார்தட்டிக்கொள்வதைப் பார்த்ததில்லையா? இவர்களை அந்த ஸ்தானங்களை அபேக்ஷிப்போர் மிகவும் கொண்டாடுபவர்கள்போல் நடித்துத் "தங்கள் மேலானவாக்கை எனக்கே அளிக்கவேண்டும்" என்று வேண்டுகிறார்கள். எலெக்ஷன் தினத்தில் இந்த வோட்டுரிமையுள்ளவர்களைத் தேவர்களோ முனிவர்களோ என்று சொல்லத்தக்க மரியாதையுடன் மோட்டார் வண்டிகளில் அழைத்துக்கொண்டு வோட் செய்யுமிடம் போகிறார்கள். வோட் செய்துவிட்டு அவர்கள் வெளியில் வரும்பொழுது நாம் அவர்கள் முகத்தைப்பார்த்தால் சுட்ட குழாய்கள் என்று தானே உணருகிறோம் மறு எலெக்ஷன் மூன்று வருஷகாலம்வரையில் இவர்கள் என்ன செய்கிறார்கள்? தங்களிடம் வோட் பெற்று ஸ்தானங்களில் அமர்ந்தவர்கள் பொதுக் காரியங்களில் சிரத்தையெடுத்துச் சரிவர நடந்து வருகிறார்களா என்று பார்ப்பதுண்டோ? இல்லை; அப்படியானால் இவ்வுரிமையுள்ளவர்களை வோட் கொடுத்தபிறகு சுட்ட குழாய் என்று ஏன் சொல்லலாகாது?

"தெய்வமே என்று சர்க்கார் உத்தியோக முறைப்படிப் பொது ஜனங்களுக்கு தங்கள் ஆயுளில் பாதி காலம் உழைத்துப் பிறகு மூப்படைந்து காலத்தை யோட்டுபவர்களை மாத்திரம் இப்படிப்பரிகாசம் செய்கிறீர்களே! நெப்போலியன், ஐரோப்பா கண்டத்திலுள்ள மன்னர்களைக் கண்ணில் விரலைவைத்து ஆட்டிப் பல தேசங்களைக் கைப்பற்றிச் சக்கிரவர்த்தி என்ற பட்டம் வகித்துப் பிறகு விதிவசத்தால் இங்கிலீஷ்காரர்களால் தோற்கடிக்கப்பட்டு சிறையடைந்து பல வருஷம் தனியே ஒரு தீவில் காலத்தைப் போக்கும்படி நேர்ந்தபோது, அவரையும் சுட்ட குழாய் என்றே சொல்வீர்போலும்" என்று கொஞ்சம் உஷ்ணமாய் பதில் சொன்னேன்.

முன்னே வெகு நேரம் மௌனமாயிருந்த நான் இவ்விதம் பேசினதைக் கேட்டுச் சற்றுப் புன் சிரிப்புடன் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் ஆரம்பித்தார்.

"ஓகோ! நீங்கள் காரத்துடன் பேசுவதைப் பார்த்தால் நீங்களும் ஒரு பென்ஷன்காரர் என்று தோன்றுகிறது. கோபித்துக்கொள்ள வேண்டாம். நான் சொல்வதைச் சிறிது கேளுங்கள். எங்களூரில் இரண்டொருவர் சர்க்கார் பென்ஷன் வாங்கி வருகிறார்கள். அவர்களை தினசரி காணும்போது சுட்ட குழாய் என்று நான் சொன்னது தவறென்று நினைக்கமாட்டீர்கள். ஒருவர் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு கையில் காகிதமும் பென்ஸிலுமாக சதாகாலமும் தரிசனம் கொடுக்கிறார். அவர் பக்கத்தில் தடிமனான புத்தகம் இரண்டு மூன்று, ஏதோ வேதாந்த புஸ்தகங்களோ, அல்லது இக்காலத்துத் தத்துவ நூல்களோ இருக்கின்றன. நுட்பமான விஷயம் ஏதோ ஒன்றில் ஆராய்ச்சி செய்வதில் ஆழ்ந்திருக்கிறார் என்று நினைப்பீர்கள். நெருங்கிப்பார்த்தால் பத்திரிகைகளில் வரும் பகுத்தறிவு போட்டிக்காக விடாமுயற்சி செய்கிறாரென்று தெரியும். பக்கத்திலுள்ள புஸ்தகங்கள் அகராதிகள்.

"இன்னொருவர் எங்களூரில் பென்ஷன் வாங்கி வருகிறார். உத்தியோகம் செய்த காலத்தில் சம்பளம் கொஞ்சமானாலும் கிம்பளம் மிகுதி; சுமார் முப்பது நாற்பதினாயிரம் ரூபாய் மீற்றுவிட்டார். இப்போது அந்த சொத்திலிருந்து நல்ல வட்டிக்குக் கடன் கொடுக்கல் வாங்கல் செய்துவருகிறார். ஏழைகளிடத்தில் இரக்கமென்பது எள்ளளவுமில்லை. காலணாக்கூட வட்டி தான் தள்ளிக்கொடுப்பதில்லை என்று தற்புகழ்ச்சி செய்துகொள்ளுவார். சாயங்காலமானவுடன் விபூதியை நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் கனமாகப் பூசிக்கொண்டு தேவாலயம் சென்று அங்கே பிரதக்ஷிணம் அர்ச்சனை முதலியவை

களில் இரண்டொரு அணு செலவழித்து உத்தியோகத்தில் மேலதிகாரிகளைச் சுற்றித் உபசாரங்களாலும் பணச்செலவு செய்தும் எப்படித் தாஜா செய்தாரோ அப்படியே கோயில் கொண்டிருக்கும் கடவுளையும் ஏமாற்றி ஜீவகாலம் முடிந்தவுடன் இலவசமாக சிவலோகமடையலாமென்று நினைக்கிறார்போலிருக்கிறது".

இவ்வாறு உதவிச்சம்பளம் வாங்குபவர்கள் மேல் குற்றப்பத்திரிகை படிக்கத்துடங்கினர். நான் மெல்ல, "சரிதான் சுவாமி! ஒருவர் இருவர் நடத்தை உங்களுக்குக் கெடுதலாகத் தோன்றினால் ஊர் முழுவதையும் கொளுத்திவிடுவதா? சர்க்கார் பென்ஷன் வாங்காதவர்களிலும் எவ்வளவு பேர் இம்மாதிரி பொழுது போக்குகிறார்கள்? தங்கள் வசை ஏன் அவர்களுக்குக் கொஞ்சம் சேரக்கூடாது? இருக்கட்டும்—நீங்களே ஒரு பென்ஷன்தாராக இருந்தால் எப்படி காலக்ஷேபம் செய்வீர்கள்? தயவு செய்து சொல்லுங்கள்" என்றேன்.

"என்னைக்கிராஸ் பண்ணுகிருப்போலிருக்கிறது. அநேகம்பேர் வயது காலத்திலும் வியர்க்க விறுவிறுக்க உழைத்தே வயிறு வளர்க்க வேண்டியிருக்கிறது. அவர்களிடமிரங்கவேண்டியதே தவிர குற்றம் சொல்வதற்கிடமில்லை. ஆனால் ஐம்பது அறுபது வயது வரையில் ஏதோ போதுமான சொத்து சேர்த்து பிள்ளைகள் பெண்களுக்குப் படிப்பு கலியாணம் முதலியவைகளைச் செய்வித்து, அவர்களுக்குத் தன் சொத்தை விதித்துக் கொடுத்துவிட்டு, தங்கள் தங்கள் காரியத்தை அவர்கள் பார்த்துக்கொள்ளும் சக்தியடைந்தபிறகு பின்னும் பிள்ளைபெண்களின் குழந்தைகளுக்காக பாடுபட்டுக் கவலைகொண்டு கஷ்டப்படுவ தெதற்கு? நம் முன்னோர் தங்கள் பிள்ளைகள் போதுமான பிராயம் அடைந்ததும் சொத்துக்களை அவர்கள் வசம் ஒப்புவித்துவிட்டு வானப்ரஸ்தாசிரமம் என்று தீர்மானம்செய்து, வீட்டை விட்டுக் காட்டுக்குச் செல்லவில்லையா? அதே மாதிரி பணக்கவலையின்றி தங்களை இரட்சித்துக்கொள்ளும் சக்தி பெற்ற பிள்ளைகளையுடையவர்கள் ஏன் வைராக்கியத்துடன் வீட்டை விடக்கூடாது? இக்காலத்தில் வாசத்துக்குத் தகுந்த காடுகளில்லை, வாஸ்தவம்தான். காபியில்லாமல் கால் மணிக்கூடத் தள்ளமுடியாது என்பது முண்மை. ஆனால் காட்டுக்குப் போகாமலே காலத்துக்குத் தகுந்தபடி வானப்பிரஸ்தாசிரமத்தின் தருமத்தையனுஷ்டிக்கலாம்.

பிள்ளைகளுக்குப் பருவம் வந்தவுடன் ஊரையும் உறவினரையும் விட்டு, ஒரு கிராமத்திலோ நகரத்திலோ, தான் மாத்திரமோ பனைவியுடனோ குடியேறித் தன் பூர்வ ஆசிரம வாஸனையை மறக்க முயலவேண்டும். இரண்டொரு வருஷகாலம் பிள்ளை குட்டிகளை விட்டுப் பிரிந்தால் அவர்களிடம் வைத்துள்ள பற்றுக் குறுகும்; வைராக்கியம் மேலிடும். குஞ்சு குழந்தைகளுக்கு தலைநோவென்றால் வைத்தியம் பிடித்தவர்போல் வீட்டுக்கும் வைத்தியசாலைக்கும் நடந்து, தன்னுயிரையும் மனதின் நிம்மதியையும் பறிகொடுக்கவேண்டியதில்லை. ஏதோ நாம்தான் குடும்பத்துக்குப் பற்றுக்கோலென்று நினைத்து அல்லாடுவது மூடத்தனம். நாமிறந்தபிறகும் நம்மினத்தார் சுகமாக வாழ்வார்கள் என்ற ஞானம் வேண்டும். செய்யவேண்டிய கடமைகளை போதுமான அளவு செய்த பிறகு அவர்களுக்குச் செய்யும் தொண்டு நிறுத்தப்படவேண்டாமா?

"பிறகு தன் சக்திக்குத் தகுந்படி தன் யோக்யதைக்கு அநுகூலமான ஏதாவது ஒரு துறையில் பிரவேசித்து கிராமத் தொண்டு, நகரத்தொண்டு செய்வதில் நாட்களைக் கழிக்க வேண்டும். ஏழை எளியவர்களை தன்னினத்தாராகக்கொண்டு அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதில் பிரயாசைப்பட்டால் அதன் மூலமாக மனதில் ஒரு மகிழ்ச்சியும், தேகத்தில் ஒரு புத்துயிரும், ஆத்மாவுக்கு நிம்மதியும் ஏற்படும். பிள்ளை குட்டிகளுக்கு எவ்வளவு சொத்து சேர்ததுவைப்ப தென்பதற்கு ஒரு எல்லையுண்டோ? அதில் ஈடுபட்டவர்களுக்கு மனக்கவலையும் சரீரச் சோர்வும் தவிர வேறு என்ன லாபம் கிடைக்கிறது.

உபந்யாஸத்தை ஒருவாறு முடித்தார்.

"பிறருக்கு உபதேசம் செய்வதில் பண்டிதர் பலர். வைத்தியம் செய்பவர் தனக்கு நோவு வந்தால் தன் மருந்தை மறந்துவிடுவார்கள்" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டேன்.

இதற்குள் ஐயம்பேட்டை ஸ்டேஷன் நெருங்கியது. "என் நண்பர் அந்த ஸ்டேஷனில் இறங்கி போய்வருகிறேன் ஐயா, ஞாபகமிருக்கவேணும். ஏதாவது நான் சொன்னதில் குற்றங்குறைகளிருந்தால் மன்னிக்கவேண்டும்" என்று சொல்லிக் கைகூப்பி உத்திரவு பெற்றுக்கொண்டு மறைந்தார்.

OFFICE OF T. E. REC... MADRAS 22 AUG 1941

அரசியல் அகராதி

M. ராமஸ்வாமி B. A., B. L.

1. கேள்வி: "சங்கப் பலகை" என்றால் என்ன? அப் பெயர் எதனால் ஏற்பட்டது?

பதில்: வைசிராய் நிர்வாக சபைக்கு சங்கப் பலகை என்று பெயர். புராதன சங்கப் பலகை, புலவர்களுக்கு எப்படி நீண்டு இடங்கொடுத்ததோ அம்மாதிரியே வைசிராயின் நிர்வாக சபை ஸ்தானங்கள் எவ்வளவு மெம்பர்கள் வந்தாலும் இடம் தரும்.

2. கே: "இல்லை" என்ற சொல் எப்படி பிரசித்தமாக விளங்குகிறது?

ப: இந்தியர்கள் சுதந்திர சீர்திருத்தம் கேட்டால் "இல்லை" "இல்லை" என்று இந்தியா மந்திரி அமெரி துரை கதறிக்கொண்டுவருவதால் பிரசித்தமாயிற்று.

3. கே: "ஜனநாயகம்" என்றால் என்ன?

ப: இது ஒருவிதமான டானிக் மருந்து. இந்தியர்களுக்கு ஒத்துக்கொள்ளாது. வெள்ளைக்காரர்களுக்கு மட்டுமே இந்த மருந்து பிடிக்கும்.

4. கே: "சுதந்திரம்" என்றால் என்ன?

ப. இது ஒரு பிடிபடாத பொருள். இந்தியர்களுக்கு கிட்டாத பொருள். அதைப்பற்றி சிந்தனை செய்யவும் லாயக்கற்றவர்கள் இந்திய மக்கள்.

5. கே: "யுத்த முஸ்தீப்புகள்" என்பது என்ன?

ப: தெருவிலுள்ள விளக்குகள் அணைக்கப்பட்டு, மனிதர்கள் இருட்டில் மோட்டாரில் மோதிக்கொள்ளுதல்.

6. கே: "தலைவர்" என்றால் என்ன? உதாரணத்தோடு கூறுக.

ப: தலைவருக்கு ஒரு தலை உண்டு. மற்ற மெம்பர்கள் தலைவர் சொற்படி நடக்கவேண்டியதில்லை. தலைவர் என்பவரை எதிலும் மற்றவர்கள் கலக்கவேண்டியதில்லை. உதாரணம், முஸ்லீம் லீக்—ஜின்னா, பசுல் ஹக்.

7. கே: "ஒற்றுமை" என்றால் என்ன?

ப: இது இந்தியர்களை பீடிக்கக்கூடிய ஒருவகை கொடிய வியாதி. இந்த வியாதி இந்திய மக்களிடம் பரவாமலிருக்க பலவித மருந்துகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மருந்திற்கு குணம் இருப்பதாகவும் தெரிகிறது.

8. கே: "தங்கம்" என்பது என்ன?

ப: மற்ற ஐரோப்பிய நாடுகள், எப்படி பழய நியூஸ் பேப்பர்கள், மண், சுண்ணும்பு, கண்ணாடி, பீங்கான் முதலிய "ஜீவாதார"ப் பொருள்களை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்கின்றனவோ, அதேமாதிரி இந்தியர்களுக்கு உபயோகமில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்கு அபரிமிதமாக ஏற்றுமதி செய்யப்படும் ஒருவகைப் பொருள்.

9. கே: "சுயமரியாதை" என்றால் என்ன?

ப: பிறரால் மதிக்கத்தக்க யோக்கியதை இல்லாமல் தமக்குத்தாமே சுயமாக மரியாதை, கௌரவம் அளித்துக்கொள்ளுதல்தான்.

10. கே: "மிதவாதிகள்" யார்?

ப: அடிக்கடி அரசியல் சுழலில் அதிகமாக மாட்டிக்கொண்டு அவஸ்தைபடாத அதிர்ஷ்டசாலிகள். எவ்வளவு ஏமாற்றமடைந்தாலும் வெளியில் காட்டிக்கொள்ளாதவர்கள்.

11. கே: "காங்கிரஸ்காரர்கள்" என்றால் யார்?

ப: தேச துரோகிகளெனச் சிலரால் அழைக்கப்படுபவரும் இவர்கள்தான். சுதந்திரத்துக்காக பாடுபடுபவர்களென பொது மக்களால் போற்றப்படுகிறவர்களும் இவர்கள்தான். பிரிட்டிஷ் சர்க்காரால் உண்மை மதிப்பு வைக்கப்பட்டிருப்பவர்களும் இவர்கள்தான். முக்கியமாக, கட்டுப்பாடு உள்ளவர்கள். தேசவிடுதலைக்காக சண்டித்தனம் செய்து, ஜெயிலில் அடைபட்டு அவதிப்படுபவர்களும் இவர்கள்தான்.

12. கே: "வறுமை" என்றால் என்ன?

ப: இது இந்தியர்கள் பிறக்கும்பொழுதே கூட ஒட்டிக்கொண்டு வந்த ஒருவகை கர்மப் பிணி. இப்பிணி தீர இதுவரை செய்த உபாயங்கள் பலன் அளிக்கவில்லை.

13. கே: "கருப்பு" என்பதை விளக்குக.

ப: இது ஒருவகை நிறம். கருப்பு மனிதர்கள் என்றால் இந்தியர்கள். இந்திய மக்களில் சிலர் சிவப்புத் தோல் உடையவர்களாக

இருந்தபோதிலும் கருப்பு மனிதர்களே. பொதுவாக கருப்பு மனிதர்கள் தொத்து வியாதி பிடித்தவர்கள். ஆகையால் சுகாதார விதிகளை அனுசரிக்கும் வெள்ளைக்காரரின் ஹோட்டல்களில் இந்தியர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. இது ஒருவகை விஷவியாதியை சேர்ந்தது என்று தென் ஆப்பிரிக்காவில் வெள்ளைக்காரர்களால் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் கருப்பு மனிதர்களாகிய இந்தியர்கள் தென் ஆப்பிரிக்காவில் குடியேற லாயக்கற்றவர்கள். இந்த தொத்து வியாதி பரவாதிருக்க கடுமையான பல தற்காப்பு முஸ்தீப்புகளை வெள்ளைக்காரர்கள் அங்கே கையாண்டுவருகிறார்கள்.

14. கே: "அடக்குமுறை" என்றால் என்ன?

ப: இது ஒருவித விஷ வாயு. ஸிம்லா, டில்லி முதலிய வட்டாரங்களிலிருந்து முக்கியமாக இது பரவும். இந்தியர்களுக்கு "சுதந்திர தாகம்" அதிகரித்துவிட்டால் இந்த விஷ வாயுவை சர்க்கார் உபயோகித்துவிடுவார்கள். சில "முறைச் சுரம்" போல் அடிக்கடி அரசாங்கத்தாருக்கு இந்த யோசனை கிளம்பிவிடுவதால் "அடைக்கு முறை" என கூறப்படுகிறது.

15. கே: "வரி" என்றால் என்ன?

ப: இது சர்க்காரால் அப்போதைக்கப்போது மக்களுக்கு விதிக்கப்படும் ஒரு வகை தண்டனை!

16. கே: "குண்டர்க்கள்" என்றால் என்ன?

ப: இவைகள் பம்பாய், கல்கத்தா, முதலிய இடங்களில் சமீபத்தில் தோன்றி அட்டகாசம் செய்த ஒருவகை "வெறி நாய்கள்".

17. கே: "பிரசாரம்" என்பதை விளக்குக.

ப: இந்திய சர்க்காரால் ரேடியோ மூலமாயும், அவர் விளம்பரங்கள் மூலமாகவும் இந்திய மக்களுக்கு ஊட்டிவரும் ஒருவித மூலிகை ஆகாரம். இந்தியாவுக்கு சுதந்திரம் அளித்து விட்டால் இம்மருந்து இன்னும் அதிக பலனையளிக்கும் என்பது உலக பிரசித்தி பெற்ற ராஜீய டாக்டர்களின் தீர்மானமான அபிப்பிராயம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
199312
சென்னை-600 008

எல்லோருடைய அபிமானமும், ஆதரவும், அன்பும் நிறைந்த

R. சுந்தரேசய்யர் & ஸன்ஸ்,

பித்தளை, செம்பு, வெங்கலப் பாத்திரம்

இந்த கடையிலேயே தங்கள் தேவைக்கும் வேண்டியதை வாங்கி ஆதரிக்க கோருகிறோம்.

Prop:— R. சுந்தரேசய்யர்,

பொற்றாமரை வடக்கு, : : கும்பகோணம்.

RELIABLE HOUSE FOR CLOTHINGS

Visit our

R. S. & Co.,

Premier Piece Goods Concern

Big St, KUMBAKONAM.

கிராம சமுதாயம் - ஓர் பகற்கனவு

"தென்னன்"

பொன்னிக்குக் கலியாணம். மணமக்கள் இருவரும் விரும்பி, குடும்பத்தின் பெரியோர் சம்மதித்து, கிரஹ நிலைகளை ஆராய்ந்த ஓதுவாரின் அனுக்கிரகத்துடன் நடைபெறும் திருமணம். ஊரார் எல்லோரும் உபசாரங்களும் வெகுமதிகளும் விருந்தும் பெறுகின்றனர். சம வயதினருக்கு வேடிக்கையும் கொண்டாட்டமும். வேத மந்திரங்கள் ஒலிக்க, பூமாரி பொழிய, சிறுவர் சிறுமியர் களிக்க, வயது வந்தவர்கள் குறுநகை கொள்ள நடக்கின்றது மணக் கோலம். உயர்ந்த மேளம். கோவிலிலும் விசேஷ உற்சவம். உழுதுண்டு வாழும் குடும்பமாயினும் கடன் சுமையில்லாமல் தம் சொந்தக் காணியை தம் சொந்த உழைப்பால் பயிர்செய்து வாழ்கின்ற குடும்பம். ஆவணி மாதம். பச்சைப் பசேரலன்று வெகுதூரம் பரந்த கழனிகள் நடுவே ஊர். அடிவானத்தில் சிறு குன்றும், காடும், மேய்ச்சல் நிலமும். ஊரில் உழுதுண்டு வாழ்பவர்கள் மட்டுமல்ல, தொழுதுண்டு பின் செல்பவர்களும், வீடு வாசல், தோட்டம், ஆடு மாடு, தனதானியங்கள் பெற்றவர்களாயிருக்கின்றனர். ஒரு காலத்தில் தீண்டாச்சாதி எனப்பட்டவர் இப்போது இல்லை. தீண்டாமை என்றவழக்கம் தொலைந்துபோய்விட்டதால்!

ஊரில் கச்சேரி, பாடசாலை, பள்ளி, மருதி, கோயில், இவைகளே உயர்ந்த கட்டிடங்கள். தலை கிறுக்கி, மனம்போன போக்கில் கட்டிய மாளிகைகளும் பங்களாக்களும் காணப்படவில்லை. அடர்ந்த மர நிழலுடன் திகழ்கின்ற விசாலமான தெருக்கள், வீதிகள். வீதிகளின் இரண்டு வரிசையிலும் பாழ்களில்லாமல் ஏறக்குறைய ஒரே மாதிரியாகக் கட்டப்பெற்ற அழகிய வீடுகள். வீட்டுக்காரர்களே தத்தம் வீட்டின் முற்பாகத்திலுள்ள தெருவீதியை சுத்தமாகவும் அழகு செய்தும் வைத்துக் கொள்கின்றனர். பேரறிவாளரான ஊரின் நாட்டாண்மைக்காரருடைய கண்காணிப்புக்கும் விழிப்புக்கும் அறிகுறியாக குப்பைத் தொட்டிகள், தெரு விளக்குகள், பட்டாளக்காரர் அணி வகுத்து நிற்பதுபோன்ற விருட்ச வரிசைகள், குப்பை செத்தை சிறிதுமில்லாத வீதிகள், நாலா திசையிலும் ஊரை மற்ற ஊர்களுடன் பிணைத்துக்கட்டிய நீண்ட சாலைகள் காணப்படுகின்றன. ஆவணி மாதம் போன்ற விழாக்காலங்களில் ஊரார் ஆபாலவிருத்தம். சிறுவர் சிறுமியர், வாலிபர்கள் விளையாட கிழவர்கள் காற்றுக்கொள்ள, ஊர் நடுவில் விசாலமான பசும்புல்போர்த்த நத்தம். சுத்தமான நீர் நிறைந்த ஊருணி. மழையில் பெருக்கெடுத்த வாய்க்கால்கள். குடிகள் எல்லாருக்கும் ஸ்நான பானத்திற்கு வேண்டிய வசதிகள். உணவிற்கும் மற்ற தேவைகளுக்கும் ஏராளமான விளை பொருகள்.

பொன்னி கலியாணத்தில் மிகப்பரிவுடன் விருந்துக்கு அழைக்கப்பட்ட ஊரார் அன்றி அயல் ஊர் ஜனங்களும், வெகு தூரத்தில் வசித்த பல ஜனங்களும் தொழிலாளர்களும் உணவுபெறுகின்றனர். கைராட்டையில் நூல் நூற்ற வயதுசென்ற பல ஆய்ச்சியர்கள் விருந்துண்கின்றனர். அவர்கள் நூற்ற சன்னமான நூல் பொன்னியின் கூறைச் சேலையின் ஊடு நூலும் பாவு நூலும் ஆயின அன்றோ? அதுபற்றி மணச்சேலையின் விலையில் ஒரு பகுதி அவர்களுக்குச் சென்று கலியாண விருந்தில் அவர்களுக்கு ஒரு பங்கு அளிக்கின்றது. அவ்வாறே சரிகை நூல் செய்வதில் தேர்ச்சி பெற்ற சூரத்துத் தொழிலாளிக்கும், கொள்ளேகாலில் பட்டு நூற்கும் பட்டு நூல்காரர்களுக்கும், இவை யாவற்றையும் சேர்த்துச் சேலையாக்கிய உள்ளூர் அல்லது அயலூர் நெசவுக்காரருக்கும் விருந்தில் பங்கு ஏற்படுகின்றது. பொன்னி சீராகப் பெற்ற வெள்ளிப் பாத்திரங்களையும், வெங்கல பித்தளைப் பாத்திரங்களையும் செய்கின்ற கன்னார்கள், விசுவகர்மிகள் தாம் அடித்து வார்த்துக் கடைந்து எடுக்கும்போதே அவர்கள் விவாக முகூர்த்தத்தில் கலந்து கொள்வதை நன்றாக உணர்ந்து காரியம் செய்கின்றனர். சில போது அவர்களை முன்னதாகவே அழைத்து பாக்கு வெற்றிலை வைத்து உபசரித்து, வேண்டிய பாத்திரங்களைப் பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. பொன்னியின் திருமங்கிலியத்துக்கு தட்டாரிடம் ஏற்பாடு செய்வதற்குக் கூட நல்ல வேளை பார்க்க வேண்டும். கலியாண வீட்டுக்காரர் தட்டானைப் பாக்கு வெற்றிலை வைத்து உபசரித்து திருமங்கிலியத்திற்கு பொன்னைக் கொடுப்பது போலவே, அதே பயபக்தியுடன் தட்டானும் சுப வேளை பார்த்து, பரம்பரை வழக்கப்படிக் கடவுளைப் பிரார்த்தித்து நோன்பிருந்து பெரிய பொறுப்புணர்ச்சியுடன் பொன்னை உருக்கி வேலை துவக்குகிறான். குயவர் கலியாணத்திற்கு வேண்டிய சட்டிப் பானைகளைத் தயார் செய்கின்றார்கள். நாவிதர் சில ஊர்களில் 'மங்களவாடு' வாகவிருந்து நாயனம் வாசித்து, மணமக்களை அலங்கரித்து தூது செல்வது முதலிய சேவைகளையும் செய்கின்றனர்.

உண்மை லக்ஷியத்தின்படி இந்திய கிராமசமுதாயம் ஒருவரையொருவர் அண்டிநிற்கும் பல தொழி

லாளர்களையும் ஜாதிகளையும் அன்பு, உழைப்பு, பரஸ்பர சகாயம், நம்பிக்கை என்ற பல வர்ண பட்டுக் கயிறுகளால் ஒன்று சேர்த்துக் கட்டிப் பிணைக்கும் பெரிய முறையாகும். இந்த வாழ்க்கை முறைப்படி தொழிலில் எவ்வளவு வித்தியாசமிருந்தபோதிலும் செல்வ நிலையில் பெரிய வித்தியாசங்களுக்கு இடமில்லை. அந்நிய நாட்டு வர்த்தகப் பொருள்களுக்கும் இடமில்லை தேவைக்கு அதிகமாக சொத்துரிமையைப் பெற முடியாத அமைப்பு இந்த சமுதாயம். பயிர்த்தொழில் செய்வோர் பெறும் விளைபொருள்கள் அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், நல் வாழ்வு வாழ்வதற்கும் உதவும். மற்ற சுதேச சகோதரர்களுக்கும் உரியவை. இந்திய விளைபொருள்கள் இந்தியாவிற்குள் அயல் ஊரார்களுக்கு உணவாகும்; இந்தியாவுக்கு வெளியே அயல் நாட்டாருக்கு உணவாகாது. ஏனெனில், இந்திய விவசாயிகள் இம்முறையில்தான் நாட்டினுள்ளிருந்து தமது சகல தேவைகளையும் பெற முடியும்.

இந்திய உணவுப்பொருள்கள் இந்தியாவிற்குள் உணவாகும், இந்தியாவுக்கு வெளியே ஏற்றுமதியாகச் செல்லும்போது அயல் நாட்டாருக்கு அதே விதம் உணவாகாது என்பது ஒரு வியாபார தந்திரம். வியாபார தந்திரம் நன்றாக அறிந்தவர்களே ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை நடத்துவார்கள். ஸர்வ தேச வர்த்தகர்கள் ஒரு தேசத்திலிருந்து அதன் விளைபொருள்களை மற்றொரு தேசத்திற்கு விற்கக் கொண்டு போகிறார்கள். அதனால் அவர்கள் அதைப் பணமாக அல்லது லாபம் அளிக்கும் பண்டமாக மதிக்கிறார்களேயன்றி உணவுப் பொருளாக மதிக்கவில்லை. அதனால் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விளைபொருள்கள் உண்பதற்கு உதவாத நாணயமாக மாறிவிடுகிறது. இந்த மர்மம் ஆராய்ந்துணரத் தக்கது. சூட்சுமம் விளங்காவிட்டால் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டுமென்று வரம்பெற்ற மைடாவின் கதையை நினைத்துக்கொள்ளலாம்.

கிராமச் சமுதாயம் என்ற புராதன ஏற்பாட்டில் பல வகைகளும் வித்தியாசங்களும் உள்ளன என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ரத்தினங்களில் எத்தனை வகை நிறம்? இந்திய நாகரீகம் என்பது கிராம சமுதாயம் என்ற பலவித ரத்தினங்களால் அமைக்கப்பெற்ற மேகலை. கற்களின் ஒளியிலும், நிறத்திலும், குணத்திலும் பல வேற்றுமைகள் இருந்தபோதிலும் அவையாவும் இந்தியத்தாய் அணியும் மேகலையில் பதிந்த இரத்தினங்கள். ஆபரணத்தின் அழகு அந்தக்கற்கள் ஒன்று சேர்ந்து அழகுடன் அமைந்திருப்பது என்பதில் ஐயமில்லை.

Raman & Raman, Ltd.,
Automobile Engineers, Kumbakonam,
offer a
Business-like
Unique
Simple
Systematic
Economic
Regular
Valid
Ideal
Comfortable
&
Efficient.
Quick running
Time saving
and
Money saving.
BUS-SERVICE
between Kumbakonam & Tiruvarur.
On previous notice, we can supply decent buses at concessional rates, for pilgrimage-tour, picnics, marriage parties and for educational tour for College and School students, under efficient supervision.
For details please enquire at our Registered Office
Nageswaran North St., Kumbakonam.
(*Undertake every kind of Automobile repairs.*)

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்காரும் :: :: :: ஸ்திரீகள் முன்னேற்றமும்

"குகப்ரியை"

"பெரும்புயல். அரசியல் வானத்திலே ஒரே இருள் சூழ்கின்றது. மேகங்கள் மின்னுகின்றன. இடிகள் குமுறுகின்றன. இந்த நெருக்கடியான நிலையிலே மைலாப்பூர் லஸ் சர்ச் ரோட்டின் கோடியிலே ஒரு சிம்மத்தின் கம்பீரமான கர்ஜனை அண்டங்கள் அதிரும்படி எழுகின்றது." என்று ஒரு சமயம் ஒரு பத்திராசிரியர் எழுதியிருந்தார். இந்த அழகிய வர்ணனை எவர்பொருட்டு எழுந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை.



நமது தாய் நாட்டிலே, வட நாட்டிலும் சரி, தென்னாட்டிலும் சரி, ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸஐயங்காரின் பெயரை அறியாத மேதாவிகளோ, குடிமக்களோ ஒரு சிலரேனும் இருக்க முடியுமா என்பதைச் சொல்ல முடியாது. ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் அரசியலிலிருந்து விலகியிருந்த பொழுது, அரசியல் வானத்திலே இருள் சூழ்ந்தால் நான் மறுபடி வெளியே வருவேன் என்று கூறினர். அதையே முற்குறித்த ஆசிரியர் இப்படிக் குறித்திருந்தார்.

இதிலிருந்தே ஸ்ரீமான் ஐயங்கார் அவர்களைப்பற்றி அரசியல் துறையிலே கேட்டிராதவர்கள் மிகச் சிலரே இருக்கக்கூடுமென்பதை ஊகிக்கலாம்.

நான் முதன் முறையாக பொது மேடையிலே அவரைக் கண்டபொழுது 'சிம்ம கர்ஜனை' என்று ஆசிரியர் எழுதிய வார்த்தைகள் வெறும் கற்பனையன்று, இதயத்திலிருந்து எழுந்த உணர்ச்சி ததும்பும் சொற்கள்தான் என்றே எண்ணினேன். மேலும் அவரது சொற்கள் சிம்மத்தின் கர்ஜனைபோன்ற காம்பீர்யத்துடன் வேகமாய்ப் பாய்ந்தோடும் ஆற்றுப்பெருக்கே போல் மக்களின் மனதைத் தன்பால் கவரத்தக்க தன்மையுடன் ஓடும் இயல்புடையது என்பதை அன்றே முதன் முறையாகக் கண்டேன். ஆகவே அரசியல் துறையில் அவரைப்பற்றி என்போன்ற சாமானியர் எழுதக்கூடியது ஏதும் இல்லை. அவசியமுமில்லை.

தவிர, நமது தாய் நாட்டிற்கு எத்தகைய சீர்திருத்தம் வேண்டுமென்பதைப்பற்றிய அவருடைய அபிப்பிராயங்கள் மிகச் சிறந்தவை. தீண்டாமை, சமூக சீர்திருத்தம் இவைகள் சம்பந்தமாய் அவருடைய உயர்ந்த நோக்கங்கள், சட்ட சம்பந்தமாய் அவரது அபாரமான பேராற்றல், அதன் மூலமாய் அவர் செய்த அருஞ்செயல்கள், அவரது அருங்குண விசேஷங்கள் இவைகளைப்பற்றி பலர் எழுதியிருக்கிருர்கள். எழுதிக்கொண்டே இருக்கிருர்கள். ஆகவே அவைகளைப் பற்றி நான் எழுத விரும்பவில்லை.

ஆனல் அவர் பெண்கள் முன்னேற்றத்திற்கு எந்தெந்தவிதமான செயல்கள் செய்திருக்கிருர், அவர் பெண்கள் விஷயத்திற் கொண்டிருந்த நோக்கம் எப்படிப்பட்டது, பெண்களைப்பாதிக்கும் சட்ட சம்பந்தமான விஷயங்களில் அவருடைய அபிப்பிராயம் என்ன என்பதைப்பற்றி வெகு சிலரே அறிவர்.

ஆண்களும் பெண்களும் சமூகத்தின் இரு கண்கள் என்பதே அவர் கொள்கை. **1910, 11**-ம் வருஷங்களில் ஆசாரச் சீர்திருத்தத்தையொட்டி மிகப் பலமான கொள்கைகளைப் பிரசாரம் செய்துவந்திருக்கிருர். அந்த நாளிலே பால்ய விவாகத்தினுலும், விருத்த விவாகத்தினுலும் ஏராளமான தீமைகள் பாவுகின்றன.

பால்ய விவாகத்தைத் தடுத்தும் ருதுமதி விவாகத்தை ஆதரிக்கவேண்டுமென்றும் வெகு தீவிரமாக முயற்சி செய்தார்.

பிற்காலத்தில் சாரதா சட்டம் மத்திய சட்ட சபையில் விவாதத்திற்கு வந்தபொழுது அதை மிகப் பலமாக ஆமோதித்ததோடல்லாமல் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் வெகுவாய் முயற்சித்தார்.

பெண்கள் கல்வி கேள்விகளில் சிறந்த அறிவும் ஆற்றலும் உள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பதே அவர் கொள்கை. ஆனால் ஒவ்வொரு பெண்ணும் உயர்தரக் கல்லூரிகளிற் படித்துப் பட்டம்பெற வேண்டுமென்றோ அல்லது உத்தியோகம் செய்து வாழவேண்டுமென்றோ அவர் அபிப்பிராயப்படவில்லை.

அறிவு வளர்ச்சிக்குத் தேவையான கல்வியைப்பெண்கள் கற்று கலா சுந்தரிகளாக விளங்கவேண்டும்; இல்லறத்தை நல்லறமாய் நடத்தி வீரத்தாய்மார்களாகவும் கிருகலக்ஷ்மிகளாகவும் வாழவேண்டும் என்பதே அவரது பொது நோக்கம்.

ஆனால் எதிர்பாராத சமய சந்தர்ப்பங்களினால் ஒரு பெண் திக்கற்று தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருந்தால், அவள் பிறருக்குச் சுமையாய் வாழ்வதைவிட தன் கையே தனக்குதவி என்று உத்தியோகம் வகிக்கலாம் என்று அவ்வப்பொழுது சொல்வதுண்டு. "அப்படி உத்தியோகம் வகிக்க முற்படுவதானால் எல்லாத் துறைகளிலும் அவர்களுக்கு சம உரிமை அளிக்கப்பட வேண்டும்" என்பதை அடிக்கடி வற்புறுத்திக் கூறுவார்.

பெண்கள் சொத்துரிமை விஷயங்களிலும், விவாக விஷயங்களிலும் அவர் மிகப் பரந்த நோக்கமுடையவர். சென்னைச் சட்டப் பத்திரிகையின் பொன்விழா மலரில் அவரால் எழுதப்பட்டிருக்கும் கட்டுரை பொன்னே போல் போற்றத்தக்கது. அதிலே அவர் குறித்திருக்கும் சீர்திருத்தங்கள் பெண் குலத்தையே ஓர் படி உயர்த்தி ஹிந்து சமூகத்திற்கே ஒரு அணிகலனாகச் செய்யத்தக்கதாயிருக்கிறது.

நமது நாட்டில் பலதலைமுறைகளாக பெண்கள் தாழ்வாக மதிக்கப்படுகிறார்கள். விதி வசத்தால் இளமையிலேயே விதவையான பெண்களுக்கு, மகள், மருமகள், தாய் என்ற எந்த நிலையிலிருந்தாலும், பண விஷயத்திலும் சரி மற்ற விஷயங்களிலும் சரி ஒருவித மான சுதந்திரமும் இல்லாமல் தவித்து நிற்கிறார்கள். தமக்குத் தேவையான ஒரு கவளம் சோற்றிற்கும், ஒவ்வொரு பைசாவிற்கும் பிறர் தயவை நாடி, "குளிர்ந்தார் முகம் பார்த்து கோபித்தார் வாய் பார்த்து" என்றபடி, ஒரு ஆண் மகனது தயவையே எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறார்கள். இத்தகைய விஷயங்களை அவர் நன்றாய் உணர்ந்திருந்தார். இதன் பொருட்டு வருந்தியதோடன்றி இம்மாதிரி விஷயங்களில் பெண்கள் தாமே உணர்ந்து பரிகாரம் தேடிக்கொள்ள முன்வரவேண்டும் என்பதே அவரது பேரவா.

சமீபத்தில் திருமகள் ராதாபாய் சுப்பராயன் அவர்கள் சிறைபுகுமுன் ஸ்ரீமான் ஐயங்கார் அவர்களைச் சந்தித்து அவருடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, பெண்களின் தற்பொழுதைய நிலையைப்பற்றியும், அவர்களுக்குத் தேவையான சீர்திருத்தங்களைப் பற்றியும், இந்தத்துறையில் என்னென்ன செய்யவேண்டும் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லி, அவர் சிறை மீண்டு வந்தவுடன் தாம் கூறியவற்றைச் செயலளவில் செய்து வெற்றிபெற வேண்டுமென்றும் வற்புறுத்திச் சொன்னாராம்.

ஃ ஃ ஃ ஃ

சென்னையில் 1917ம் வருடம் முதல் இந்திய மாதர் சங்கம் என்ற பெயரால் ஒரு ஸ்தாபனம் நடத்தப்பட்டுவருகிறது. இந்தச் சங்கத்தின் மூலமாக பெண்களுக்கு வேண்டிய உரிமைகளுக்காகவும், முன்னேற்றத்திற்காவும் பல பெண்மணிகள் வேலை செய்திருக்கிறார்கள். சட்ட சம்பந்தமான எந்த விஷயமும் புதிதாய் பிறப்பிக்கப்படும் சட்டங்களும் கவர்ன்மெண்டாரால் ஷை சங்கத்திற்கு அனுப்பப்பட்டு அபிப்பிராயம் கோரப்படும்.

இத்தகைய விஷயங்களில் ஸ்ரீமான் ஐயங்கார் அவர்களின் பேருதவியினால் பல சிக்கலான பிரச்னைகள், சட்ட சம்பந்தமான நுணுக்கமான விஷயங்கள் இவைகளை நாங்கள் தெளிவுபடுத்திக் கொள்ளுவோம். தெளிவு படுத்துவதோடல்லாமல், எங்களுடைய உண்மையான தேவைகளையும் விளக்குவார். அவரது அருந்தவப்புதல்வி அம்புஜம்மாள் அவர்கள் ஷை சங்கத்தின் காரியதரிசி, ஆகவே நாங்கள் வெகு சுலபமாய் அறிந்துகொள்ளவும் வசதி ஏற்பட்டது.

ஆனல் இந்த விஷயங்கள் கேட்பதற்கு ஏதோ சர்வ சாதாரணமான விஷயமாய்த் தோன்றினுலும் நடைமுறையில் இவைகளினுல் மிகச் சிறந்த ஒரு பயனை பெண்குலமே பெற்றுவிட்டது என்று சொல்லுவது மிகையாகாது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக கடைசியாக மிகமிக அருமையான ஒரு செயலைச் செய்திருக்கிறுர்.

பொதுவாக மக்கள் எல்லோருமே மரண சாசனம் எழுதுவதுண்டு. அதில் வீடு, வர்யில், சொத்து முதலியவற்றைத்தான் குறிப்பது வழக்கம். ஆனல் இவர் என்ன செய்தார்? தம்மகளுக்கு எழுதிய மரண சாசனத்தில் இவை எல்லாவற்றிற்கும் மேலாகச் சில வரிகள் எழுதியிருக்கிறுர். அதை ஆசிமொழி என்பதா? தீர்க்க தரிசனம் என்பதா? அல்லது பெண்கள் முன்னேற்ற விஷயத்தில் அவரது இதயத்திலே மறைந்துகிடந்த ஆவலின் கனி என்பதா? அந்த மந்திரச் சொற்களின் கருத்து பின்வருமாறு—

மாதர் முன்னேற்றத்திற்கான செயல்களை என்றென்றும் செய்துகொண்டேயிருப்பாயாக. உன் அன்னையார் உடனிருந்து உதவி செய்துகொண்டேயிருப்பார்.

சங்கீதத் துணுக்குகள்.

V. முத்துஸாமி, B. A.

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டில் கல்யாணம் நடந்தது. அதில் பிரபல வித்வான் ஒருவர் இஞம் கச்சேரி செய்தார். கச்சேரி முடிந்த பிறகு, வித்வானுக்கு மாலை சூட்டிவிட்டு "ஐயர்வாள்! ஏதோ பொன் வைக்கிற இடத்தில் பூ வைக்கிறேன்," என்று சொல்லிமுடிப்பதற்குள் வித்வான், புன்சிரிப்புடன் "இன்ஸ்பெக்டர்வாள்! நீங்கள் சொன்னது மாதிரி இதுவரை வசனம் சொல்லித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது இவ்விடத்தில் பிரத்யக்ஷமாகவே பார்த்துவிட்டேன்." என்று கூறினர்.

ஃ ஃ ஃ

காலஞ்சென்ற திருக்கோடிக்காவல் கிருஷ்ணையரை ஒருவர் "அண்ணு, இன்றையதினம் நம்ம கோவிலில் விடையாற்று உத்ஸவம் நடக்கிறது. அதற்குத் தாங்கள் அவசியம் வந்திருந்து கச்சேரி செய்யவேணும்," என்று வேண்டிக்கொண்டார். அதற்கு கிருஷ்ணையர் "டேய், உத்ஸவத்துக்கு கச்சேரி என்னடா வேண்டியிருக்கு, பலமா அதிர்வேட்டைப் போடச்சொல்லுடா," என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

ஃ ஃ ஃ

சமீப காலத்தில் காலஞ்சென்ற பிரபல மிருதங்கக்காரர் கச்சேரிக்குப்போன இடத்தில் ஒருவரைப் பார்த்து "சாமி! சோடா இருக்குங்களா?," என்று கேட்டார். அதற்கு அந்த ஆசாமி "இல்லை," என்று பதில் சொன்னுன். மறுபடியும்,

"சாமி! கலர் இருக்குங்களா?"

"இல்லையே,"

"பின்னே என்னதான் இருக்குதுங்க?"

"எம்டி (Empty) தான் இருக்கு."

"சரி, அதுலேதான் ஒண்ணு ஒடைச்சு கொண்டுவாங்க சாமி!!."

ஃ ஃ ஃ

பெரிய ஜமாக்களுடன் கச்சேரி நடக்கிறது. மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமான கச்சேரி மணி பதினென்று ஆகியும் முடியவில்லை. கச்சேரிக்குப் பிறகு புரோகிறுமில் பாகவதர் கதை போடப்பட்டிருந்தது. என்ன சொல்லியும் பாடகர் கச்சேரியை நிறுத்தும் வழியாயில்லை. பார்த்தார் பாகவதர் கோபாவேசத்துடன் எழுந்திருந்து "ஓய்! நீர் என்ன விடிய விடிய கச்சேரி செய்வீர்போலிருக்கே," என்று கேட்டார்.

பாடகர், "ஆமாங்காணும், ஆமாம்!! நான் விடிய விடிய கச்சேரி பண்ணுவேன். நீர் வெடிஞ்சால் கதைபண்ணலாம்.'

கன்னூஞ்சல்

K. சுந்தரம்மாள்

தக்ஷிணாயணம் முடிந்துவிட்டது. உத்தராயண ஆரம்பதினம். கன்னிப்பெண்களும் பிரும்மசாரிகளும் ஆவலோடு எதிர்பார்க்கும் தைமாதம் பிறந்துவிட்டது. "உத்தராயண புண்யகாலே சூரிய நாராயண ஸ்வாமினே நம:" என்று, வேதப் பிராமணர்கள் ஒவ்வொரு வீட்டிலும் மணியடித்துப் பூஜை பண்ணிவைத்துக்கொண்டிருக்கிறார்கள். சிறுவர் சிறுமியர்கள், கரும்பு எப்பொழுது தின்னலாம் என்ற ஆவலோடு, பூஜையை வெகு கவனமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பெண்களெல்லோரும் மஞ்சள் கொத்துக் கட்டி 'சூர்ய சந்த்ர' சித்ரமெழுதிய பொங்கல் பானையை அடுப்பில் ஏற்றிவிட்டு கிழக்கு திக்காக பால் வழிகிறதா என்று கவனமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். புதிதாய் வந்த நாட்டுப்பெண்களுக்கு மாமியார்கள் "பொங்கல் பானையை நிதானமாக வை, தெற்கு திக்கில் சாய்வாக வைக்காதே" என்று புத்தி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதாவது கிழக்கு திக்கில் கொஞ்சம் சாய்வாக வை என்று அர்த்தம்.

இவ்விதமாக மாயூரத்திலுள்ள ஜனங்கள் மகர சங்கராந்தியைக் கொண்டாடினார்கள்.

வக்கீல் சிவசங்கரன் மனைவியும் அந்த வருஷம்தான் புக்ககம் வந்தாள். பிறந்தகத்திலிருந்து, சங்கராந்திக்காக, வெள்ளியினாலான பூஜாப் பாத்திரங்கள், பொங்கல் பானை வகையரா (வெண்கலம்), மற்றும் அங்கமணி சாமான்கள் எல்லாம் ஏதேஷ்டமாக செய்திருந்தார்கள். சிவசங்கரன் லக்ஷ ரூபாய்க்கு அதிபதி. ஏகபுத்ரனானதால் அவனுக்குப் பெண் கொடுத்தவர்கள் ஊரிலெல்லோரையும் விட மிகவும் உயர்வாக சீர் வகைகள் செய்து அவனது பெற்றோரை திருப்தி செய்விக்க வேண்டுமென்று இவ்வளவும் செய்து, வெள்ளியினாலே ஒரு சிறிய கரும்புங்கூட செய்து வைத்திருந்தார்கள். சிவசங்கரன் தந்தை நீலகண்ட அய்யரும், அவன் தாய் காமாக்ஷி அம்மாளும் சாப்பிட்டுவிட்டு கூடத்தில் கட்டப் பலகையை தலைக்கு வைத்துப் படுத்துக் கொண்டிருந்தார்கள். காமாக்ஷி அம்மாள், அன்று பால் பொங்கின அழகையும், நாட்டுப் பெண்ணின் சீர் வரிசைகளைப்பற்றியும் சொல்லிக்கொண்டிருந்தாள். நீலகண்ட அய்யர், "ஆமாம், அவர்கள் சீர் வரிசைகள் அவர்கள் சக்திக்கு அதிகமாகவே செய்திருக்கிறார்கள். எல்லாம் மிகவும் நன்றாக இருக்கின்றன என்றார்." "எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. இந்தப் பூஜைப் பாத்திரம் கொஞ்சம் கனமாக இருக்கலாம். 'வெண்கலப்பானையும் அழகு போராது" என்று "ஆனைமேல் அங்கமணி வந்தாலும் யானைவால் கூழை என்பதுபோல்" இயற்கையாக உள்ள ஸ்திரீ சுபாவத்தைக் காட்டி விட்டாள்.

நீலகண்ட அய்யர் இவைகளைக்கேட்டு புன்சிரிப்பாகச் சிரித்தார்.

'"என்ன சிறிக்கிறீர்கள்? நான் சொல்லுவதெல்லாம் உங்களுக்குக் கேலிதான். உள்ளதைச் சொன்னேன். ஒரு காரியம் கேளுங்கோ, நாட்டுப்பெண் ரொம்பச் சமர்த்து. அதிர்ஷ்டக்காரி. இன்றைக்கு பொங்கல் பானையை எவ்வளவு நிதானமாக அடுப்பில் வைத்தாள் தெரியுமா? கிழக்குத்திக்கில் பால் பொங்கின அழகென்ன? அப்பவே இவள் அதிர்ஷ்டக்காரியென்று நினைத்துவிட்டேன்" என்றாள்.

'இவ்வளவாவது சொன்னாயே, சந்தோஷம்' என்றார் நீலகண்டய்யர்.

'இப்பொழுது என்ன சொல்லிவிட்டேன் நீங்கள் இவ்வளவு சலிப்படைய' என்றாள் காமாக்ஷி அம்மாள்.

பார்த்தார் நீலகண்டய்யர், இனிமேல் பேச்சுக் கொடுத்தால் வீண் விவாதத்தில் வந்து சேரும் என்று நினைத்துத் தூங்குவதுபோல் கொஞ்ச நேரம் பாவனை பண்ணி, இலேசாக குறட்டையும் விட்டார்.

"என்ன? தூங்கிவிட்டீர்களா. அதற்குள்ளேயா? எப்படித்தான் தலையைச் சாய்த்தவுடன் தூக்கம் வருகிறதோ தெரியவில்லை" என்று சொல்லிவிட்டு, மெதுவாக எழுந்து எதிர் வீட்டு நாட்டுப்பெண் என்னென்ன சீர் வரிசைகள் கொண்டுவந்திருக்கிறாள், என்று விசாரிப்பதற்காக எழுந்து வெளியே வந்து, "என்ன பால் பொங்கிற்று?" என்று கேட்டுக்கொண்டே எதிர் வீட்டில் நுழைந்தாள்.



அய்யருடைய பொய்த்தூக்கம் நிஜத் தூக்கமாகி நீண்ட குறட்டையும் வந்துவிட்டது.

சிவசங்கரன் மனைவி சமையலுள் வேலையை முடித்துக்கொண்டு மெள்ள கூடத்தை எட்டிப் பார்த்தாள். மாமியாரைக் காணவில்லை; வெற்றிலைத் தட்டை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றாள். சிவசங்கரன் நடு ஹாலில் தொங்கும் ஊஞ்சலில் உட்கார்ந்து

கொண்டு படித்துக்கொண்டிருந்தான். வெற்றிலைத் தட்டை ஊஞ்சலில் வைத்துவிட்டு சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நின்ருள். அவன் வேணுமென்றே திரும்பிப் பாராமல் வெகு கவனமாகப் படிப்பவன்போல் படித்துக்கொண்டிருந்தான்.

சற்று நேரம் பார்த்தாள்; பேசவில்லை. 'அம்மாடி இன்றைக்குக்கூட என்ன படிப்போ' என்று சொல்லிக்கொண்டு அவன் கையிலிருக்கும் புஸ்தகத்தை வெடுக்கென்று பிடுங்கி ஊஞ்சலிற்கடியில் போட்டுவிட்டாள்.

"சசிகலாவின் தரிசனம் கிடைக்கவில்லையே தனிமையைப் போக்குவதற்கு 'சசிகலா சுயம்வரத்தை' யாகிலும் படித்தால் சசிகலா நாமத்தை உச்சரிக்கலாமே என்று படித்தேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னுன்.

"ஓஹோ நீங்கள் சுயம்வரம் படித்தீர்களா, ஆனுல் நான் ஊஞ்சல் பாடுகிறேன்" என்று சங்கிலியை அசைத்து ஆட்டிக்கொண்டே மெதுவாகச் சிரித்துக்கொண்டு ஊஞ்சல் பாட்டு பாடினுள்.

"சசிகலா என்னைத் தனியாக வைத்து இவ்வளவு சந்தோஷமாக ஊஞ்சலாட்டும் நீ, நான் வேறொரு பெண்ணை கல்யாணம் செய்து கொண்டால், அக்கல்யாணத்தின் பொழுது நாங்கள் கன்னூஞ்சல் ஆடும் சமயம் நீ இவ்வளவு சந்தோஷமாய் இப்படியே நின்று ஊஞ்சலாட்டுவாயா?" என்று அவளைப்பார்த்து சிரித்தவண்ணம் கேட்டான் சிவசங்கரன். சந்தோஷ மிகுதியினுல் இன்னது சொல்லுகிறேம் என்று உணராமல் "ஆஹா அதற்கென்ன, பேஷாக ஆட்டுகிறேன்" என்று அவளும் சிரித்தவண்ணம் சொன்னுள்.

"அப்பாடா! நீயா அப்படிச் செய்வாய். உலகத்தில் ஸ்திரீகள் தங்கள் புருஷன்மார் வேறு ஸ்திரீகளுடன் சகஜபாவத்துடன் பேசுவதைக் கண்டாலே பொறுக்கமாட்டார்களே. அந்த வர்க்கத்தைச்சேர்ந்த நீ இதற்கு எப்படித் துணிவாய்?" என்ருன்.

"ஏன், உங்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் அந்த விஷயத்தில் சற்று குறைந்தவர்களோ. நாங்களாவது எப்படியிருந்தாலும் "கடமை" என்று பக்தியோடு பொறுமையை கடைப்பிடிப்போம்; உங்கள் வர்க்கத்துக்கோ, பழையன தள்ளி, புதியவையைக் கைக்கொள்ளும் சுபாவம். புராணங்களில் சொல்லும் "நளாயினி தன் கணவன் மனம் திருப்தியடைவதற்காக தாசியின் வாசல் தெளித்துப் பெருக்கி அவள் வீட்டில் கணவனைக்கொண்டு விடவில்லையா...?" என்ருள்.

"ஏ அப்பா, வெறும் இங்கிலீஷ் மாத்திரம் தான் படித்திருக்கிருய் என்று நினைத்திருந்தேன். பெரிய புராணப் பிரசங்கம் செய்கிருயே. புராண நளாயனி அப்படிச் செய்தாள். கலியுக நளாயினிகள் அப்படிச் செய்வார்களா? நீ வேண்டுமானுல் உங்கள் கக்ஷியை உயர்த்தி வாயால் பேசலாமே தவிர காரியத்தில் காட்டமுடியாது" என்ருன்.

"அவர்களைப்போல் இல்லாமற்போனுலும், அவர்கள் பிறந்த பூமியில் பிறந்து, அவர்கள் இரத்தம் வழிவழியாக எங்கள் தேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும்போது கடுகளவாவது அதன் வாசனை இல்லாமல் போகுமா? உத்தம ஸ்திரீகள் "உங்கள் சந்தோஷமே எங்கள் பாக்யம்" என்று நினைப்பார்கள். வேணுமானுல் பாருங்கள். உங்களுக்கு பிரியமானுல் நான் என் ஸுகத்தைப் பெரிதாக நினையாமல் அந்தக் காரியத்தை செய்தே தீருவேன்" என்ருள்.

"நிச்சயமாகவா? நான் கல்யாணம் செய்து கொண்டால் நீ கன்னூஞ்சல் பாடுவாயா? என்று சற்று அழுத்தமாகக் கேட்டான்.

"நிச்சயமாய்ப் பாடுவேன்" என்ருள் பேதை.

"இப்பொழுது சொல்லிவிட்டு பிற்பாடு கண்ணைப் பிசைவாய். சாக்குச் சொல்லுவாய்" என்ருன்.

பெண்மையின் வெற்றிக்குறியுடன் தன்னைத் தாழ்வாக்கிக்கொள்ளக்கூடாது என்ற கர்வத்துடன் "ஒருநாளும் இல்லை. உங்களுக்கு அது பிரியமானுல் நான் நிச்சயம் செய்வேன்" என்ருள்.

"ஆனுல் என்மேல் ஆணையிடு" என்ருன்.

இதைக்கேட்டதும் சசிகலா சற்று திடுக்குற்றுள். முகம் கொஞ்சம் மாறுதலடைந்தது.

"பார்த்தாயா; இப்பவே இப்படி கலங்குகிருயே" என்று சிரித்துக்கொண்டே சொன்னுன்.

அவன் சிரித்ததைப் பார்த்து பேதை விளையாட்டென்று மயங்கி "உங்கள் மேல் ஆணையாக நிச்சயம் கன்னூஞ்சல் பாடுவேன்" என்றுள்.

ஆஹாவென்று வெற்றியுடன் சிரித்துக்கொண்டு "அப்புறம் கன்னூஞ்சல் பாடலாம். இப்பொழுது நாம் இருவரும் பொங்கல் கொண்டாட்ட ஊஞ்சலாடுவோம் வா" என்று அழைத்தான்.

இதைக் கேட்டதும் சற்று தயங்கின அவள் மனது குளிர்ந்துவிட்டது. இருவரும் சேர்ந்து ஊஞ்சலாடின சந்தோஷத்தில் சசிகலா யாவையும் மறந்துவிட்டாள். இவையெல்லாம் ஓர் தமாஷ் என்று நினைத்தாள். பிற்பகல் விளையும் வினையை அவள் நினைத்தவளல்ல.

நீலகண்டய்யர் சாதாரண படிப்புள்ளவர். ஆசார சீலர். பிறர் வம்புக்குப் போகமாட்டார். சாமர்த்யசாலி. நியாயம் தெரிந்து நடப்பவர். ஆனுல் சிக்கனம் என்பது அவரது பிறவிக்குணமாய்விட்டது. இல்லையானுல் தகப்பனுர் ஐம்பதினுயிரம் ஆஸ்தி வைத்தார். இவர் தான் ஒருவித உத்யோகமும் பார்க்காமல் அதை சாப்பிட்டுக்கொண்டு ஐம்பதினுயிரத்தை ஒரு லக்ஷரூபாய் ஆக்கிவிட்டார். அவருக்கேற்ருர்ப்போல் ஒரே புத்ரன். அவனும் வெகு கவனமாகப் படித்து இருபத்திரண்டு வயதிற்குள் சட்டப் பரிக்ஷை பாஸ் செய்துவிட்டு; ஒரு வருஷம் மதராஸில் வேலை பழகி, இப்பொழுது மாயவரத்தில் வக்கீல் வேலை ஆரம்பமாகி ஒன்றரை வருஷங்களாகின்றன. சாரதா சட்டம் அமுலுக்குவந்த மறு மாதம் கல்யாணம் நடந்தது. அதாவது கடந்துபோன பொங்கலுக்குப் பிறகு கல்யாணம். ஆனிமாதம் சசிகலா புக்ககம் வந்துவிட்டாள். வயது பதினுறு. சிவசங்கரன் விவாஹம் இவ்வளவு தாமதித்ததிற்குக் காரணம் அவன் தகப்பனுர் அவன் உத்யோகம் பண்ணின பிறகு செய்யவேண்டும் என்பது ஒன்று. விவாக மார்க்கெட்டில் சிவசங்கரன் எலத்துகை பதினுயிரம் என்றிருந்தது மற்றொன்று. சசிகலாவின் தகப்பனுர் ஓர் ஆபீஸில் ரூ. 150 சம்பளத்தில் ஹெட்கிளார்க்காக இருக்கிருர். சசிகலாவின் தாயார் அவள் ஒரு வயது குழந்தையாக இருக்கும்பொழுது இறந்துவிட்டாள். அதுமுதல் அவள் அத்தை அவளை வளர்த்து வந்தாள். தகப்பனுர் மறு விவாகம் செய்துகொண்டு அவருக்குக் குழந்தைகளும் இருக்கின்றன. சசிகலா புத்திசாலியாகையால் அத்தை வீட்டில் உள்ளவர்களிடம் அவர்கள் கொண்டாடும்படி நடந்து வந்தாள். அவள் அத்தை வீட்டிலேயே ஆங்கிலம், சம்ஸ்க்ருதம், தமிழ் முதலியவைகளை நன்ருக எழுதிப்படிக்க உபாத்தியாயர் வைத்துக் கற்பித்தாள். வீணையும் சொல்லிக்கொடுத்தாள். அத்தைக்குக் குழந்தைகள் கிடையாது. சசிகலா பார்க்க நல்ல அழகுள்ளவள். சிவசங்கரன் சசிகலாவையே "வாழ்க்கைத் துணைவியாகக் கொள்வேன்" என்று பிடிவாதம் செய்ததினுல், ரூ. 5000-ம் வரதக்ஷிணை பெற்றுக்கொண்டு சசிகலாவை நாட்டுப்பெண்ணுக ஏற்றுக்கொள்ள நீலகண்டய்யர் சம்மதித்தார். அவர்களும் தாயில்லாப் பெண்ணை நல்ல இடத்தில் சேர்க்கவேண்டும் என்ற அவாவினுல், அத்தை, தகப்பனுர் இருவரும் சேர்ந்து, தங்கள் சக்திக்கு மிஞ்சியே காமாக்ஷி அம்மாளை திருப்தி செய்து வைத்தார்கள். காமாக்ஷி அம்மாள் உலகத்திலெல்லாரையும் விட தன் நாட்டுப்பெண்ணை உயர்வாக மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தினுல் சீர்வகைகள் கேட்பாளே தவிர அவளுக்கு நாட்டுப்பெண்ணிடத்தில் அளவுகடந்த ப்ரேமையுண்டு. மாயூரத்திலிருக்கும் சொந்த வீட்டில் பிள்ளையையும் நாட்டுப்பெண்ணையும் இருக்கச்செய்து பெரியவரிருவரும் பதினைந்துமைலுக் கப்பாலுள்ள கிருமத்தில் இருப்பார்கள். அவ்வப்போது விசேஷங்களுக்கு மாட்டு வண்டியில் வந்துவிட்டுப் போவார்கள். பிள்ளையாண்டான் மோட்டார்கார் வாங்கவேண்டுமென்ருல், மாதம் ரூ. 300 நிச்சியம் வரும்படி வருவதானுல்தான் கார் வாங்கலாமென்று சொல்லி விடுவார். தற்சமயம் மேலிருக்கும் வக்கீலின் தயவினுலும், சிவசங்கரன் வாக்கு ஜாலத்தினுலும் இப்பொழுது நூறு ரூபாய் வந்துகொண்டிருக்கிறது.

ஆதியிலிருந்து கிருமத்திலிருந்து பழகிய

நீலகண்டய்யருக்கு நகரவாசம் பிடிப்பதில்லை. இவ்வளவு பணமிருந்தும் காமாக்ஷி அம்மாள் சுற்றுவேலைக்கு ஆள்வைத்துக்கொள்ளுவாளே தவிர, தன் கையால் சமையல் செய்வதில் தான் அவளுக்குப் பிரியம்; அதனால் சமையலுக்கு ஆள் வைக்கமாட்டாள். தன்னைப் போலவே நாட்டுப்பெண்ணும் இருக்கவேண்டுமென்ற நினைப்பினால், அவளுக்கும் சுற்று வேலைக்கு மாத்திரம் ஆள் வைத்துவிட்டு, சமையலை மாத்திரம் அவள் செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்துவிட்டாள். கிளப், டென்னிஸ் முதலியவைகளுக்கு ஸ்திரீகளுக்கு இக்காலத்திலும் அதிக வசதி ஏற்படாததினால் சசிகலா வீட்டு வேலை செய்வதில் அலுப்படையவில்லை.

நீலகண்ட அய்யரும் காமாக்ஷி அம்மாளும் மாட்டுப்பொங்கல் முடிந்ததும் கிருமத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

மாயூரத்தில் ஒரு தனவந்தர் தினம் சாயங்காலம் கோச் வண்டியில் இருபுறமும் இரு மனைவியரை வைத்துக்கொண்டு உலாவச் செல்வார். சிவசங்கரன் பதினேழு, பதினெட்டு வயதில் லீவுக்கு ஊருக்கு வரும்பொழுதெல்லாம் இந்தக் காக்ஷியை காண்பான். அப்பொழுது அவன் கூடப்படித்த ஒரு நண்பனிடம் "இவன் எவ்வளவு அதிருஷ்டசாலி, இரு மனைவியருடன் எவ்வளவு குஷியாக காலம் கழிக்கிறான்" என்பான்.

"போடா பைத்தியமே என்ன குஷி; வீட்டில் இருவரும் குஸ்திக்கு நிற்கும்பொழுது எவ்வளவு குஷியாக இருக்கும்." என்பான் நண்பன்.

"இல்லேடா, சண்டை போடுகிறவர்களாக இருந்தால் சேர்ந்து வரமாட்டார்கள். வேண்டுமானால் பார். நான் இப்படித்தான் இருக்கப் போகிறேன்" என்பான் சிவசங்கரன்.

"அடே, இப்பொழுதே இந்த நினைப்பை மறந்துவிடு. வீண் பைத்தியக்காரத்தனம். அவஸ்தைபடாதே" என்பான் அவன். இவ்விதமாக அநேகந்தடவை இருவருக்கும் வாக்குவாதம் நடக்கும்.

வக்கீலாக வந்தபிறகும் சிவசங்கரன் இந்தக் காக்ஷியை தினம் பார்ப்பான். இதைப் பார்க்கப் பார்க்க இரண்டு கல்யாணப் பைத்தியம் நன்றாக வளர்ந்துவிட்டது. மனதில் இந்த எண்ணம் இருப்பதினாலேயேதான் விளையாட்டுப்பேச்சில்கூட அன்று அவ்வார்த்தை வந்தது.

சாதாரணமாக பெரியவர்கள் சொல்லுவார்கள், "பனிரெண்டு வயதுமுதல் பதினெட்டு வயதுவரை பிள்ளைக்குழந்தைகளின் மனம் ஒருவழியில் நில்லாது; புத்தி நல்வழி திரும்புவதும் கெடுதலாகத் திரும்புவதும், ஸஹவாஸத்தைப் பொறுத்தது". நீலகண்ட அய்யர் எவ்வளவோ கண்டிப்பாக வளர்த்தும், இவ்வெண்ணம் ஏற்படாமல் செய்ய அவரால் முடியவில்லை.

தன் தந்தையார் ஊருக்குச் சென்றபிறகு சிவசங்கரன் கல்யாண யோஜனையில் ஆழ்ந்தான். பெண் எப்படிப் பார்ப்பது? திடீரென ஓர் விஷயம் உதயமாயிற்று. பக்கத்து ஊரில் இருந்து அவன் மேல் வக்கீலினிடம் கேஸ் விஷயமாக வரும் செட்டியுடன் ஓர் பிராமண குமாஸ்தா வருவார். அச்செட்டியிடம் கேஸ் விஷயமாக அவனுடைய மேல் வக்கீல் இவனை அனுப்புவார். அவ்வூருக்குப் போன பொழுதெல்லாம் குமாஸ்தா பரமேஸ்வர அய்யர் வீட்டில்தான் சிவசங்கரன் சாப்பிடுவான். இப்பொழுது அவருக்கு கல்யாணத்திற்கு ஒரு பெண் இருக்கிறது. பெண் நன்றாக இருப்பாள். பார்த்திருக்கிறான். "மாமா, சாப்பிட வாருங்கள்; மாமா, உங்களுக்கு என்னவேண்டும்?" என்றெல்லாம் கேட்டிருக்கிறாள். இவன் நாட்டம் அந்தப் பெண்ணின் மீது சென்றது.

அவன் எண்ணத்திற்கனுசரணையாக மறு நாள் செட்டியிடம் போய்வரும்படி அவன் வக்கீல் சொன்னார்.

பரமேஸ்வர அய்யரிடம் தன் எண்ணத்தை தெரிவித்தான். அவர் இவனை ஒருதரம் ஏற இறங்கப் பார்த்தார். "ஏன், உங்களுக்கு உடம்பு சரியில்லையா என்ன? சந்திரபிம்பம் போன்ற மனைவி உமக்கிருக்க, பெண்ணைக் கொடு என்று என்னைக் கேட்கிறீர்களே" என்றார்.

'இல்லை. உடம்பிற்கொன்றும் இல்லை. நான்

சொல்வதை முழுவதும் கேளுங்கள்'' என்று அவர் காதோடு சில நிமிஷம் ஏதோ ரகசியம் சொன்னான். அதன் பிறகு அவர் கொஞ்சம் சமாதானமடைந்தவராய் உள்ளே சென்று சம்சாரத்தினிடம் கேட்டுச் சொல்லுகிறேன் என்று உள்ளே சென்றார்.

சம்சாரத்தினிடம் விஷயத்தைச் சொன்னார். அவள் கொஞ்சம் பதட்டமான சுபாவமுடையவள். அவள் இதைக்கேட்டுச் சீறி எழுந்தாள். உமக்கு நமக்கிருக்கும் இந்த ஒரே குழந்தைக்கு வரன்தேட புத்தியில்லையா? கொள்ளைப்பணத்துடனும், மஹாலக்ஷ்மி போல் வந்திருக்கும் பெண்ணை வைத்துவிட்டு, வேறு கல்யாணம் பண்ண நினைப்பவன், ஓட்டாண்டியான உம் பெண்ணை வைத்து எவ்வளவுதூரம் வாழுவான்?'' என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

ஐயர் சமாதானமாகவே, ''குறையும் கேளடி. அந்தப் பெண்ணே, தனக்குத் துணையாக இருக்கவேண்டும் என்று பிரியப்பட்டு நம்மாத்துப் பெண்ணைப் பண்ணிக்கொள்ளச் சொல்லுகிறாளாம். கல்யாணத்தின்பொழுது அவளே கன்னூஞ்சல் பாடுகிறேனென்று சொல்லுகிறாளாம். ஒரு தம்பிடி நமக்குச் செலவில்லை. எல்லாவற்றையும் அவனே ஏற்றுக்கொண்டு புளிவலத்தில் ஒருநாள் கல்யாணம் பண்ணிக்கொள்ளுகிறேன் என்கிறான். அதைத்தவிர (இரகசியமாக)ரூ. 2000 ரொக்கமாகத் தருகிறேன் என்கிறான். அப்படி ஏதாவது வாலாட்டினால், லக்ஷத்திற்கிருக்கிறது. கோர்ட்டிருக்கிறது. ஒருகை பார்க்கிறேன்', என்றார்.

''ஐயோ, போருமே. பணம் பெண்ணின் வாழ்வாகுமா? ஏழை பிரும்மசாரியானாலும், சந்தோஷமாக வாழலாம். எனக்கென்னமோ ஸம்மதப்படவில்லை'' என்றாள்.

ஐயர் அநேக சமாதானம் சொன்னார். சிவசங்கரனே நேரில் வந்து காத்யாயனி அம்மாளுக்கு திருப்தி ஏற்படும்படி சொன்னான். பல சொல்லுவானேன். பணத்தினால் இவ்வுலகில் ஆகாத காரியம் என்ன இருக்கிறது? கடைசியில் சம்மதித்து விட்டார்கள். புரோகிதரிடம் கேட்டு முகூர்த்தம் குறித்தாய்விட்டது. பணத்தின் மஹிமையால் ஜாதகம் அவசியமில்லை என்று தீர்மானித்துவிட்டார்கள்.

பெண் ''சுசீலா, சிவசங்கரனைப்போல் ரூபவானான புருஷன் கிடைக்கவேண்டுமென்று நினைத்தாளே தவிர, இவனைப்பற்றி ஸ்வப்பனத்தில்கூட நினைக்கவில்லை. தாயார் சமாதானமாக விஷயத்தைச்சொன்னாள். முதலில் சக்களத்தியாக வாழ்க்கைப்பட மறுத்தாள். பிறகு தகப்பனாரின் வறுமை, மூன்று வருஷமாக தன் கல்யாணத்திற்காக அவர்கள் படும் சிரமம், தாய் தகப்பன் சண்டை, ஊரார் வம்புகள் இவைகளையெல்லாம் நினைத்தும், தன்னால் தகப்பன் வறுமை நீங்குவதை உத்தேசித்தும் சம்மதித்தாள். மேலும் கண்நிறைந்த கணவன்; தான் நினைக்கமுடியாத பெரிய இடம். (கன்யா பெண்களாக இருக்கும்வரை கண்நிறைந்த கணவனே வேண்டுவள் என்று ஸ்லோகம்கூட பாடியிருக்கிறார்கள்.)

காத்யாயனி பெண்ணின் நகையைப்பற்றி நினைவாகக் கேட்டுக்கொண்டாள்.

அன்று இரவு சிவசங்கரன் வீட்டிற்கு வரும்பொழுது இரவு மணி பதினொன்று ஆகிவிட்டது. பேதை சசிகலா கவலையுடன் அவன் வரவை எதிர்பார்த்து வாசலுக்கும் உள்ளுக்குமாகப் போய்வந்தாள். அவன் வந்ததும், ''என் இவ்வளவு நாழி?'' என்று அவன் முகத்தை நோக்கி ஆவலுடன் கேட்டாள்.

''வா, சாப்பிட்டுக்கொண்டே சொல்லுகிறேன்'' என்று அவள் கையைப் பற்றி அழைத்துச் சென்றான்.

சாப்பிட்டுக்கொண்டே, 'நம்மாத்திற்கு வருவாரே செட்டி குமாஸ்தா, பரமேஸ்வரய்யர். அவர் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சியமாயிற்று; அதனால் இவ்வளவு நாழியாகிவிட்டது'' என்றான்.

'நல்ல காரியந்தானே, சந்தோஷம்,'' என்று தனக்கே வரும் வினையை அறியாத பேதை சொன்னாள். சரி, வரன் எந்த ஊர்? வரதக்ஷிணை உண்டா? பாவம், அவர் ஏழையாயிற்றே, என்ன செய்வார்? உங்களிஷ்டம் என்னவோ? என் இஷ்டம் என்னவென்றால் நீங்கள் 200 ரூபாயாவது கொடுத்தால் புண்யமுண்டு'' என்றாள் பேதை.

''அதற்கென்ன, உன் இஷ்டத்திற்கு மாறுதலுண்டோ? அப்படியே செய்வோம் என்

ராஜாத்தி", என்றது கபடனது வாய் மனம் "அடி பேதாய், இருநூறு! இரண்டாயிர மன்றோ கொடுக்கப்போகிறேன், என்றது.

"நான் என் சொந்தப் பரிசாக ஒரே மாதிரி இரண்டு வயிர மோதிரம் இருக்கிறது. அதில் ஒன்றைக் கொடுக்கப்போகிறேன்" என்றாள் சசிகலா. வரனைப்பற்றி கேட்டதை பேச்சுப்பிராக்கில் மறந்துவிட்டாள்.

அறுப்பு நாளானதினால் நீலகண்டய்யர் கிராமத்தைவிட்டு வரவேயில்லை.

"சசி, நாளைக்காலையில் புலிவலத்தில் ஸுசீலாவுக்குக் கல்யாணம். நாம் இன்று சாயங்காலமே போகவேண்டும். தயாராக இரு. ஒரு வாடகை மோட்டார் பேசியிருக்கிறேன்" என்று மத்தியானம் 3 மணி சுமாருக்கு சிவசங்கரன் சொன்னான்.

"சரி, வருகிறேன். ஒரு காரியம் நீங்கள் சொல்லவில்லையே. வரன் எந்த ஊர்? அன்று பேச்சு ஸ்வாரஸ்யத்தில் அதை மறந்துவிட்டேன். சொல்லுங்கள்" என்றாள் சசி.

'சசி' என்று அவளைப் பார்த்து சிரித்தான் கபடன் சிவசங்கரன்.

'என்ன சிரிக்கிறீர்கள்? சொல்லுங்களேன்' என்றாள்.

அஞ்சாமல் 'நான்தான், சசி' என்றான்.

"என்ன?" என்று திடுக்குற்றாள். பின்னும் "என்ன என்னைக் கேலி பண்ணுகிறீர்கள்" என்றாள்.

"கேலியில்லை. நிஜமாகத்தான், சசி. நீ அன்றைக்கே சொன்னாயே பாவம் ஏழையென்று. அதற்காகவும், உனக்கு நானில்லாத சமயம் தனிமையைப் போக்கவும், பொங்கலன்று கன்னூஞ்சல் ஆட்டுவேன் என்று நீ செய்த ஆணையை நிறைவேற்றவும், நானே கல்யாணம் பண்ணிக்கொள்ளப்போகிறேன்."

எதிர்பாராத இந்தச் செய்திகள் அவளை ஸ்தம்பிக்கச் செய்தன. கண்களில் மளமளவென்று ஜலம் வந்துவிட்டது.

"பார்த்தாயா. நான் அன்றைக்கே என்ன சொன்னேன்? உன் பேச்சை நம்பி நான் எல்லாம் முடித்துவிட்டேன். இனி என்ன செய்வது" என்று அங்கவஸ்திரத்தால் அவள் கண்ணைத் துடைத்தான்.

"இது விஷயம் உங்கள் அப்பா அம்மாவுக்குத் தெரியுமா?"

"இந்த விஷயத்தை அவர்களுக்குச் சொல்லுவானேன்? பிறகு பார்த்துக்கொள்ளலாம். நீ புறப்படுகிறாயா?" என்றான்.

அந்த நிமிஷம் அவனை விட்டு சற்று தனித்திருக்க அவள் மனம் எண்ணியது. சட்டென்று கண்ணைத் துடைத்துக்கொண்டு, 'வருகிறேன், உங்கள் இஷ்டத்திற்கு மாறாய் நடப்பேனா?" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

தனிமையில் உள்ளே போய் வாய்விட்டுக் கதறினாள். ஸ்திரீகள் எந்தக் கஷ்டத்தையும் பொறுத்துக்கொள்ளுவார்கள். வாழ்வைப் பகிர்ந்து கொடுப்பதை அவர்கள் பொறுப்பது கடினம். "ஐயோ, என்ன மோசம் போனேம்? அத்தை "ஆணினுறவும் உறவா? வேலி மறைவும் மறைவா" என்று சொல்லுவாளே! அப்பொழுது ஆணினுறவு இல்லாமல் ஸ்திரீகள் எப்படியிருக்கமுடியும், ஆடவனைப் பிரிந்தவர்களை உலகம் எவ்வளவு தூற்றுகிறது. இது என்ன அர்த்தமற்ற வார்த்தை என்று நினைத்தேன். இப்பொழுது தெரிகிறது அதனர்த்தம். அத்தை, புருஷன் மனம் கோணாமல் நடக்கவேண்டுமென்று நீ சொல்லித்தந்த வார்த்தையினால் நான் அடைந்த பலனா இது?" என்று ஏங்கினாள். சற்றுப் பொறுத்து, கொஞ்சம் சமாதானமாய்ப் புறப்படத் தயாரானாள்.

(அடுத்த இதழில் முடியும்.)

நாட்டியக் கலை

எம். ஆர்.

நாட்டியக் கலை புராதனமானது. புனிதக் கலையாகவே மதிக்கப்பட்டு வந்தது. பாமர ஜனங்கள் நாட்டியத்தை ஒருவித கேளிக்கை என்பார்கள். அது தவறு. மேல்நாட்டு நடனத்திற்கும் நமது நாட்டின் பரத நாட்டியத்திற்கும் அடிப்படையான வித்தியாசம் ஒன்று உண்டு. பார்வைக்கும் மனதிற்கும் மட்டும் திருப்தியளிக்கக்கூடியது மேல் நாட்டு நடனம். பரத நாட்டியம் அப்படியல்ல. கடவுளின் லீலா விநோத குணங்களை பரிமளிக்கச் செய்வதே பரத நாட்டியத்தின் நோக்கம்.

பரத நாட்டியத்துக்கு கர்த்தா கடவுளென்றே துணிந்து சொல்லலாம். நடராஜத் தாண்டவம் பிரசித்தி பெற்றது. தேவர்களையும் முனிவர்களையும் பிரமிக்கச் செய்தது. அவ்வானந்த அற்புத நடனத்தில் சிருஷ்டி, அபயம், ஞானம், சம்ஹாரம் முதலிய உயர்ந்த கருத்துக்களின் மஹிமையை உணர்ந்தார்கள். பகவானது நடனத்தின் விசேஷத்தை பரதர் நன்கு உணர்ந்தார். கிரந்த ரூபமாக அதை வெளியிட்டார். அதனாலேயே பரத சாஸ்திரம் என வழங்கலாயிற்று.

தென்னாட்டிலேயே பரத நாட்டியம் புகழுடன் விளங்குகின்றது. முக்கியமாக தேவதாசி என்ற வகுப்பாரிடமே சமீப காலம் வரை அக்கலை பிரகாசித்து வந்தது. ஆனால் வரவர எல்லா வகுப்பினரும் நாட்டியக் கலையில் விசேஷ கவனம் செலுத்தி வருகிறார்கள். உதயசங்கர், கோபிநாத் போன்ற ஆடவர்களும் வெகு ஊக்கத்துடன் அக்கலையை அப்பியசித்து திறமையுடன் கையாண்டு வருகிறார்கள்.

ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் போன்ற குடும்ப ஸ்திரீகள் நாட்டியக் கலைக்கு புத்துயிர் அளித்து பெருமையுடன் போற்றுகிறார்கள்.

வட நாட்டாரும் மேல் நாட்டாரும் நடனக் கலை முறையில் தென்னிந்தியாவில் வழங்கும் பரத நாட்டியமே சிறந்தது என போற்றத் தொடங்கிவிட்டார்கள்.

நாட்டியக் கலையின் நுட்பங்களை அறிந்து பயிலுவது லேசானதல்ல. அதற்கு பல விதிகள் உண்டு. பாவம், உணர்ச்சி இவைகள் இல்லாவிட்டால் நாட்டியம் பரிமளிக்காது. பொம்மை போன்று கைகளையும் கால்களையும் வளைத்து ஆட்டிவிடுவதால் மட்டும் நாட்டியக் கலையனுபவம் வந்துவிடாது. குறிப்பிட்ட பாவம் உணர்ச்சியை அங்க அடையாளங்களினால் வெளிப்படுத்தி மற்றவர்கள் அவைகளை எளிதில் அறிந்துகொள்ளச் செய்ய வேண்டும்.

நாட்டியமாடும் இடம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதற்கும் சாஸ்திரத்தில் விதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

பரத நாட்டியத்திற்கு ரஸங்களே பிரதான்யமாக விளங்குகிறது. ரஸ அனுபவத்திற்கு சங்கீதம் அநுகுணமாகவிருக்கிறது. பாவம், அபிநயம், முத்திரைகள், அலங்காரம், சங்கீதம், மேடை இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்தால்தான் நாட்டியம் அதிக சோபையுடன் விளங்கும். சரீர அழகு, வன்மை, பக்குவம் இவைகள் இல்லாதவர்கள் நாட்டியத்தை அப்பியசிப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. பக்க வாத்தியங்களும் நாட்டியத்திற்கென்றே தனிமையாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பரதர் அபிநயத்தை நான்கு வகைகளாக பிரித்திருக்கிறார். ஆங்கிகம், வாச்யம், ஆஹார்யம், சாத்வீகம். ஆங்கீகம் அங்கங்களைப் பற்றிச் சொல்வது. வாச்யம் வாக்கு அல்லது சங்கீதத்தைப் பற்றியது. ஆஹார்யம் உடையையும் அலங்காரத்தையும் பற்றிச் சொல்வது. சாத்வீகம் மனோபாவத்தை உணர்த்துவது.

அங்கங்களின் அசைவுகளைப்பற்றி வெகு நுணுக்கமாய் பரத சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்க் காவிய நூலாகிய சிலப்பதிகாரத்தில் இதைப் பற்றி வெகு அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அலாரிப்பு என்பதை நாம் சகஜமாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அது நடனம் ஆரம்பிக்கும் முன் நடனக் கடவுளுக்கு பணி செய்யும் ஒருவித வந்தன முறை. பக்தி மேலிட்டால் நடனம் தானே வந்துவிடுமாம். கோபிகா ஸ்திரீகள் பக்தி மேலீட்டினால் மெய்ம்மறந்து கண்ணன் மறைந்தவுடன் கூட நடனம் செய்து கொண்டிருந்தார்களென ஸ்ரீமத் பாகவதத்தில் நாம் காண்கிறோம். ராதா கிருஷ்ண நடனம் பெயர்பெற்றது.

பரத நாட்டியத்தின் லக்ஷியமே உயர்தரமானது. தத்வார்த்தத்தோடு கூடியது. இத்தகைய உயர்வு கொண்ட கலையை அழியாமல் காப்பாற்ற வேண்டியது நமது கடமை. அப்படிச் செய்ய நாம லாயக்கற்றவர்கள் என்று கருதியோ அல்லது எந்தக் காரணத்தைக் கொண்டோ பரத நாட்டியக் கலை பூராவையும் கல் சித்திரங்களாக பழைய காலத்தில் செய்து நமக்கு அளித்திருக்கிறார்கள். ஒவ்வொரு கோவிலிலும் நாம் அபூர்வ நாட்டிய சித்திரங்களை கல் வெட்டுகளில் காணலாம். சிதம்பரத்தில் அவ்வகை சித்திரங்கள் கணக்கற்று காணப்படுகின்றன.

எல்லாம் நாம் போற்றுவதிலும் ஆதரிப்பதிலும் இருக்கிறது. நடனக் கலையின் அபிவிருத்திக்கு தன்னலான தொண்டை காவேரி செய்யும் என்பதை எதிர்பார்ப்போம்.

பானுமதியும், ஸுலோசனவும் நடித்துக்காட்டிய தோற்றங்கள்.

நடனராஜன்.

'ஆடும் சிதம்பரம்' என்ற பதத்தில் சில தோற்றங்கள்.

ஆடும் சிதம்பரமோ ...

அய்யன்

கூத்தாடும்

சிதம்பரமோ!

சினிமாப் பட எடுப்பு--முன்னேற்றமடைய முறை

A. R. ராஜகோபால செட்டியார்

தற்கால உலகத்துப் பெரிய தொழிற்களுக்குள் சினிமாத்தொழிலானது ஆறாவது ஸ்தானத்தை வகித்துவருகிறது. இத் தொழிலை இந்திய மயமாக்குவது கடினமானதல்ல என்ற உணர்ச்சியும் வளர்ந்து வருகிறது. மேனாட்டில் கையாளப்படும் முறைகளை கவனித்தால் அனேக காரியங்களை சினிமா மூலமாகவே சாதித்துக்கொண்டு விடலாம் என்று விளங்குகிறது. ஜனங்கள் மனதில் படும்படியாகச் செய்ய சினிமா இன்றியமையாதது.

ஒவ்வொரு இந்தியரும் நம் தேசத்தில் இக்கலை முன்னேற்றமடைய வேண்டிய உதவிகளைச்செய்து வரவேண்டும். இது வரையில் செய்துவந்திருக்கும் உதவி பாராட்டத்தக்கதே. ஆயினும் அவர்கள் இன்னும் அதிகமும் செய்யலாம். சினிமா விஷயமாக கட்டுரை எழுதுவோர்களும் விமர்சனம் எழுதுவோர்களும் நுட்பமாக விஷய ஆராய்ச்சி செய்தவர்கள் என்பது தான் என் அபிப்ராயம். கட்டின வீட்டுக்கு பழுது சொல்வது மட்டில் போதாது. அது கஷ்டமான வேலையுமல்ல. கலையை அபிவிருத்தி செய்ய தக்க யோசனைகள் கூறக் கூடிய இவர்கள், எத்தகைய கதைகளைப் பொறுக்கி எடுக்க வேண்டும், கதையின் வசனம் எவ்வாறு அமையவேண்டும், எந்த நடிகை எந்த வேஷத்துக்கு பொருத்தமானவர், இன்னவரைக் கொண்டு டைரக்ட் செய்வது சிலாக்கியம் என்பது போன்ற விஷயங்களையும் ஏன் சொல்லக்கூடாது?

படம் பிடிக்கும் முதலாளிகள் இத்தகைய யோசனைகளை வரவேற்பார்கள் என்பது திண்ணம். அவர்களுக்கு உற்சாக மூட்டுவதற்கும் ஜனங்களின் விருப்பங்களை பிரதிபலிக்கச் செய்வதற்கும் இது சிறந்த முறை என்பது தான் என் அபிப்ராயம். இது விஷயமாக ''டாக்கி டாக்'' என்றும் பத்திரிகையின் ஆசிரியருக்கும் எனக்கும் சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன் வாக்குவாதம் நடந்ததுண்டு. நான் சினிமாத் தொழிலில் [illegible]வனாகையால் நான் சொல்லுவதை ஒருதலைச் சார்ப்பானதாக சிலர் கருதலாம். எனினும் கலை வளர்ச்சியில் எனக்குள்ள ஆர்வத்தை அறிந்த என் நேயர்கள் நான் குறிப்பிடுவதைத் தவறுதலாக எடுத்துக்கொண்டு விடமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இத்தொழில் மேலும் மேலும் வளர இடமிருக்கிறது. மேல் நாடுகளில் டாகிகள் பீலிகளாகக்கூட மாறும் போல் இருக்கின்றன. பல பல துறைகளில் மாறுதல்கள் காணப்பட்டுவருகின்றன. ½மணிக்குள் முடியும் படங்கள் 5நிமிஷங்களுக்குள் முடியும் படங்கள் எல்லாம் உற்பத்தியாகின்றன. விஷயங்களிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இத்தகைய முன்னேற்றமும் வேண்டியதுதான். நமது நாட்டு மக்களிலும் அதிக நேரம் சினிமாக் கொட்டகையில் உட்கார்ந்து நுகர பிரியப்படாதவர்கள் அதிகரித்து வருகின்றார்கள். படித்த மக்கள் பெரும்பாலும் மத்திய காலத்து சரித்திரப் படங்களைப் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். அத்தகைய படங்களும் Documentary படங்களும் இன்னும் அதிகமாகத் தயாரிக்கப்பட தேசீய இயக்கம் உதவி அளிக்கும் இத்தருணத்தை நாம் இழந்துவிடக்கூடாது.

நடிப்பு முறை ஒரே வகையாக இருக்கிறது என்று ஓர் குறை கூறுவது வழக்கம். ஆயினும் சென்ற சில வருஷங்களுக்குள் இத்துறையிலும் நாம் மிகவும் முன்னேறி இருக்கிறோம் என்பதை மனதில் கொள்ளவேண்டும். காமிக்குகளுக்கும் பிரதானக் கதைப் போக்குக்கும் சம்பந்தமில்லாத நடிப்பை நாம் காண்கிறோம் என்பது உண்மையேயாயினும் இது நாளடைவில் தான் சரியாகக்கூடிய விஷயம் என்பதை மறந்து விடக்கூடாது. இவ்விஷயத்திலும் விமர்சகர்களுடைய ஒத்துழைப்பு அதிகம் வேண்டும்.

விஞ்ஞானக் குறிப்புகள்

கண்ணன்

வர்ணக் குருடர்களே, பயப்படவேண்டாம்—உங்கள் உதவி அவசியம்.

சில மனிதர்களுக்கு நிற வித்தியாசம் தெரியாது; பச்சையை சிவப்பு என்பார்கள்; நீலத்தை மஞ்சள் என்பார்கள். கப்பல், ரெயில் ஓட்டும் உத்தியோகங்களுக்கு இவர்கள் பிரயோஜனமில்லை. மற்றும் பல உத்தியோகங்களுக்கும் இவர்களைத்தள்ளி வந்தார்கள்.

ஆனால் இப்போது இத்தகைய கண்பார்வையில் குறைவுள்ளவர்கள் யுத்தாங்கத்தில் மிகவும் உபயோகப்படுகிறார்கள். அமெரிக்காவில் போர்ட்ஸில் என்னுமிடத்தில் பெரிய பீரங்கிகளுக்கு அக்கம்பக்கத்திலுள்ள செடிகொடிகளின் நிறம் பூசி அவற்றை அதன் தன் இயற்கை அமைப்பில் வைத்தால் யார் கண்களுக்கு அவை தென்படுகின்றன என்று பரீக்ஷை பார்த்தார்கள். உத்தேசம் என்னவெனின் பீரங்கிகள் வைத்திருப்பது ஒருவர் கண்ணுக்கும் தென்படாதிருக்கவேண்டும். விசேஷமாக எதிரிகளுக்கு வர்ணம் சரியானபடி அமைந்திருந்தால் பீரங்கிகள் முற்றிலும் தென்படாமலிருக்கும். மிகவும் நுட்பமான கண்பார்வையுள்ளவர்கள் கூட 40 பீரங்கிகளில் 10 பீரங்கிகளைத்தான் கண்டுபிடிக்க முடிந்தது. ஆனால் வர்ணகுருடான ஒருவர் 40 கருவிகளையும் கண்டுவிட்டார். மற்றவருக்கு தெரியாதிருந்த பீரங்கிகளின் வெளிக்கோடு அவர் கண்ணுக்குப் புலப்பட்டது. என்ன ஆச்சரியம்! அவை ஆகாயவிமானத்திலிருந்து பார்த்தபோதும் அவர்கள் கண்ணுக்குப்புலப்பட்டன.

விசித்திரமான சோப்பு.

1940ம்-ஞு லைப்ஸிக் என்ற ஜெர்மன் தேசத்திலுள்ள நகரத்தில் ஒரு பொருட்காட்சி நடந்தது. அங்கே நூதனமான ஒருவித சோப்பு இருந்தது. வைக்கப்பட்டிருந்த இடம் மட்டிலும் நன்றாகயிருந்ததே தவிர சோப்புக் கட்டி நன்றாகயில்லை. ஷெடி சோப்பு 40% கொழுப்பினாலும் பாக்கி 60% களிமண்ணாலும் செய்யப்பட்டது. யுத்தகாலப் பொருளாதாரம் காரணம். சோப்புவைக்க அட்டைப் பெட்டிகள்கூட போடக்கூடாதாம்!

வெடிக்கும் மசி.

அமெரிக்காவில் அச்சடிக்கும் இயந்திரம் தயார் செய்யுமொருவர் வெகு சீக்கிரமாக உலரக்கூடிய மை ஒன்றைக் கண்டுபிடித்தால் அச்சடிக்கும் வேலையின் துரிதத்தை மிகவும் அதிகரிக்கலாம் என்று கண்டு, அப்படிப்பட்ட மசி செய்வதற்காக மாண்ட்க்லேயர் என்னும் ஊரில் பல ஆராய்ச்சிக்காரர்களை நியமித்து இந்த விஷயத்தை சோதிக்கச் செய்தார். முதன்முதலில் தயாரிக்கப்பட்ட மை அதி சீக்கிரத்தில் காய்ந்தது! ஆனால் பிறகு திடீரென்று வெடித்து சாமான்களைப் பாழாக்கியது. ஆயினும் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி, சீக்கிரம் காய்ந்த மையின் குற்றங் குறைகளை நீக்கி அச்சுவேலைக்கு அத்தியந்த உபயோகமான ஒரு புதுப்பொருளைக் கண்டுபிடித்தார். மை வெடிக்காமலே சீக்கிரம் உலரக்கூடியதாயிற்று.

சுருமீன் எண்ணெய்-"மங்காரத்து நெய்."

மி. A. H. மேயர் மூன்று வருஷங்களுக்கு முன் அமெரிக்காவின் ஸேன்பிரான்ஸிஸ்கோ குடாக்கடலிலிருந்து ஆறுவிதமான சுறுமீன்களின் ஈரல்களை வாங்கிப் பரிசோதித்தார். அவைகளுள் 'ஸூப்-பின்' என்னும் மீன் இனத்தின் ஈரலில் ஒரு பவுண்டுக்கு 75,000,000 எண்கள் விடமின் 'எ' இருந்தனவாம். இதற்கு அடுத்த இரண்டு வருஷங்களில் முறையே 914205 பவுண்டும், 13,000,000 பவுண்டும் சுறு மீன்கள் பிடிக்கப்பட்டன. இவர் இவ்வளவு சுறுமீன்களை வாங்குவதைக்கண்டு டாக்டர் ப்ராக்கில்ஸ்பி என்ற உணவு பொருள் நூல் நிபுணர் ஆராய்ச்சி முறையில் சுறுமீன் ஈரல் எண்ணெயைப் பரிசோதித்தார். அந்த எண்ணெயில் காட்லிவர் ஆயிலைவிட 100 மடங்கு அதிகமாக விட்டமின்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார் சுறுமீன் பிடிப்பவர்கள் முன்னிலும் பன் மடங்கு அதிக ஊக்கங் கொண்டு அத்தொழிலில் 20,000,000 டாலர்கள் முடக்கியிருக்கிறார்களாம்.

ஸ்திரீ நாகரிகப் பிரசாரம்

தர்மா ராமசுப்பன்

பெண்களினுடைய நாகரிகத்தின் போக்கை கவனிக்கவேண்டுமென்றால் சென்னைப் பட்டணமே சரியான இடம். புதிய வழக்கங்களும் புதிய அலங்காரங்களும் அங்கு ஆரம்பித்து பிறகு மெள்ள மெள்ள வெளியூருக்கு பரவுகின்றன. ஸ்திரீகளினுடைய நாகரிகங்கள் முக்கியமாக கலியாணங்களிலோ பாட்டுக் கச்சேரிகளிலோ அல்லது கிரிஸ்துமஸ் நாள்களில் பட்டணத்தில் நடக்கும் பலவித கூட்டங்களிலோ ஒருவருக்கு ஒருவர் ஸம்பாஷணை மூலமாக பரவுகின்றன. இதனாலேயே பட்டணத்தில் நடக்கும் பாட்டுக்கச்சேரிகளில் ஸ்திரீகளுக்காக ஏற்பட்டிருக்கும் அலாதி இடத்தில் எப்பொழுதும் ஒரு அசட்டுத்தனமான சத்தம் வந்துகொண்டேயிருக்கும். பாடகர் வெகு அழகாக கீழ் ஸஞ்சாரத்தில் ஒரு ராகத்தை பாடிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு ஸ்திரீ மற்றொருவளைப் பார்த்து "எண்டி, பேபி! இந்த புடவை செல்லாராமில் வாங்கினாயா?" என்பாள். அதற்குள் நாலு பக்கத்திலிருந்தும் "சு" "சு" என்று கோப சத்தம் உண்டாகும். பேபி என்பவள் கொஞ்ச நேரம் சும்மா இருந்துவிட்டு பிறகு அதற்கு பதில் ரகஸ்ய த்வனியில் கண்ணை மிரள முழித்துக்கொண்டு வாங்கின கடையின் பெயரைச் சொல்லுவாள். இந்த சம்பாஷணை கொஞ்சத்தில் முடியாது; அது எத்தனை கெஜம், என்ன விலை, என்றெல்லாம் தெளிவாகத் தெரியவேண்டும்.

பாட்டுக்கச்சேரிகளில் ஸர்வசாதாரணமாக காலிறங்கிய புடவையோ அல்லது ஒரு வெள்ளைப் புடவையோ கட்டிக்கொண்டு போனால்தான் பிழைக்கலாம். புதிய தினுசாக கட்டிக்கொண்டு போகிறவர்களுக்கு கஷ்டம்தான். பக்கத்தில் உட்கார்ந்தவர்கள் தெரியாதவர்களானாலும் அதைப்பிடித்து இழுத்து அகலத்தையும் முழம் போட்டு விட்டு, விலையையும் கேட்டுவிடுவார்கள். நம் குழந்தைகளுக்கு புதிதாக காதிலோ மூக்கிலோ ஒரு நகையைப் போட்டு அழைத்துக்கொண்டுபோனால் திரும்பிவரும்பொழுது காதிலும் மூக்கிலும் புண்ணோடுதான் அழைத்து வரவேண்டும். பத்துபேர் அதை இழுத்துப் பார்த்து விடுவார்கள். அதிலும் கொஞ்சம் துணிச்சலுள்ள ஒரு அம்மாமி நல்ல வைர நகையைப் பார்த்து "இது ரங்கூன் டைமண்டோ?" என்றும் கோபம் வரும்படி கேட்டு விடுவாள்.

சில வருஷங்களுக்கு முன் பட்டணத்தில் மல்லிகைப்பூ அகப்படுவது கஷ்டமாக இருந்தது. அப்பொழுது அதற்குப் பதிலாக கனகாம்பரம், மஞ்சாம்பரம் என்ற புஷ்பங்கள் அணிந்துகொள்ள ஏற்பட்டன. அதற்குப் பிறகு பெயர் தெரியாத புஷ்பங்களையெல்லாம் பெண்கள் தலையில் வைத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். தற்காலத்தில் குப்பையில் விளையும் புஷ்பமும், வேலிகளில்

பூக்கும் புஷ்பமும், நாய்க்குடையும்கூட பட்டணத்தில் உபயோகிப்பார்கள்போல் தோன்றுகிறது. அரளிப்பூ சப்பாத்திப்பூ மோட்டார் பூ என்றவையெல்லாம் ஒரு பெரிய பருத்தி மூட்டை அளவு பொச பொசவென்ற சத்தத்துடன் தலையில் வைத்துக்கொள்ளுகிறார்கள். அந்தப்புஷ்பக்கூடு ஒரு இடத்தில் நிற்காமல் தத்தளித்துத் தோளின்மேல் தொங்குகிறது. புதிய நாகரிகப் பிரகாரம் பெண்கள் தலையை பின்னலாகக் கட்டி மின்னலாக கொண்டுவந்து விடுகிறார்கள். அதாவது பின் புறத்தில் தொங்காமல் முன் புறத்தில் இழுத்து விட்டுக் கொள்வது.

இதனால் விளையப் போகும் தீங்கு இப்பொழுது தெரியாது. கூந்தலோடு அணியக் கூடிய வஸ்துக்களை வெகு ஜாக்கிரதையாக தெரிந்து எடுக்கவேண்டும். தேய்த்துக் கொள்ளக் கூடாத தைலங்களையும், வைத்துக்கொள்ளக்கூடாத புஷ்பங்களையும் உபயோகித்தால் கூந்தல்களின் அளவு சுருங்கி இன்னும் ஒரு இருபது வருஷத்தில் நம் தேசத்துப் பெண்கள் பெருமையுடன் வகித்துக்கொண்டிருக்கும் கூந்தல் அழகே போய்விடும்.

ஆபரணங்கள் அணியும் விஷயத்தில் தற்காலப் பெண்களுக்கு ஸௌக்ஷ்மமே போய்விட்டது. லோலக் என்னும் தொங்கல் நகைகள் தொத்து வியாதி மாதிரி வந்துவிட்டன. ஆரம்பத்தில் அரை அங்குலத்தில் வரத் தொடங்கின லோலக்குகள் இப்பொழுது மூன்று அங்குலத்தில் வந்து நிற்கின்றன. தாம்பாளம், முக்கோணம், ஸ்வஸ்திகா, அரைச்சந்திரன், சூர்ய காந்திப் பூ, கெடியாரத்தின் மெயின் ஸ்பிரிங்,

எலக்டிரிக் பல்ப் இவைகள் மாதிரி எல்லாம் தொங்கல்கள் உண்டாயின. இவைகள் எந்த எந்த வஸ்துவிலேயோ செய்யப்பட்டுள்ளவை. நூக்க மரத்தாலும், குதிரையின் வால் மயிராலும்கூட செய்து அணிந்துகொள்கிறார்கள். பெரிய கூட்டங்களில் பலவகை பெண் குழந்தைகள் பலமாதிரியான தொங்கல் ஆபரணங்களை போட்டுக்கொண்டு வரும்பொழுது அந்த காக்ஷியைக்கண்டு அடக்கமுடியாமல் சிரிப்பும் வரும். பகவான் பெண்களை அழகாயும் சிருஷ்டித்தார், விகாரமாயும் சிருஷ்டித்தார். ஆனால் சிருஷ்டி கர்த்தாவுக்கே வெட்கம் வரும்படி சில பெண்கள் ஆபரணங்கள் அணிந்துகொண்டு உருவத்தை மாற்றிவிடுகிறார்கள். உருண்டை வடிவமுள்ள ஒரு பெண் நீளமாக இரண்டு தொங்கல்களை மாட்டிக்கொண்டால் அவளுடைய முகம் பங்கனப்பள்ளி மாம்பழம்போல் நீண்டுவிடுகிறது. எற்கனவே வாழைக்காய் மாதிரி உள்ள ஒரு முகத்தில் இரண்டு தொங்கல்களைப்போட்டால் முகம் ஒரு பெரிய புடலங்காய் மாதிரி ஆகிவிடும். பழைய காலத்து க்ஷத்திரிய ஜிமிக்கி என்ற ஒரு ஆபரணமே இத்தகைய உருவைக் குலைக்கும் தன்மையில்லாதது.

பிரபல ஸினிமா படம் ஒவ்வொன்று வந்த பிறகும் பட்டணத்தில் நாகரீகம் மாறுதல் பட்டது. "தியாக பூமி" வந்து போன பிறகு எஸ். டி. சுப்பலக்ஷ்மி மாதிரி பெண்கள் முன் தலையில் கூந்தலை உருட்டி வைத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். பிறகு "சகுந்தலை" என்ற படம் வந்தவுடன் எம். எஸ். சுப்பலக்ஷ்மி மாதிரி முன் கூந்தலை வழித்துப் பின்னால் தள்ளிக் கட்டத் தொடங்கினர். இது மேல் நாட்டாரும் அமெரிக்கா தேசத்தினரும் பூண்டுவந்த ஆசாரத்தை ஒட்டியே இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் பிரபல ஸினிமா நடிகர்களுடைய நடையே நாகரிகம். நம் தேசத்திலும் அந்த மாதிரியேதான் காணப்படுகிறது.

யுத்தமும் ரஸாயன மூலப்பொருள்களும்

[பி. எஸ். ஸ்ரீகண்டன்]

சேர்க்கை உலோகங்கள்.

பண்டைக்காலத்திலே, ஒவ்வொரு தேசத்தினரும் தம் தம் உலோக வேலைக்காரர்களால் செய்யப்பட்ட உறுதியான யுத்த கவசங்களை உபயோகித்து வந்தார்கள். இக்காலத்திய ரஸாயன சாஸ்திரிகளில் (Chemists)ஒரு வகுப்பினர்களான உலோக சோதகர்கள் (Metallurgists) பல உலோகங்களின் சேர்க்கையினால், விதவிதமான குணாதிசயமுள்ள கலப்பு உலோகங்களையும் மற்றும் பல ரஸாயனப் பொருள்களையும் தயாரிக்கின்றனர். இவ்வுலோக சேர்க்கையினால் தயாரிக்கப்பட்டவை கனமில்லாமலிருந்தாலும், உறுதியுடையனவாய் இருத்தல்வேண்டும். மற்றும் சில வெடிகுண்டுகளின் யமவேகத்தையும் தடுக்க சக்தி உடையனவாயும், வேறு பல எத்தகைய பலத்தையும் எதிர்த்து நிற்கக்கூடியனவாயும் இருத்தல்வேண்டும்.

மருந்து சாமான்கள்.

யுத்தத்திற்கு வேண்டிய கலப்பொருள்கள், அநேகமாக ரஸாயன சாஸ்திரிகளால், ரஸாயன தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் முக்கியமாக வேண்டியவை, யுத்தத்தில் காயம்பட்டு விஷவாயுப் பிரயோகத்தினால் மூர்ச்சையடைந்த சிப்பாய்களுக்கு சிகிச்சை மருந்துகளே. 1914-ம் ஆண்டில் நடந்த போரில், உலகமெங்கும் மருந்துகளின் பஞ்சம் ஏற்பட்டது. ஏனெனில் அநேகமாய் ஜெர்மானியர்களைத்தவிர வேறு தேசத்தினர்கள், எவரும் அதிகமாய் மருந்துகள் தயாரிப்பதில்லை. உதாரணமாக 1915-ம் ஆண்டிலே 'ஆஸ்பரின்' என்ற மருந்தின் விலை முதல் வருடத்தியதைக் காட்டிலும் எட்டு மடங்கு அதிகரித்தது. யுத்தத்தின் இறுதியில், இங்கிலாந்து தேசத்தின் முயற்சியால் தயாரிக்கப்பட்ட (ஆஸ்பரின்) மேற்படி பஞ்சத்தை நீக்கி, 1918-ம் ஆண்டிலே முன் விலையைக்காட்டிலும் மூன்றிலொரு பங்காகக் குறைக்கப்பட்டது.

யுத்த மூலப்பொருள்கள்.

யுத்த மூலப்பொருள்களுள் செயற்கை பினால்கள் (Phenols) முக்கியமானவை. வெடி மருந்துகள் தயாரிப்பதிலும், இன்னும் பல ரஸாயனப் பொருள்கள் தயாரிப்பதிலும் இது இன்றியமையாததாக இருக்கிறது. யுத்தத்தில் அவசியமான மற்றொரு பொருள் பொட்டாஷ் (Potash). இருபத்தைந்து வருடங்களுக்கு முன், கனடா தேசத்திலிருந்தும் ருஷ்யா தேசத்திலிருந்தும் இயற்கையிலேயே படிந்துள்ளவைகளை வெட்டி எடுத்து வந்தார்கள். இரும்பு ஆலைகளின் ஊது உலை (Blast furnace) களிலிருந்து வெளி வரும் புகைத் தூசிகளிலும் மற்றும் சிமண்டு (Cement) ஆலைப் புகைகளிலும், ஏராளமாக பொட்டாஷ் பயனற்றுபோவது கண்டுபிடிக்கப்பட்டது. தற்காலத்தில் அமெரிக்கா தேசத்தில் பொட்டாஷ் தயாரிக்கும் முறை மிக ஊக்கத்துடன் நடைபெற்று வருகிறது.

சோப்பு செய்வதில் உபப்பொருள்கள்

க்ளிஸரைன் (Glycerine) சோப்பு தயாரிப்பில் முக்கியமான உப விளைவுப்பொருள் (Bye-product) 1913 ஆண்டிலே உலகத்தில் 135,000000 டன்கள் தயாரிக்கப்பட்டன. 1939-ம் ஆண்டிலே 350,000000 டன்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சில வருடங்கட்கு முன்னர், ஒரு ஜெர்மானியப் பத்திரிகையில் சோப்பு உபயோகப்படுத்துவதைக் கொண்டு, அந்தந்த தேசத்தின் நாகரிகத்தை மதிப்பிடலாம் என்று வரையப்பட்டிருந்தது. உலகில் அதிகமாக சோப்பு தயாரிப்பதில் ஜெர்மனி முனைந்திருக்கிறது என்றால், அதன் உப-விளைவுப்பொருள்களும் அங்கு அதிகம் என்று எண்ணலாம்.

இரசாயன ஆராய்ச்சி

ஜனசமூகத்தில், ரஸாயனிகள் முக்கியமானவர்கள் என்று சென்ற யுத்தத்திலிருந்து தெளிவாயிற்று. இவர்கள் ரஸாயன முறைகளில் ஈடுபட்டு, ரஸாயனப் பொருள்களை தயாரிப்பதினாலேயே, அந்தந்த நாடுகள் யுத்தத்திற்கு தயாராகின்றன எனலாம். ஆனால் அவர்கள் யுத்தத்தின் காரண-கர்த்தர்கள் அல்ல. ஏனெனில் ரஸாயனிகளால் தயாரிக்கப்பட்ட பொருள்கள் சமாதான காலங்களிலும் ஜனங்களுக்கு உதவுகின்றன. இவை மருந்துகள்,

சாயம், உரங்கள் (Fertilisers) முதலியவை தயாரிப்பதில் மூலப்பொருள்கள் ஆகும்.

யுத்தத்திற்கு வேண்டிய முக்கிய சாமான்

எண்ணெ (Fuel-oil) இந்த யுத்தத்திலும், அதன் பிறகும் அதிகமாய் உபயோகப்படுத்தப்படும். 1918-ம் ஆண்டில், "இந்த யுத்தத்தின் வெற்றி எண்ணெத் திரைகளின்மேல் மிதக்கிறது'' என்று சொல்லப்பட்டது. இப்பொழுது கப்பல்களனைத்தும் எண்ணெயாலேயே ஓட்டப்பட்டு வருகின்றன. சுமார் தொண்ணூறு வருடங்கட்கு முன்தான் சில எண்ணெயின் உபயோகம் கண்டுபிடிக்கப்பட்டது. தற்கால ராணுவங்கள் எண்ணெயால் ஓட்டப்பட்ட தளவாடங்களாலும், யந்திரங்களாலும் பயற்சிபெற்று, நடைபெற்று வருகின்றன.

சமாதான காலத்திலும், இதன் உபயோகம் மிகவும் அதிகம். ஆதலால் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு உலகத்திலிருக்கும் இயற்கை எண்ணெ ஊற்று குறைந்துபோகும். அப்பொழுது என்ன செய்வது? கரி, நீர், காற்று இவைகளால் ரஸாயன முறைப்படி ஆராய்ச்சி செய்து செயற்கை எண்ணெ தயாரிப்பதே நலம். உலகிலிருக்கும் இயற்கை எண்ணெ ஊற்றுக்களில் பல ஆங்கிலேயருக்கும், அமெரிக்கருக்கும் சொந்தமாயிருக்கின்றன. ருஷ்யாவிலும், ருமேனியாவிலும் மற்றவை இருக்கின்றன. ஜெர்மனியில் செயற்கை எண்ணெக்காக, முப்பது ஆலைகள் இருக்கின்றன. ஆதலால் இந்த எண்ணெக் கிடங்குகளில் குண்டுபோட்டு எரித்து, யுத்தத்தை விடாமல் நடத்தி வந்தால், வெற்றி ஆங்கிலேயருக்கே என்பது நிச்சயம். ஆனால் ஜெர்மானியர் யுத்தத்திற்கு முன் எவ்வளவு செயற்கை எண்ணெ சேகரித்திருக்கின்றார் என்று சொல்ல முடியாது. பெரும்பாலும் இந்த யுத்தம் இயற்கை எண்ணெக்கும், செயற்கை எண்ணெக்கும் என்று கூறலாம்.

"ஸங்கீத ஞானமு"

T. V. கிருஷ்ணஸ்வாமி, B. A.,

சென்னை சர்க்கார், அவர்கள் செலவில், என்னை இண்டோசைனாவிற்குப் போய்வருமாறு நிர்பந்திக்கிறார்கள். அவ்விடத்திய சங்கீதத்தையும் நம் கர்னாடக சங்கீதத்தையும் எப்படிஒன்று சேர்த்து இன்னும் ருசியுள்ளதாகச் செய்யலாம் என்று சோதித்துவரும்படி என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். வருகிற வெள்ளிக்கிழமை கப்பலில் புறப்படுகிறேன். ஒருவாரத்துக்கு மேல் அங்கு தங்க முடியாது. வேறு வேலையில்லையா எனக்கு?

இதிலிருந்து நான் மஹா ஸங்கீத வித்வான் என்று எண்ணிக்கொண்டு விடவேண்டாம். எவ்வளவோ முயன்றுதான் பார்க்கிறேன். பயனில்லை. எனக்கு கொஞ்சம்கூட ஸங்கீதம் வரவில்லை. இயற்கை வாஸனை வேண்டும் போலிருக்கிறது. இசைத்தட்டுச் சங்கீதம், சினிமாச் சங்கீதம், வானொலிச் சங்கீதம், வாரம் இரண்டு கச்சேரி, இவ்வளவும் சேர்ந்தும் கூட என்னை வித்வானுக்கமுடியவில்லை. முயற்சி திருவினையளிக்குமென்கிறார்களே? எங்கே அளித்தது?

திருவை நான் அளிக்கிறேன். அது வாஸ்தவம். எனக்கு ஏதோ பகவான் கொடுத்த பணம் இருக்கிறது. கேட்பவர்களுக்கு இல்லை என்று எப்படிச் சொல்வது? தாட்சிண்யம். இவ்வூர் சபையின் அக்ராஸனரும் காரியதரிசியும் சபையை ஆதரிக்கவேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்டார்கள். ரூபாய் 300 கொடுத்து ஜீவிய மெம்பராகச் சேர்ந்துகொண்டேன். மறுநாள் சபையின் பொதுக்கூட்டம். அதற்கும் வரும்படி என்னை நிர்பந்தித்தார்கள். சென்றேன். பொதுக் கூட்டத்தில் நான் சங்கீதத்தின்மேல் கொண்டுள்ள ஆர்வத்தையும் என் தாராள மனதையும் நான் உதவிய நற்கொடையையும் பெரிதும் பாராட்டிக் கூறினர் காரியதரிசி. பிறகு பல பேர் பலபடியாகப் புகழ்ந்தனர் என்னை. அவ்வளவு குணங்களும் எனக்கு இருந்ததாக அதுவரையில் நான் அறிந்ததில்லை. எனக்கு மாலையும் சூட்டினார்கள். ஒரு கச்சேரியும் நடந்தது. சங்கீத வித்வான்களுக்கு வந்தனோபசாரம் கூற நானே தேர்ந்தெடுக்கப்பட்டேன். தைரியமாகவே எழுந்து முன் வந்தேன்.

“ரஸிகர்களே, சபையோர்களே! எனக்கு சங்கீதம் சுட்டுப்போட்டாலும் வராது. ஆனாலும் இன்று இவ்விடம் நடந்த கச்சேரியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்” என்று ஆரம்பித்துவிட்டு ஒரு நிமிஷம் நின்று கூட்டத்தைப் பார்த்தேன். அவ்வளவு வித்வான்கள் நிறைந்த கூட்டத்தில் ஒருவனாவது என்னை, ‘போதும், உட்கார்’ என்று சொல்லவில்லை’. ‘ஏனய்யா உமக்குத்தான் சங்கீதம் தெரியாதென்கிறீரே. பின் இங்கு என்ன வேலை உமக்கு’, என்று ஒருவன் கேட்கமாட்டானோ? அதுதானில்லை. சரி. சங்கீதத்தைப்பற்றி சொல்ல லாயக்கானவன் நான்தான்; நான் ஒருவன்தான் என்று அதுமுதல் தீர்மானித்துக்கொண்டுவிட்டேன். அது முதல் ஒவ்வொரு கச்சேரியும் முடிந்தவுடன் பாராட்டுப் பேச்சு என்னுடையதுதான்.

என் பெயர் பேபரில் வந்து விட்டது. சபையின் வருஷாந்திர ரிபோர்ட்டில் கொட்டை எழுத்துக்களில் என்பெயர் அச்சிடப்பட்டது. வெளியூர் சபைகளும் இதைக்கண்டு என் அன்புக்கும் ஆதரவுக்கும் போட்டியிட ஆரம்பித்து விட்டன. அவைகளுக்கும் நன்கொடை அனுப்பிவைத்தேன். சில நாட்களுக்குள் என்ன ஆச்சரியம் என்கிறீர்கள்! எனக்கு அழைப்பு இல்லாத கச்சேரிகள் கிடையாது. சங்கீத உலகில் ப்ரக்யாதிபெற்ற பேர்வழியாகி விட்டேன். பத்திரிகைகளும் சங்கீதக் கச்சேரிகளை விமர்சனம் செய்யவேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொள்ளுகின்றன.

நான் சிலாகிக்காத கச்சேரி கச்சேரியல்ல. அவ்வளவுதான். எல்லா ஊர்களிலிருந்தும் வித்வான்கள் என் வீட்டில்தான் வந்திறங்குகிறார்கள். கச்சேரிகளுக்கு முதல் அழைப்புப் பத்திரம் எனக்குத்தான் கிடைக்கிறது. என்னுடைய அபிப்பிராயத்தைக் கொண்டுதான் கல்யாண காலங்களில் கச்சேரிகள் அமைக்கப்படுகின்றன. என் முகத்தைப் பார்த்துக் கொண்டுதான் கச்சேரிகளில் சிரக்கம்பம் செய்கின்றார்கள். ‘கச்சேரி எப்படி?’ என்று என்னைத்தான் கேட்கிறார்கள் கடைசியில். பொதுமக்களும் சங்கீத சபைகளும் என்னிடம் காட்டின ஆதரவின் பயனாக சமீபத்தில் தியாகராஜபுரத்தில் நடந்த அகில இந்திய சங்கீத மகாநாட்டிற்கு நான் அக்கிராஸனம் வகிக்கவும் நேர்ந்தது. அதில் என்னுடைய முன்னுரையில், பொதுவாக நம் சங்கீதத்தின் பெருமையையும் மகிமையையும்பற்றி சொல்லிவிட்டு அதிலுள்ள சில குறைபாடுகளையும் எடுத்துக்காட்டி அவைகளை எப்படி விலக்கி விருத்தியாம்சம் செய்யலாமென்று பின் வருமாறு பிரசங்கம் செய்தேன். “ஒரு மனிதனின் பிரத்தியேக உணர்ச்சியை கானரூபமாக வெளியிடுவதே சங்கீதம். அப்படி வெளியிடப்பட்ட உணர்ச்சியானது ஒரு கட்டுப்பாட்டுக்கும் அடங்காது. ராகங்களாலும் அவைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட ஸ்வரக் கிரமங்களாலும் கட்டுப்பாடுகள் மிகுந்து இயற்கை உணர்ச்சி சரிவர வெளியிடமுடியாமலிருக்கிறது.

இதுகாரணம் பற்றியே, என்னைப்பற்றிய வரையில் நம் சங்கீதத்தில் “ஹம்ஸத்வனி”, “காம்போதி”, என்று ராக பாகுபாடுகள் வைக்காமலிருப்பது உசிதமென்று தோன்றுகிறது. (ரொம்பவும் சரி! பேஷ்! என்று சபையோர்கள் ஆரவாரம்) இந்த யோசனையை சங்கீதத்தைக் கையாளும் வித்வான்கள் தீர ஆலோசித்து அனுஷ்டிப்பார்கள் என்று நம்புகிறேன்”.

திராக்ஷோ பெர்ரோடோன்

ஜீரண சக்திக்குச் சிறந்த ஔஷதம்.

ஸிரப் பர்ட்டுஸோல்

கக்குவான் இருமலைப் போக்கடிக்க
பெயர் பெற்றது.

எல்லா இங்கிலீஷ் மருந்துக் கடைகளிலும்
கிடைக்கும்.

நவரத்ன பார்மஸி,

த பெ. 68, கொச்சின்.

சிறைப்பள்ளிக்கூடம்

R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.

திருச்சி சிறையில் வக்கீல் நண்பரொருவரோடு பேசிக்கொண்டிருந்தேன். "என்ன ஸார், கடனாளிகளை அடைக்கும் சிறைச்சாலையாகிய இந்தப் பொட்டலில் நம்மைக்கொண்டு வந்து வைத்திருக்கிறார்களே, என்ன வெய்யில் தகிக்கிறது! தாங்கமுடியவில்லையே!" என்றேன். அதற்கு என் நண்பர் "ஆமாம் ஸார், கச்சேரியில் 'ஜெயிலுக்குப் படிகட்டி விடுகிறேன், யுவர் ஆனர்' என்று சொல்லி எத்தனை கடனாளிகளை இவ்விடத்திற்கனுப்பியிருக்கிறோம். அந்த வதைதானிது! அவர்களுக்குக் கிடைக்கும் சுகத்தை நாமும் கொஞ்சம் ருசி பார்க்க வேண்டியதுதான்" என்று பதில் சொன்னார்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது வெளி வராந்தாவிலிருந்து ஒரு சத்தம் கேட்டது. "அதோ பார் ஜலமண்டலி! அடி, அடி" என்று ஒருவர் சொல்லிக்கொண்டிருந்தார். வெளியில் போய் பார்த்தபொழுது ஒருவர் துடைப்பத்தினால் ஒரு ஜந்துவை அடித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் அதைப் புரட்டிப்பார்த்துவிட்டு "சே! இது ஜலமண்டலி அல்ல. ஜெயில் மண்டலிதான்" என்று சொல்லிவிட்டு துடைப்பத்தை ஒரு மூலையில் போட்டார். 'ஜெயில் மண்டலி' என்பது திருச்சி சிறையில் வாசம் செய்துவரும் ஒருவகை எட்டுக்கால் பூச்சி. பார்ப்பதற்கு ஜலமண்டலிபோலவே இருக்கும். சிறையின்



ஒரு பிளாக்கில் ஜலமண்டலி அடிக்கடி வந்துகொண்டிருந்தது. ஆகையால் அதற்கு "ஜலமண்டலி பிளாக்" என்று பெயர் வைத்தார்கள். நாளடைவில் இந்த ஜந்து எல்லா பிளாக்கிலும் உறவுகொண்டாட ஆரம்பித்தது. எங்கும் ஒரே பீதி உண்டாகிவிட்டது. ஜலமண்டலியைப்போல் இருக்கும் எட்டுக்கால் பூச்சிகளுக்கும் ஆபத்து நேர்ந்துவிட்டது. கேவலம் எட்டுக்கால் பூச்சி என்று சொல்வதற்கு

பதிலாக "ஜெயில் மண்டலி" என்று சொல்வார்கள்.

திருச்சி சிறையில் சூபரின்டெண்டெண்டாயிருந்தவர் வேலை செய்து சளைத்துப்போன ஒரு ரிடயர்டு உத்தியோகஸ்தர். தண்ணீர் இறைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தது ஒரு ரிடயர்டு என்ஜின்! பாதி தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கும் போழுதே அது நின்று விடும். அது நின்ற சமயம் ஒரு விசித்திரக் காட்சியாக இருக்கும். குளிப்பவர்கள் அப்பொழுதுதான் ஒரு குவளை தண்ணீரை விட்டுக்கொண்டு, நனைந்ததும் நனையாததுமாக விருப்பார்கள். சிலர் உடம்பில் ஸோப் தேய்த்துக்கொண்டு நிற்பார்கள். சிலர் துணிகளைத் துவைத்துக் கொண்டிருப்பார்கள். ஒருவர் 'நேரம் ஆய்விட்டது, தண்ணீர் நின்றுவிடும்' என்று சொல்லிக்கொண்டே வாளியும் கையுமாக வெகு வேகமாகக் குழாயடிக்கு வந்து கொண்டிருப்பார். நடு வழியிலேயே தண்ணீர் நின்ற செய்தி தெரிந்தவுடன் அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்று விடுவார். பாவம் இவர் குளித்து இரண்டு நாளாயிருக்கும். துவைக்க வேண்டிய துணிகளோ ஒரு மூட்டை இருக்கும். மழையில்லாத போனுல் வருண ஜபம் செய்வதுபோல் எல்லோரும் குழாயடியில் நின்றுகொண்டு சிறிது நேரம் என்ஜினைக் குறித்து ஜபம் செய்து பார்ப்பார்கள். தண்ணீர் வந்தாலும் வரும்; இல்லாவிட்டாலும் இல்லை.

ஆனுல் இந்த என்ஜினிடம் ஒரு விசேஷம். சூபரின்டெண்டெண்டு வரும் பொழுதெல்லாம் வெகு மும்மரமாக வேலை செய்யும். தண்ணீர் நின்று போகும்போது நிகழும் காட்சியை சூபரின்டெண்டெண்டு பார்க்க முடியாமலேயே இந்த என்ஜின் செய்து கொண்டிருந்தது.

திருச்சி சிறையில் தண்ணீர் அருந்தல் என்று கேள்விப்பட்டு திருச்சினுப்பள்ளி முனிஸிபாலிடியார் தங்கள் தண்ணீர் சப்ளை குழாய்களை ஜெயிலை நோக்கிப் போட்டுக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியின் பலனை யனுபவிக்கச் சிறையில் எவரேனும் இருப்பாரோ என்னவோ சந்தேகம்தான்!

"ஒரு வாளி தண்ணீரில் ஸ்நானம் செய்யக் கற்றுக் கொள்ளவேண்டும். நமது ஜனங்கள் படுக்கையைக் கூட இடுப்பில் கட்டிக்கொண்டு நனைக்க வேண்டுமென்று விரும்புகிருர்கள்" என்பார் ராஜாஜீ. ஒரு வாளி தண்ணீர்கூட கிடைப்ப தரிதாயிருந்தபடியால் எல்லோரும் அவர் சொன்னபடி நடந்ததாகப் பெருமை கொள்ளலாம்.

"இவர்கள் அதிகாரிகளை வழிக்குக் கொண்டு வருவதற்காக ஒரு சிறு துரும்பையும் கிள்ளிப் போடுகிறதில்லை" யென்ற குற்றத்தை அபேத வாதிகளும் முன்னேற்றக் கட்சியினரும் சத்யாக்ரஹிகள் மீது சாட்டுவதுண்டு. "ஜெயிலில் உண்ணு விரதம், சட்ட மீறுதல் அல்லது வேறு ஏதேனும் கிளர்ச்சி உண்டா, பாருங்கள். இப்படியே இருந்தால் அதிகாரிகள் ஏன் குதிரை ஏறமாட்டார்கள்" என்று கேட்பார்கள். ஒரு நாள் சமையல் செய்வதற்காக அதிகாரிகள் சப்ளை செய்த விறகு ஈரமாயிருந்தது. அடுப்பில் வைத்தால் ஒரே புகை. சமையல் காரியங்களை கவனித்த அம்மாபேட்டை ஐயர் "என்னுல் முடியாது; இந்த விறகை வைத்துக்கொண்டு ஒன்றும் ஆகாது. இன்றைக்கு சமையல் வேண்டாம்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். சிறையில் ஒரே பரபரப்பு. சிலர் உண்ணு விரதமிருப்போமென்றனர். சிலர் அதனுல் ஒன்றும் பிரயோஜனமில்லை யென்றனர். "அடுப்பெரியாவிட்டால் எல்லோருமாகப் போய் ஊதுவோம்" என்றனர் சிலர். கடைசியாக எல்லோருமாக சமையல் செய்வதாகத் தீர்மானித்தனர். ஊர் கூடி செக்குத்தள்ளி 6 மணிக்கு ஆகவேண்டிய சமையல் 9 மணிக்கு ஆயிற்று. இதனுல் ஒரு நன்மையுண்டாயிற்று. சமையல் 9 மணிக்கு ஆகிறதென்ருல் அங்கு வேலை செய்து வரும் கிரிமினல் கைதிகளைக் கொண்டுபோய் அடைக்க இரவு 10 மணியாய் விடுவதால் அதிகாரிகளுக்கு கஷ்டமாயிற்று. ஆகையால் மறு நாள் முதல் நல்ல விறகே கொடுத்துக் கொண்டு வந்தார்கள்.

சமாசார பத்திரிகைகளைப் பரிசோதித்து அனுப்புவதில்தான் ஸத்யாக்ரஹிகளிடம் அரசாங்கத்தார் கொண்டுள்ள பயம் நன்கு புலப்படும். அரசியல் சம்பந்தமான எவ்வித செய்திகளும் ஸத்யாக்ரஹிகளுக்கு எட்டுவதில் அரசாங்கத்தார்களுக்கு ஆட்சேபணையில்லை. மற்ற ஜெயில்களில் நடப்பது மட்டும் இவர்களுக்குத் தெரியக்கூடாதாம்! அச்செய்திகளை

மட்டும் கரியைப்பூசி படிக்கமுடியாமல் செய்தனுப்புவார்கள். திருச்சி சிறையைப் பார்த்தால் ஒரு கல்வி நிலையம் எனவே தோன்றும். அரசியலையே சுவாச வாயுவாகக்கொண்ட ஒரு கூட்டத்தார் அரசியலையே பேசாமல், ஸ்மரிக்கக்கூட இல்லாமல் பல்லாயிராண்டு முந்திய ஒரு உலகத்திற்குத் தங்களை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். பண்டைக் காலத்திய நூல்களும், மதகிரந்தங்களும் படிக்கப்படுகின்றன. அவரவர்கள் வீட்டில் மூலை முடுக்குகளில் கிடந்தவை, அட்டைபோனது, எழுத்து மங்கினது, முதல் பதிப்பைத்தவிர இரண்டாம் பதிப்பை உலகம் காணாத புத்தகங்கள் எல்லாம் வெளியாகி உபயோகப்படுகின்றன. சிறிய சிறிய வகுப்புகளாகக் கூடி வாசிப்பதுமுண்டு. தனித்தனியே படித்தனுபவிப்பதும் உண்டு. ஸம்ஸ்கிருதமும் இன்னும் இதர பாஷைகளும் அறிந்தவர்களுக்குச் சிறையில் விசேஷச் செலாவணியுண்டு. சிறை வாழ்வுக்கு இம்மாதிரியான கல்வி பயிலும் போக்கை அளித்து வளர்த்தது ராஜாஜி ஒருபுறம், ஸ்ரீ பிரகாசம் மற்றொரு புறம்.

ராஜாஜீயின் இராமாயண வகுப்பு மிகவும் வசீகரமானது. சுமார் பத்து பேர்கள் இருப்பார்கள். ஸ்ரீ என். எஸ். வரதாசாரியார் படித்து அர்த்தம் சொல்வார். கொஞ்சம் பக்திபரமாகவிருக்கும். ஸ்ரீ சந்தானம் ஒரு வியாக்யானம் செய்வார். தர்க்கபரமாகவிருக்கும். இருவருக்குள் விவாதம். ராஜாஜீ குறுக்கிட்டு முடித்து விடுவது வழக்கம். கவிதைச் சுவை குன்றியிருக்கும் சில சருக்கங்கள் வரும்பொழுது ராஜாஜீ, "இதென்ன வால்மீகி எழுதினதாகத் தோன்றவில்லையே" என்பார். உடனே ஸ்ரீ சந்தானம் "இது வால்மீகி எழுதியிருக்க முடியாது. அவரது சிஷ்யர்களில் ஒருவரை இந்த சருக்கங்களை எழுதச் சொல்லியிருப்பார்" என்று கதைக்கு காதும் மூக்கும் வைத்துவிடுவார். ஸ்ரீ வரதாசாரியார் "நம் மனதில் பக்தி குன்றினால் கவிதைச்சுவையும் குன்றியதுபோல் தோன்றும்" என்பார். முடிவில் ராஜாஜீ "கவிதைச்சுவை குறைந்த செய்யுள்களை வால்மீகி எழுதியிருக்கமுடியாது என்று நான் சொல்லும்பொழுது வால்மீகியிடம் எனக்கிருக்கும் பக்தியும் மதிப்பும் தெரியவில்லையா, வரதாசாரியார்" என்று கேட்பார். ஸ்ரீ வரதாசாரியார் ஒன்றும் சொல்லாமல் அடுத்த சுலோகத்தை வாசித்து விடுவார்.

ஸ்ரீ சந்தானத்துடன் ஜெர்மன் பாஷை கற்பது ஒரு இரசமான அனுபவம். இருப்பது ஒரே ஜெர்மன் சுயபோதினி. அதை அவர் வாசித்துக்கொண்டே போவார். மற்றவர்கள் கேட்டுக்கொண்டிருப்பார்கள். ஞாபகத்திற்கு சிலவற்றைக் குறித்துக்கொள்ளலாமென்றால் அது கூடாதென்று விடுவார். காதுதான் உயர்ந்த போதனைக்கருவி என்பார். ஆனால் அவர் சொற்படி கற்றால் நோட்டுப் பென்ஸில் வேண்டியதில்லைதான். கற்கும் முறையிலேயே கற்றது மறவாது. உதாரணமாக ஜெர்மன் பாஷை இலக்கணத்தில் 'தேசம்' நபும்ஸகம். ஆங்கில பாஷையில் தேசங்களைப் பெண்பாலாகச் சொல்வார்கள். இதைக் கற்பிக்க ஸ்ரீ சந்தானம் "ஆங்கிலேயன் தேசங்களை ஆளப்பார்க்கிறான். ஹிட்லர் தேசங்களை (நபுஸ்கமாக எண்ணி) அழிக்கப்பார்க்கிறான்" என்பார். இதைக் கேட்டபிறகு தேசங்கள் நபும்ஸகமென்பதை ஒருவரும் மறக்க முடியாது.

ஊருக்குப் பால் குடிப்பதென்று சொல்வார்கள். சிறை ஒரே படிப்பு மயமாக இருந்ததால் சபலத்தின் காரணமாக அரைகுறையாகப் படித்தவர்களுமுண்டு. சிலர் இந்த அறிவை உபயோகப்படுத்தியும் விடுவார்கள். விடுதலையாகிச் செல்லவிருந்த ஒரு இளைஞன் தமிழ்நாட்டு பிரமுகரொருவரை ஆசிமொழி கேட்டான். அவர் உபநிஷத் வாசித்த உத்ஸாகத்தில் உபநிஷத் வாக்கியமொன்றையே ஆசியாக எழுதிக் கொடுத்துவிட்டார். **सत्यं वध** (ஸத்தியத்தைக் கொல்) என்று. உண்மையில் தவறுதலாக மூன்றாவது 'த' போடுவதற்கு நான்காவது 'த' வைப் போட்டுவிட்டார்!

நண்பரொருவர் ஸம்ஸ்கிருதபாஷை கற்கும் எண்ணத்துடன் ஸ்ரீமத் சங்கராசாரியரின் பூரண கிரந்தங்களையும் வாங்கியிருந்தார்! நீந்த கற்றுக்கொள்வதற்காக சமுத்ரத்தில் குதிப்பதுபோல! ஆனால் ஸம்ஸ்கிருதம் அறிந்த மற்றவர்களுக்கு அவை உபயோகப்பட்டன.

மண்ணிலிருந்து எண்ணை எடுப்பவரென்று சிறையில் ஒருவருக்குப் பெயருண்டு. அவர்

தான் ஸ்ரீ பாபிநீடு. ஒவ்வொரு மாதக் கடைசியிலும் அடுத்த மாதம் விடுதலையாகும் சத்யாக்ரஹிகளுக்காக ஒரு தமாஷாக் கூட்டம் கூட்டுவார். ராஜாஜிகூட வருவதுண்டு. கல்லூரி சுப்பராவ் பிறர்களைப்போல் நடந்து நடிப்பதில் நிபுணர். அதிலும் நேருக்கு நேரே செய்து காட்டும் தூர்க்குணம் அவரிடமுண்டு. ஆகையால் நம்மவர்களில் அதிக மெல்லிய தோலுடைய நண்பர்களெல்லாம் அவரிடம் முன்னதாகவே சென்று 'தயவுசெய்து தாங்கள் என்னைப்போல நடிக்கவேண்டாம்' என்று அவரைக் கேட்டுக்கொண்டுவிடுவார்கள். சித்தூர் வரதாச்சாரியார் இம்மாதிரிகொண்டாட்டங்களில் பாடுவதுண்டு. மல்லிகார்ஜுனுடு சுலோகங்களியற்றுவார். மஞ்சுநாத ராவ் தண்ணீர் வைக்கும் பானை ஒன்றை கொண்டு வந்து கடம் அடிப்பார். நன்றாய் ஊறின பானையாதலால் இரண்டு தட்டலில் உடைந்து விடும். பிறகு எழுந்திருந்து போய்விடுவார். நாகப்பா ஜாலவித்தை செய்து காட்டுவது வழக்கம். கடைசியாக பாபிநீடு விடுதலையாகும் சத்யாக்ரஹிகளுக்காக ஒரு கேடயம் கொடுப்பார். அடி குழிந்த ஒரு பழக்கூடையின் மூடியை எடுத்து அதன் இரண்டு பக்கங்களில் காகிதத்தை ஒட்டி ஏதாவது ஒருசித்திரத்தை எழுதி அதை மாதம் முதல் தேதி விடுதலையாகும் சத்யாக்ரஹியின் கையில் கொடுத்து விடுவார்.

உலகம் பலவிதமென்று சொல்வார்கள். சிறையுலகம் பற்பலவிதமாகத்தான் தோன்றுகிறது.

மனமிரங்குங்கள்.

எம். ஆர்.

"சர்க்கார் மத விஷயத்தில் தலையிடலாமா? அதுவும் ஹிந்து மத தர்ம பரிபாலன போர்டார் இப்படி செய்யலாமா, பரம்பரை பாத்யமல்லவா?" என்று முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள் சங்கரன் கோயில் நாவிதர்கள்.

விஷயம் இது தான். "கோவிலுக்கு குடுமியை காணிக்கையாக செலுத்தும் யாத்ரீகர்களை மொட்டையடிக்கும் பாத்தியம் தங்களுக்கே பரம்பரையானது. அந்த பாத்யத்தில் தலையிட்டு அதை ஏலம் போட்டு துகை வசூலிப்பது அக்ரமம்" என்பது நாவிதர்கள் கட்சி.

"செக்ஷன் அனுமதிக்கிறது அப்படிச் செய்ய" என்பது போர்டாரின் வாதம்.

இவ்விஷயம் சமரசமாக தீர்ந்துபோக வேண்டுமெனவே எமது பிரார்த்தனை. நாவிதர்களே! பண்டிதர்களே! வைத்தியர்களே! தயவு செய்து வேலை நிறுத்தம் மட்டும் செய்துவிடாதீர்கள். ஏழை குடுமி காணிக்கை செலுத்துபவர்களின் கஷ்டங்களை உணருங்கள்! அவர்களுக்கு இறங்காவிட்டாலும் கடவுள் மீதாவது மனமிறங்குங்கள்!!! குடுமி காணிக்கை செலுத்துபவர்கள் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்போவதாக வதந்தி! "உஷார்!!".

—0—

பெஸிபிக் கொந்தளிப்பு

ராஜம்

நாடுகளைப் பிடிக்கும் ஆசை மதக்கொள்கையை மறக்கச்செய்கின்றது. புத்தமதஸ்தர்களான ஜப்பானியர் அஹிம்சைக் கொள்கையை அடியோடு பெஸிபிக் மகா சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள். பெஸிபிக் மகா சமுத்திரம் அதனுலே கொந்தளிக்கிறது. பக்கத்திலிருக்கும் பகைவனை ரஷயாவும், ஜர்மனியுடன் கடும்போரில் மாட்டியிருக்கிறது. தெற்கே பாய்ந்து டச்சு இந்தியத் தீவுகளைப் பிடித்துக்கொள்ள இதைவிட அரிய சந்தர்ப்பம் எப்பொழுது வாய்க்கும். பிரிட்டனும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தவிக்கின்றது. அமெரிக்காவோ அநேக மைல்களுக்கப்பாலிருக்கின்றது. பிரிட்டன், அமெரிக்க இவைகளால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார யுத்தத்தையும் பொருட்படுத்தாமல் துள்ளிக் குதிக்கும் குள்ளர்கள் நாட்டின் நிலமையைச் சற்று ஆராய்வோம்.



4072 எரிமலைத் தீவுகளடங்கிய ஜப்பனின் விஸ்தீர்ணம் 148000 சதுர மைல்களிருப்பினும், ஆறில் ஒரு பங்குதான் நிலவளமுள்ளது. ஜனத்துகையோ 72,000000. ஒரு நிமிஷத்தில் நான்கு குழந்தைகள் வீதம் பிறந்து கொண்டேயிருக்கின்றன. ஒரு சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள நிலவளமுள்ள பூமியில் 2750 நபர்கள் வசிக்கவேண்டியிருக்கிறது. மிகவும் மேன்மையான நிலைமையில் இருக்கும் ஜப்பானிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து வரவேண்டியிருக்கிறது. பருத்தி, நிக்கல் பாதரஸம், மண்ணெண்ணை வகையறுக்கள், இரும்பு, செம்பு, அலுமினியம் முதவிய உலோகங்களும் வெளி நாடுகளிலிருந்தே வாங்கப்பட வேண்டும். ஜப்பானிய கைத்தொழில் முறைகளும் மிகவும் சிறந்ததாக இருப்பதாலும் ஜப்பானியர்கள் தங்கள் சாமான்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி இதர தேசங்களுடன் வியாபாரத்தில் போட்டிப்போடுகிருர்கள். அவர்களுக்குத் தங்கள் சாமான்களை விற்பதற்கு ஸ்திரமான மார்க்கெட்டு வேண்டியது அவசியமாயிருக்கின்றது. இக்காரணங்களுக்காக அவர்கள் ஜப்பானிய ஆதிக்யத்தை விஸ்தரிக்க வழிதேடுகின்ருர்கள்.

ஜப்பானின் அயல்நாட்டுக் கொள்கைகளில் மக்களிடையே அபிப்பிராய பேதமே கிடையாது. ஜப்பானின் ஆதிக்கத்தை ஆசியாமுழுவதும் பரப்பவேண்டும் என்ற ஒரே நோக்கம்தான். பிறநாடுகளைப் பிடிக்கத் துரிதமாய் இருக்கிருர்கள். கிழக்கில் ஒரு சாம்ராஜ்யத்தை

நிலை நிறுத்தவேண்டும்; அதற்காக ரஷ்யாவின் இறக்கைகளையொடிக்கவேண்டும்; சைனுவிலிருந்து ஆங்கிலேயர்களை அடித்துவிரட்டவேண்டும்; தெற்கேயுள்ள டச்சு இந்தியத்தீவுகளையும் அமெரிக்காவுக்குச் சொந்தமான தீவுகளையும் கைப்பற்ற வேண்டுமென்று பகீரதப் பிரயத்தினங்கள் செய்யப்படுகின்றன. கிழக்கு ஆசியா கடவுளால் தங்களுக்கென்று சிருஷ்டிக்கப்பட்ட பாகமென்றும், அதில் பிறருடைய உபத்திரவமே இருக்கக்கூடாதென்றும் ஜப்பானியர்கள் எண்ணுகிறார்கள். ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கப் பிராந்தியங்களில் தலையிடக்கூடாது என்று மன்றோ கோட்பாடு இருப்பதுபோல் கிழக்கு ஆசியாவிலும் எந்த ஐரோப்பிய நாடும் தலை காட்டக்கூடாது என்ற ஒரு கோட்பாட்டை ஜப்பான் ஊர்ஜிதப்படுத்த விரும்புகிறது. ஆனல் சைனுவிலும் பெஸிபிக் மகா சமுத்திரத்திலும் அக்கரையுள்ள பிரிட்டனும் யுனைடெட் ஸ்டேட்ஸும் தங்கள் பாத்தியங்களை விட்டுக் கொடுத்துவிட சம்மதிப்பார்களா? எப்படியும் சண்டை நடப்பது நிச்சயம் என்று இருதரப்பிலும் யுத்த முஸ்தீப்புகள் தயார் செய்கிருக்கிருர்கள்.

சைனுவும், ஜப்பானும்:—

சைனுவிலே ஜப்பானிய முதலீடு பெருவாரியாக இருக்கின்றது. ஜப்பானிய ஏற்றுமதிகளில் பத்தில் ஒரு பங்கு சைனு எடுத்துக்கொண்டிருந்தது. சைனுவை சுறண்டுவதிலேயே ஜப்பானுக்கு திருஷ்டி. அரசியல் பொருளாதார விஷயங்களில் சைனு ஜப்பானுக்கு அடிமையாக இருக்கும்படி செய்ய மகத்தான சூழ்ச்சிகள் செய்யப்பட்டது. 1894ல் கொரியாவையும், பார்மோஸாவையும் ஜப்பான் சைனுவிடமிருந்து பிடுங்கிக்கொண்டது. 1905ல் ருஷ்ய ஜப்பானிய யுத்தத்தின் போது ஆர்தர் துறைமுகத்தையும், டைரன் முதலிய பிரதேசங்களையும் கைப்பற்றியது. 1931ல் ஜப்பான் சைனுவின்பேரில் படையெடுத்தது. சைனுவோ யுத்தத்திற்கு தயாராகவில்லை. படையெடுத்த பதினைன்று நாட்களுக்குள் மஞ்சூரியா பிடிக்கப்பட்டு, பழைய அரசவம்சத்தைச் சேர்ந்த காங்டே என்பவன் அரசனுக நியமிக்கப்பட்டான். அவன் ஜப்பானிய சக்ரவர்த்தியின் ஆதிக்கத்தின் கீழ் மஞ்சுகோ என்று மாற்றப்பட்ட பெயருடைய மஞ்சூரியாவை ஆளத்துடங்கினன். நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக சைனுவின் வட பாகத்திலுள்ள சில பிரதேசங்களைக் கைப்பற்றியது. மஞ்சுகோவின் எல்லையானது நகர்த்தப்பட்டது. உள் மங்கோலியாவின் கிழ்புறமுள்ள ஜகோஸ் என்ற மலைப்பிரதேசங்கள் பிடிக்கப்பட்டு மஞ்சுகோவுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

மஞ்சூரியாவை பிடித்ததில் ஜப்பானுக்கு அதிக லாபம். ஜப்பானிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்களும், ஜப்பானிலிருந்து ஏற்றுமதியாகும் சாமான்களுக்கு விற்பனை மார்க்கெட்டும் கிடைத்துவிட்டது. ரஷ்யாவைத் தாக்கவோ, வெளி மங்கோலியாவை ஆக்ரமிக்கவோ, ரஷ்யாவிற்கும் சைனுவுக்கும் உள்ள தொடர்பை கத்தரிக்கவோ மிகவும் சாதகமாயிற்று.

ஐரோப்பிய வானத்தில் யுத்த மேகங்கள் கர்ஜனை செய்தால் ஜப்பான்பாடு கொண்டாட்டம். அச்சுநாடுகளுடன் இணைந்ததல்லவா ஜப்பானும்! மேற்கே ஹிட்லருக்கு வெற்றி கிடைத்தால், கிழக்கே ஜப்பானும் எங்காகிலும் ஒரு இடத்தில் தன் வெற்றிக்கொடியை நாட்டிவிடும். 1938ல் ம்யூனிச் ஒப்பந்தம் ஏற்பட்டு, ஜர்மனிக்கு சுடேடன்லாண்டு கிடைத்தவுடன், கிழக்கே ஜப்பான் காண்டனைப் பிடித்துக்கொண்டது. முறையே ஹைனன், ஸ்பிராட்லி தீவுகளையும் பிடித்துக்கொண்டுவிட்டது.

ரஷ்யாவும் ஜப்பானும்:—

மஞ்சூரியா ரஷ்யாவின் எல்லைப்புறத்தில் இருப்பதால் ரஷ்யா தகுந்த முஸ்தீப்புகளுடன் ஜாக்கிரதையாகவே இருக்கிறது. ஜப்பானும் ஆமூர் நதிக்குப் பக்கத்தில் அரண்கள் அமைத்திருக்கிறது. ரஷ்யாவின் முக்கிய போக்குவரத்து சாதனமான டிரான்ஸ்ஸைபீரியன் ரயில்வே தொடரானது ஆமூர் நதிக்கு அருகில் இருப்பதால், இரு தேசங்களுக்கும் யுத்தம் ஏற்பட்டால் இந்த ரயில்வே தொடர் பிடிக்கப்படும். பெஸிபிக் சமுத்திரப் பக்கமுள்ள ரஷ்யப் பிரதேசங்கள் தனிமையாக்கப்படும். ரஷ்யா இதை உத்தேசித்து இத்தொடருக்கு நேராக பெஸிபிக் கரையில் விளாடிவாஸ்டாக்கிற்கு வடக்கேயுள்ள கான்ஸோமால்ஸ்க்கிலிருந்து டைஷட் என்னுமிடம் வரையில் ஒரு ரயில் தொடர் போட்டிருக்கிறது.

7000 மைல்களுக்கு அப்பாலிருந்து எல்லைப்புறத்தைக் காப்பது கஷ்டம் என்று எண்ணி, பைகால் ஏரிக்கு சமீபத்தில் விமானப்படை நிலயங்களும் ஆயுதத் தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விலாடிவாஸ்டாக், காபரோஸ்க் என்ற இடங்களிலும் ஆகாயப்படை நிலையங்களும், பட்டாளங்களும் தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஜப்பான் தலைநகரான டோகியோவிலிருந்து 700 மைல்கள்தான். அவ்விடங்களிலிருந்து ஜப்பானைத் தகர்ப்பது மிகவும் எளிது. ரஷ்யாவிற்கும், ஜப்பானுக்கும் மீன் பிடிப்பதைக்குறித்து எப்பொழுதும் சச்சரவுதான். ஆனால் சமீபத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் இரு தேசங்களுக்கும் ஏற்படவிருந்த யுத்தம் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதேயொழிய வேறில்லை.

இந்தோ சைனா, தாய்லாந்து:—

சென்றவருஷக் கடைசியில் சைனாவில் கிவாங்ஸி மாகாணத்தில் இருந்த ஜப்பானிய படைகள் தெற்கேயுள்ள ஹைனான் தீவுகளில் கொண்டுவைக்கப்பட்டது. தெற்கே படையெடுக்க ஹைனான் தீவு மிகவும் முக்கியமானது. ஏதேஷ்டமாக துருப்புகள் பார்மோஸாவிலும் ஹைனானிலுமிருந்தன, பிரான்ஸ் ஜர்மனியால் பிடிக்கப்பட்டவுடன், பிரான்ஸின் பலக்குறைவை ஜப்பான் பயன்படுத்திக்கொண்டது. ஜப்பான் துருப்புகள் இந்தோ சைனாவில் இருக்க அனுமதிக்கப்பட்டது. முக்கியமான துறைமுகங்களும் பிரதேசங்களும் ஆக்ரமித்துக்கொள்ளப்பட்டன. ஜப்பான் தாய்லாண்டைத் தாண்டிவிட்டது. எல்லைப்புறத் தகராறுகள் தாய்லாண்டிற்கும் இந்தோ சைனாவிற்கும் கிளம்பின. ஜப்பான் குரங்கு மத்தியஸ்தம்செய்ய ஒப்புக்கொண்டது. அதன் மூலமாக தனக்கு பக்க பலம் தேடிக்கொண்டது. இந்தோ சைனாவும் தாய்லாண்டும் ஜப்பானையே நம்பியிருக்கின்றன. அந்நாடுகளுக்கு அபயம் கூறி அவைகளின் விமான நிலையங்களையும் கப்பல் துறைமுகங்களையும் கேந்திரஸ்தானங்களையும் தன்னிடம் ஒப்புவிக்கக்கோருகிறது. இந்தோ சைனா ஒப்புவித்துவிட்டது. தாய்லாண்டு இன்றுவரை சம்மதிக்கவில்லை கூடிய சீக்கிரம் அதுவும் சம்மதித்துவிடலாம்.

சிங்கப்பூர், கிழக்கு இந்தியத்தீவுகள் இவைகளைப் பிடிக்க தாய்லாண்டு மிகவும் உபயோகமுள்ள இடம். தாய்லாண்டு சிங்கப்பூருக்கும் பர்மாவுக்கும் மத்தியிலிருக்சிறது. பர்மாவும் தாய்லாண்டும் சேருமிடத்தில் கிரா என்னும் 35 மைல்கள் நீளமுள்ள பூஸந்தி இருக்கிறது. சமீபத்தில் ஜப்பான் அதைக் கால்வாயாக வெட்டி ஜலஸந்தி ஏற்படுத்தியிருப்பதாக வதந்தி. ஆனால் ஊர்ஜிதமாகவில்லை. அங்கே கால்வாய் வெட்டப்பட்டது உண்மையாயின் சிங்கப்பூரின் முக்கியத்துவம் குறைந்துவிடும். பர்மாவிலுள்ள விக்டோரியா முனைக்கு சமீபத்தில் கால்வாய் இருக்குமாதலால் பர்மா இந்தியா இவைகளுக்கும் ஆபத்து நேரக்கூடும். ஆகையால் தாய்லாண்டை ஜப்பானின் ஆதிக்கத்தின் கீழ்போகும்படி விடக்கூடாது. இதற்குத்தகுந்த முயற்சிகள் பிரிட்டனாலும், யுனைடெட் ஸ்டேட்ஸாலும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூர்:—

சிங்கப்பூர் மலேயாவில் மிகவும் பிரதானமான துறைமுகம். மேல் நாடுகளிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் சைனா முதலிய கிழக்குப் பிராந்தியங்களுக்குச் செல்லவேண்டிய வியாபாரக் கப்பல்கள் சிங்கப்பூர் மூலமாகத்தான் செல்லவேண்டும். இயற்கை சாதனங்களுடன் கூடியது. ஆஸ்திரேலியாவிற்கும் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் கோட்டை வாசல் போன்றது சிங்கப்பூர். சுற்றி முற்றும் எதிரிகள் தங்கி சண்டை செய்யக்கூடிய பிரதேசங்கள் கிடையாது. கப்பல்களைப் பழுது பார்க்கவும் கப்பல்களுக்கான எண்ணை முதலிய சாமான்களைச் சேகரித்து வைக்க சௌகர்யங்களுமுண்டு. நேசப் பிரதேசமான மனிலாவிலிருந்தும் ஹாங்காங்கிலிருந்தும் சுமார் 1600 மைல்கள்தான். டோகியோவிற்கும் சிங்கப்பூருக்கும் 3345 மைல்கள். அமெரிக்க இறக்குமதிகளாலும் கஞ்சா உண்பவர்களாலும் தான் இந்த துறைமுகத்துக்கு வேண்டியச் செலவு கொடுக்கப்படுகிறது. அமெரிக்காவுக்கு வேண்டிய ரப்பரும், நாகமும் மலேயாஸ்டேட்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அவைகளின் ஏற்றுமதி வரிகளாலேயே சிங்கப்பூர் துறைமுகம் பரிபாலிக்கப்படுகின்றது. கிழக்கிந்தியத் தீவுகளில் அமெரிக்கர்களின் முதலீடு ரப்பர், புகையிலைத் தோட்டங்களில் அதிகமாகப் போடப்பட்டிருப்பதாலும் அவர்களுக்கும் சிங்கப்பூரைப் பாதுகாப்பதில் அக்கறையுண்டு.

ஜப்பான் தெற்கேயுள்ள டச்சு இந்திய தீவுகளை ஆக்ரமிக்க உத்தேசித்திருப்பதால், தங்கள் எண்ணம் பூர்த்தியாக இடைஞ்சலாயிருக்கும் சிங்கப்பூரின்மேல் எப்பொழுதும் கவனமுண்டு. சிங்கப்பூரைத் தாக்குவதென்றால் மலேயா நாடுகளிலோ அல்லது தாய்லாண்டிலோ தங்கள் யுத்த முஸ்தீப்புகள் இருக்க வேண்டும். மலேயா நாடுகள் பிரிட்டிஷாருக்குச் சொந்தமாதலால் அங்கே ஜப்பான் ஜம்பம் சாயாது. அதனால் தான் தாய்லாண்டைத் தாஜா செய்து கொண்டிருக்கிறது. தாய்லாண்டின் ஆகாயப்படை நிலையங்களும் துறைமுகங்களும் ஜப்பான் கைக்கு வந்துவிட்டால் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் ஆஸ்திரேலியாவிற்கும் ஆபத்துதான். ரஷ்யாவோ ஜெர்மனியுடன் கடும்போரில் சிக்கிக்கொண்டிருக்கிறது. அதனிடமிருந்து ஜப்பானுக்கு ஒரு ஆபத்தும் இப்பொழுது இல்லை. அதனால் கவலையில்லாமல் தெற்கே படையெடுக்கலாம் ஜப்பானின் எண்ணத்தையறிந்து பிரிட்டனும், யுனைடெட் ஸ்டேட்ஸும் ஜப்பான்பேரில் பொருளாதார யுத்தத்தை ஆரம்பித்துவிட்டது. ஆனால் ஜப்பான் தனது மூர்க்கத்தனத்தை விட்டு விடவில்லை. ஜப்பானைப் பொருளாதார யுத்தத்தால் வீழ்த்துவது கஷ்டம். ஏனென்றால் ஜப்பானில் உணவுப் பொருள்கள் அதிகம் இருக்கிறது. அப்படிப் பஞ்சம் வந்தாலும் பஸிபிக் சமுத்திரத்தில் மூழ்கி பச்சை மீன்களைக்கொண்டே காலம் கழித்து விடுவார்கள். மஞ்சூகோவில் அவர்களுக்குத் தேவையான மூலப்பொருள்களும் இருக்கின்றன.

சில மாதங்களுக்குள், ஏன் சில நாட்களுக்குள்ளாகவே, பஸிபிக் மகா சமுத்திரத்தில் கொந்தளிப்பு அதிகரிக்கும். யுத்தமேகங்களின் இடி மின்னல் கிளம்பும். அப்படிச் சண்டை ஏற்பட்டால் கிழக்குப் பிராயத்திலுள்ளவர்கள் எல்லோரும் நேர் முகமாகவோ மறைமுகமாகவோ பீடிக்கப்படுவார்கள். வியாபாரக் கப்பல்களின் போக்குவரத்துகள் தடைபட்டு விடும். விலை வாசிகளும் உயர்த்தப்படும். நாம் வரப்போகும் இன்னல்களுக்குத் தயாராக இருக்கவேண்டும்.

கேட்டீர்களா, கதையை?

யுத்தம் யுத்தம் என்று எங்கும் இதே பேச்சாக இருக்கிறதே. இந்த யுத்தத்துக்கு நாள் ஒன்றுக்கு என்ன செலவு தெரியுமா? யுத்த தேவதைக்கு நரபலி மட்டுமா? பொருள் பலியும் அத்யாவச்யமானது. நாளொன்றுக்கு இந்த தேவதை சுமார் 110 லட்சம் பவுனை எப்பம் விடுகிறது. நமது தென்னிந்தியாவும் ஏராளமான காணிக்கைகளை யுத்த தேவதைக்கு தியாகம் செய்திருக்கிறது. இன்னும் செய்துகொண்டும் வருகிறது. இந்தப் பணத்தில் எவ்வளவு தென்னிந்தியாவில் செலவழிக்கப்படுகிறது? ஜூன் மாதத்தில் 65 லக்ஷ ரூபாய்களுக்கு தென்னிந்தியாவிலிருந்து சாமான்கள் வாங்கப்பட்டதாம். அதில் 45 லக்ஷத்துக்கு மேல் ஒரு சில மில் முதலாளிகள் அடித்துக்கொண்டு போய்விட்டார்கள்! மிச்சம் சுமார் 17 லக்ஷம். தென்னிந்தியாவில் வசூலிக்கும் பணமெல்லாம் தென்னிந்தியாவிலேயே செலவு செய்யவேண்டுமென ஏன் நாம் கிளர்ச்சி செய்யக் கூடாது? ஏழைச் சொல் அம்பலத்தில் ஏறுமா?

சைனுலுவின்

லிவரைட்ஸ்

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி வியாதி நிவாரணி

15 நாள் சிம்பிள் மருந்து ரூ. 2 :: 15 நாள் காம்பிளிகேடெட் மருந்து ரூ. 3—4—0

ஏஜெண்ட்ஸ்:— **V. அண்ணாமலைப்பிள்ளை & சன்ஸ்.,**

இங்கிலீஷ் மருந்து ஷாப், :: பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

விரங்களுக்கு:— **லிவரைட்ஸ் கம்பெனி**, தெப்பக்குளம். திருச்சி.



அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

"ராமய்யா"

ஜூலை மாதம் **24**ம் தேதியன்று ஸ்ரீமதி சுப்பலக்ஷ்மி அம்மாள் திருச்சி ரேடியோவில் பாடினார். அன்று விச்ராந்தியாக நாங்கள் ஸங்கீதம் கேட்கவேண்டுமென்று தீர்மானித்து உட்கார்ந்தும் அம்மாஞ்சி செய்த ரகளையால் அதிக சிரமம் ஏற்பட்டது. அம்மாஞ்சி மிகவும் ரஸிகன்; ஆனால் பொறுமையே கிடையாது. பாடகர் முதலில் தோடி வர்ணம் "எரா நாணப" என்றெடுத்தவுடன் "அட, கஷ்டகாலமே!" என்றான் அம்மாஞ்சி. சத்தம் போடாமல் இருக்கும்படி நான் சைகைசெய்ய அவன் ஓரே கத்தலாய் "என்னடா இது." சென்ற மாதத்திற்குள் இந்த அம்மாளின் கச்சேரி நான்கு கலியாணங்களில் கேட்டேன். ஒவ்வொன்றிலும் ஆரம்பம் இந்த வர்ணமே. எனக்கு மனப்பாடமாய்ப் போய்விட்டது. எந்த இடத்தில் பாடகர் புன்சிரிப்பு செய்வார், எந்த இடத்தில் என்ன நூதன சங்கதி போடுவார் என்றுகூட எனக்குத் தெரியும். இன்று ரேடியோவிலாவது புதிதாக ஏதாவது பாடுவாரோ என்று எண்ணினேன். அதுவும் வீணாயிற்று" என்றான். அதற்குப் பிறகு கச்சேரி முடியும் வரையில் அம்மாஞ்சியைக் கட்டிப் பிடிக்க முடியவில்லை. ஸ்ரீமதி சுப்பலக்ஷ்மி பாடிய ஒவ்வொரு டாட்டும் அவனுக்கு மனப்பாடம். அவர் பிடித்த பிடிகளும், பிர்க்காக்களும், சங்கதிகளும் அம்மாஞ்சி கூடவே பிடித்துக்காட்டினான். பிறகு "ஒளியே..." என்று தொடங்கும் விருத்தம் ராகமாலிகையாக எடுத்தவுடன் அம்மாஞ்சி உச்சிக்குடுமியைத் தட்டிக்கொண்டு ரேடியோ ஸங்கீதத்துடன் தன் ஸங்கீதத்தை ஐக்கியம் செய்துவிட்டான்.

கச்சேரி முடிந்தபிறகு அம்மாஞ்சி அகில இந்திய ரேடியோவைப்பற்றி மிகவும் வெறுப்புடன் பேசினான். "இந்தமாதிரி கான்ஸர்ட் புரோகிராம் ஆனால் மாத்திரம் என்ன? என்ன பாட்டுகள் பாடப்போகிறார் என்று முன்னே தெரிவிக்கவேண்டாமா? அப்படித் தெரிவித்திருந்தால் இவ்வளவு நேரம் நான் வீண்காலங் கழித்திருக்கமாட்டேனே. மிகவும் ஸுஸ்வர ஸங்கீதமாயிருந்தபோதிலும் கேட்ட உருப்படிகளையே திரும்பவும் நான்கு முறை அடுத்தாற்போல் கேட்பது வெகு சிரமமல்லவா? இந்த அகில இந்திய ரேடியோவில் பக்ஷபாதம்

அதிகம். நானும் பரீக்ஷையாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன். சிலருக்கு விதரணையாக நிகழ்ச்சிக்குறிப்பு போடுகிறார்கள். மற்றும் சிலருக்கு இல்லை. அவர்கள் பெயர்கள் மட்டுமே போதும் என்ற அபிப்பிராயப்போலும். செய்தால் ஒரே சீராக இருக்கவேண்டும், இல்லாவிடில் 'நேயர்களுக்கு' அதிருப்திதான்" என்றான்.

அம்மாஞ்சிக்கு திருச்சி ரேடியோ நிலையத்தின் மீது அபிமானம் அதிகம். ஏனென்றால் அந்நிலையத்தின் மூலமாக அவன் புதிய தமிழ் வார்த்தைகள் தெரிந்துகொண்டதல்லாது, அங்குள்ள சூத்திரதாரி பேசுவதைக்கேட்டு தானும் நல்ல தமிழ் உச்சரிப்பு கற்றுக்கொண்டதாகச் சொல்வான். உட்கார்ந்துகொண்டேயிருக்கும் அம்மாஞ்சி திடீரென்று 'செய்தி அறிக்கை' 'ஒலி பரப்பு' 'சொற்பொழிவு' 'இசைத்தட்டு' என்று முணுமுணுப்பான். என்னவென்றால் இதெல்லாம் தான் கற்றுக்கொண்ட புதிய வார்த்தைகள் என்பான். ஒரு நாள் 'இசை' என்னும் வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று என்னைக் கேட்டான். 'ஸங்கீதம்' என்றேன். ஓஹோ, என்று கத்தல் போட்டுச் சிரித்துவிட்டு 'இவ்வளவுதானா? 'இசைவாணி' 'இசை வேளாளர்' என்று கேட்டு என்னவோ வென்று இருந்துவிட்டேன். பிறகு ரேடியோவில் 'இசைத்தட்டு' என்று கேட்டதும் எனக்கு அசடு தட்டிற்று. இசை யென்றால் ஸங்கீதமோ? ஸரி. அப்பொழுது காவேரிக்கு 'இசையாறு' என்றும், அதன் வண்டலுக்கு 'இசை வண்டல்' என்றும் நான் இதோ பெயர் கொடுக்கிறேன். இனி இந்த சப்தங்கள் வழங்குக' என்று முடித்தான்.

திருச்சி ரேடியோ நிலையத்தின் மீது அபிமானம் இருந்தாலும் அம்மாஞ்சிக்கு குறைகள் எப்பொழுதும் இராமல் இருக்காது. இருபது வருஷத்திற்கு முன்னால் தான் சென்னையில் படித்துக்கொண்டிருந்தபோது கோக்லே ஹாலிலும் திருவல்லிக்கேணி சபையிலும் நடந்த கச்சேரிகள் இப்பொழுது நாசமானதிற்கு காரணம் ரேடியோவே என்பான். அக்காலத்து கச்சேரிகளில் வித்வான்கள் எதிரிலுட்கார்ந்து கேட்டவர்களுடைய முக லக்ஷணங்களையும், கோஷங்களையும் கவனித்துப் பாடியதால், நல்ல ஸங்கீதம் வழங்கியதாகவும், இப்பொழுது ரேடியோவில் வரும் ஸங்கீதம் அசடு தட்டுகிறது என்றும் சொல்லுவான்.

"கவனித்துப் பாரப்பா! சொந்த ஸாஹித்யம் என்று சொல்லிக்கொண்டு யார் வேண்டுமானாலும் ரேடியோவில் பாடிவிட்டு போய்விடுகிறார்கள். அந்தக் காலத்தில் இம்மாதிரி அதிகப்பிரஸங்கத்துக்கு ஸரியான மருந்து கொடுத்தனுப்புவோமே! ரேடியோவிலோ எவனாகட்டும் எவளாகட்டும் இஷ்டப்பிரகாரம். அபஸ்வரக் களஞ்சியமாய், ஸாஹித்ய பேதத்துடன், செய்யக்கூடாத ஸஞ்சாரத்துடன், நினைத்தவிடத்தில் ப்ருகாவும் சங்கதியும் போட்டு மேல் காந்தாரம் கடந்து மேல் தைவதம் வரையும் ஓடி, ஆடி, சாடிக் குதித்துப் பாடிவிடுகிறார்கள். முகத்தைச் சுளிக்கக்கூட எதிரே ஆள் கிடையாது. என்ன செய்வது?' என்று முடித்தான். அதற்கு நான் "ரேடியோ நிலையத்தில் உள்ள உத்தியோகஸ்தர்கள் பொறுக்கத்தகாத பிழையிருந்தால் சொல்லிக் காட்டமாட்டார்களோ" என்று கேட்க "குட்டிச்சுவர்தான். அங்கிருப்பவர்களுக்கு சுஸ்வரம் அபஸ்வரம் எல்லாம் கதம்பமாகக் கேட்டு காதுகளுக்குள்ள சூக்ஷ்மமே போய்விட்டது. காபி ஓட்டலிலேயே பத்து வருஷம் சாப்பிட்டு வந்தவனுக்கு நாக்கில் ருசி ரூசை யென்பதே போய்விடாதா? அது மாதிரிதான் நிலைய உத்தியோகஸ்தர்களுக்கு விமோசனமே கிடையாது" என்று பதில் சொன்னான்.

அம்மாஞ்சிக்கு கர்நாடக ஸங்கீதங்களில் தெளிவான ஞானமுண்டு. காலஞ்சென்ற வீணை தனம் அம்மாள் வீட்டில் வெள்ளிக்கிழமை ஒன்று தவறாது அவன் வெகு மரியாதையுடனும் ஆனந்தத்துடனும் ஏராளமாகக் கேட்டிருக்கிறான். ஆதலால் அவனுக்கு திருப்தியளிக்கக்கூடியது மிகவும் உயர்ந்ததாகவே இருக்கவேண்டும். பாடகர் யாராகட்டும் ராக ஸஞ்சாரங்களில் நவீன கற்பனையாகப் பாவித்து ஏதாவது புதிய ஸஞ்சாரம் செய்தால், அம்மாஞ்சி காதைப் பொத்திக் கொண்டு "சிவ, சிவ! அபத்த ஸஞ்சாரம்" என்று கடினமாகக் கத்துவான். ஒரு நாள் நான் அத்தகைய ஒரு ஸமயத்தில் "நீ என்ன, எப்போதும் இம்மாதிரி ஒரு சிறிய தப்புகூட இருக்கக்கூடாது என்று எதிர்பார்த்தால், ஒருவரும் உன்னை திருப்தி செய்யமுடியாது. யானைக்கும் அடிசறுக்கும் அல்லவா?" என்று கேட்டதற்கு அவன் சொன்ன பதில் "என் கருத்து அதுவல்ல. தன்னை மீறி அபஸ்வரம் பேசினால் நான் குற்றம் சாட்டமாட்டேன்.

நன்றாய்த் தெரிந்தும் அதிகப் பிரஸங்கம் செய்தால் எனக்கு கோபம் வரும். அத்தகைய சஞ்சாரங்கள் கர்நாடக ஸங்கீதத்திற்கே தீங்கு விளைவிக்கும். ஒரு பாடகன் பாடுவான். அந்தப் புலியைப் பார்த்து ஒரு பூனை சூடிக்கொள்ளும். பிறகு இப்படியே பெருகிப்போகும். ஒரு சிறிய அபத்த ஸஞ்சாரம் ஒரு சுத்தமான ராகத்தையே உருக்குலைத்துவிடும். 'தெள்ளிய ஆலின் சிறுமீன் சிறு விதை' என்ற பாட்டு நீ படித்திருப்பாய். அந்த மாதிரி ஆய்விடும்.'' இதைக் கேட்டு நான் சிரித்துவிட்டு என்ன உபமானம் என்றேன்! அப்போது முதல் என் வீட்டில் இத்தகைய குதர்க்க உபமானத்துக்கு ''அம்மாஞ்சி உபமானம்'' என்போம்.

மதராஸ் நிலையமும் திருச்சி நிலையமும் சில மாதங்களாக நடந்துகொள்ளும் ரீதியை கவனித்து அம்மாஞ்சி அதற்கு ''பாகிஸ்தான்'' என்று பெயரிட்டான். இந்த இரண்டு நிலையங்களும் தங்களுடைய எல்லைகளைப் பிரித்துக் கொண்டு பிரபலமான வித்வான்கள் சிலர் தவிர, மற்றவர் எல்லோரும் மதராஸுக்கோ அல்லது திருச்சிக்கோ இரண்டில் ஏதாவது ஒரு நிலையத்துக்கே ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்று ஏற்படுத்தியிருக்கிறார்களாம். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள சில ஸங்கீத வித்வான்களுக்குக் கொஞ்சம் அசௌகர்யமாம். என்னவென்றால் பாகிஸ்தானுக்கு முன் அவர்கள் வருஷத்துக்கு இரண்டு முறையாவது மதராஸுக்குப் போக பிரமேயம் ஏற்பட்டது. அப்பொழுது மூக்குப்பொடி, பெருங்காயம், பிடில், தந்தி முதலிய வஸ்துக்கள் வாங்கிக்கொண்டு ஸங்கீத உலகில் பிரபலமாக இருக்கும் சில மைலாப்பூர் கனவான்களையும் பார்த்துவிட்டு வர ஸந்தர்ப்பம் வாய்த்ததாம். இப்பொழுது இது இல்லாமல் போயிற்றாம். அம்மாஞ்சி மிகவும் கெட்டிக்காரன். அவனுடைய யோசனைகளெல்லாம் வெகு விநோதம்.

இச்சமயம் அம்மாஞ்சி என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு வெற்றிலைசீவல் போட்டுக் கொண்டிருக்கிறான். எழுதியதை வாசித்துக் காண்பித்தேன். சிரித்துவிட்டு, ''என் அனுபவம், என் மூளை — உன் ஸாஹித்யம். நடக்கட்டும். இனி இம்மாதிரியே நான் சொல்வதையெல்லாம் சரியாக நாள்தோறும் கவனித்துக் கொண்டு வந்தால் இன்னும் மேன்மேலும் நீ எழுதலாம். உன்னுடைய கல்வி விருத்தியாகும்'' என்று மமதையுடன் சொன்னான். அதுவும் வாஸ்தவம்தான். அப்படித்தான் செய்வோம் என்று தீர்மானித்திருக்கிறேன்.

அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதை

சமீபத்தில் வைசிராய் நிர்வாகசபை விஸ்தரிக்கப் பட்டதல்லவா? அதில் டாக்டர் அம்பேட்கர் அவர்களுக்கு ஒரு ஸ்தானம் கிடைக்கலாம் என்ற வதந்தியை யாரோ கிளப்பிவிட்டார்கள். அதை நம்பி விட்டார் டாக்டர். பேர்வழிகள் ஜாப்தா வந்தது. அதில் டாக்டர் பெயரைக் காணோம். கண்களைக் கசக்கிக்கொண்டு மறுபடி ஜாப்தாவைக் கவனித்தார். ஒருகால் ஞாபகமறதியாக சர்க்கார் பெயரை விட்டிருப்பார்களோ என்றுகூட அம்பேட்கர் யோசனை செய்திருக்கலாம். தன் பெயர் ஜாப்தாவில் இல்லாதிருப்பது ஞாபகமறதியாக இருக்காது என்ற நிச்சயத்தைக் கொண்டார். வந்தது அய்யா கோபம். ''இப்படி சர்க்கார் தாழ்த்தப்பட்டமக்களை புறக்கணிக்கலாமா? அமெரி துரைக்கு நாக்கு ஒண்ணு, இரண்டா? என்னபண்ணுவேன் தெரியுமா?'' என்று கர்ஜிக்கிறார்.

பாவம்! நமது பூர்ண அனுதாபம் அம்பேட்கருக்கு! அவரைத் தூக்கிவைத்தது சர்க்கார். சூத்திரக்காரன் கயிற்றை விட்டான். பொம்மை கிழே விழுந்தது. அப்பொழுது அம்பேட்கர் சர்க்காரின் கையாளாக இருந்து நாட்டின் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை கொடுத்தார். வட்டமேஜை மகாநாட்டுக்கு தாழ்த்தப் பட்டவர்கள் பிரதிநிதி என்ற பட்டம் சூட்டப்பட்டு சீமைக்கு அனுப்பப்பட்டார். சர்க்கார் சொல்படி ஒரு இம்மி பிசகாமல் நடந்தார். இப்பொழுது மகாத்மா காந்தி ஒருவரே தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மை பிரதிநிதி என்று சர்க்காராலேயே உணரப்பட்டு விட்டதல்லவா? என் கவனிப்பார்கள் அம்பேட்கரை இனி? அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதை ஆகிவிட்டது அம்பேட்கரின் கதி. போலி தலைவர்களே, உஷார்! காங்கிரஸ் ஒன்றே தாழ்த்தப்பட்ட மக்களின் நலனை கவனிக்கும் புனித ஸ்தாபனம்!

11-ம் பக்கம் தொடர்ச்சி.

செல்வதில்லை. 'சுதந்திரம்' என்றால் அரசியல் அதிகாரம் என்ற பொருள் அவர் மனதிலுதிப்பதில்லை. அறிவீனம், கோழைத்தனம், சுயநலம், மூட நம்பிக்கை, காலத்திற்கொவ்வாத பழக்கவழக்கங்கள் இவைகளினின்றும் மீளுவதுதான் சுதந்திரம். ஆத்மீக வளர்ச்சி, தியாகம், சுத்தம், அடக்கம் இவைகளை எய்துவதுதான் சுதந்திரம். மனிதனின் தெய்விக சக்தியை வெளிப்படுத்துவதுதான் டாகூரின் அரசியல்.

சொத்துரிமையைப் பற்றி டாகூருக்குத் தீவிரமான அபிப்ராயமுண்டு. தனிப்பட்டவர்கள் சொத்துக்களை வைத்துக்கொள்வது தனிப்பட்டவர்களின் சுதந்திரத்திற்கும் வளர்ச்சிக்கும் இடம் தந்து அதன் மூலம் சமூக நன்மை ஏற்படலாமென்றாலும் கூட ரஷ்யாவிலிருப்பது போன்ற பொதுவுடமை எப்பொழுதும் விரும்பத் தக்கதுதான் என்று பல தடவை கூறியிருக்கிறார்.

மாஸ்கோவிலிருக்கும் ஆசிரியர் பெட்ரோவ் என்பவருக்கு ருஷியாவில் நடந்து அடங்கிய கலகம் சம்பந்தமாக பின்வருமாறு தந்தி கொடுத்திருக்கிறார்.

"சொத்துரிமை அலைகளைத் தனிப்பட்டவர்களிடமிருந்து பொதுஜன சமூகத்திற்குத் திருப்பியதுதான் தங்கள் வெற்றிக்குக் காரணம்."

ரவீந்திரநாத் டாகூர் வெகு சிறு வயதிலிருந்தே பத்திரிகைத் தொழில் ஈடுபட்டார். தம் அபிப்ராயங்களை தைரியமாக வெளியிடும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். அக்காலங்களில் அவர் பிரசுரித்த பத்திரிகைகள் இப்பொழுது தற்காலத்திய அச்சுச் சட்டங்களிடையே ஒரு நாள் கூட நடக்காது. இம்மாதிரி பல பத்திரிகைகள் அவர் நடத்திவந்தார். பத்திரிகையை எடுத்தால் ஆரம்பம் முதல் கடைசி வரையில் வாசகர்கள் சலிக்காமல் வாசிக்கக் கூடிய விஷயத்தை அதில் நிரப்பக்கூடிய அபூர்வ சக்தி வாய்ந்தவர் அவரொருவரே என்று நிச்சயமாகக் கூறலாம்.

ஆனால் ஓவியம் அவரை வெகு நாட்கள் பின்னரே பிடித்துக்கொண்டது. சுமார் 70 வயது ஆன சமயம்தான் அவர் சித்திரக் கலையில் ஈடுபட்டது. அவரது ஓவியம் இந்நாட்டுக் கலையுமல்ல, அல்லது எந்த வெளி நாட்டுக் கலையுமல்ல. அது ஒரு கதையையோ அல்லது நிகழ்ச்சியையோ சொல்வதுமில்லை. சாதாரணமாகப் பார்ப்பதற்கு ரஸிக்கக்கூடியதாகவுமிருக்காது. ஆயினும் கோடுகளும் வர்ணங்களும் இவரது ஓவியத்தில் உயர்ந்த தத்வங்களை வெளியிடுகின்றன. ஒரு பாஷையின் சொற்களஞ்சியமும் இலக்கியத் திறமையும் கூட இவ்வேலையைத் திறம்பட செய்ய இயலாது.

கவி ரவீந்திரநாதரின் வாழ்க்கையொளியின் விளைவாக ஏற்பட்ட இரண்டு ஸ்தாபனங்கள் சாந்திநிகேதனமும் ஸ்ரீ நிகேதனமும். இந்திய மக்கள் இன்புற்று வாழ அவர் வைத்துப்போன ஐச்வர்யம். சாந்தியும், ஸ்ரீயும் சிறப்புற்றோங்குக.

19932
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை 600 008

Edited and Published by N. R. Ramanujam, B.A., and Printed at the Sri Venkateswar Power Printing Works, Kumbakonam.

Regd. No. M. CAUVERI.

தந்தி விலாசம் :—"கோகுல்"
போன் நெ. 55.

ESTD. 1909
Branch :- MANNARGUDI.

கும்பகோணம்

டி. எஸ். ஆர்.

கம்பெனியின்

சந்தனாதித்தைலம்,
கோகுல் வாசனைப் பாக்குத் தூள்,
அரைக்கீரை விதைத்தைலம்,
கோகுல் வத்தி தினுசுகள்,
இவைகளை உபயோகியுங்கள்.

தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும்,
மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

"கோகுல்"

கூந்தல் தைலம்

☞ கோகுல் கூந்தல் தைலம் பாட்டில் ஒன்று வாங்கினால் 28x20 ஸைஸ் ஆலிலை கிருஷ்ணன் படம் (ஜெர்மன்) பிரிண்ட் ஒன்று இனாமாகக் கொடுக்கப்படும். கேட்லாக்குக்கு எழுதவும்.

எங்கள் ஆலிலைகிருஷ்ணன் டிரேட் மார்க்கை கவனித்து வாங்குங்கள்

Can be had of:—

Messrs. GANGA BROS.,

Pycrofts Road, Triplicane, Madras.

Cover Page Printed at Dharmarao Printing Works, 14, Jones Street Mannady, Madras.